உ

பன்னிரு திருமுறைத் திரட்டும் சைவத் தோத்திர மஞ்சரியும்

திருமலைராயன்பட்டினம்

திரு. கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

மணிவிழா மலர்

1—3—1963



ஸ்ரீ சிவகாமியம்மை சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான்

உ

பன்னிரு திருமுறைத் திரட்டும் சைவத் தோத்திர மஞ்சரியும்

திருமலைராயன்பட்டினம் ஸ்ரீ அபிராமியம்பாள் சமேத
ஸ்ரீ இராஜசோளீசுவரர் தேவஸ்தான தர்மகர்த்தரும்
மிராசுதாரருமான

திரு. கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

மணி விழா மலர்

தொகுத்தவர்
'சித்தாந்தவித்தகர்'

திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

திருமலைராயன்பட்டினம்

திரு. கு. சா. சு. நடேச முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

கிருது ஆண்டு மாசித்திங்கள் 17-ம் நாள்

1-3-1963

பதிப்பு—1963

அமுர்தா அச்சகம், சென்னை - 24

பொருளடக்கம்

சைவத் தோத்திர மஞ்சரி

உ

சிவமயம்

பதிப்புரை

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.

அநாதி மலமுத்தர் சிவபெருமான். அநாதி மலபெத்தர் உயிர்த்தொகை. இவை உய்வான் வேண்டித் தனக்கென ஒரு உருவம், ஒரு நாமம், ஒரு குணம், ஒரு இடம், ஒரு செயல் ஆகிய இவை ஒன்றும் இல்லாத சிவபெருமான் ஒரு வடிவத்தையும் ஒரு பெயரையும் மேற்கொண்டு பல இடங்களில் உருவத் திருமேனியுடன் எழுந்தருளியிருப்பது கண்கூடு. இத்தகைய பல இடங்களில் ஒன்று திருமலைராயன்பட்டினம். இங்கு எழுந்தருளியிருப்பவர் ஸ்ரீஅபிராமியம்பாள் சமேத ஸ்ரீஇராஜசோளீசுவரப் பெருமான் ஆவர்.

இவ்வாலயத்தில் 1957ம் ஆண்டில் நடைபெற்ற கந்த சஷ்டிப் பெருவிழா நாட்களில் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கு வந்து கந்தபுராண விரிவுரையை நிகழ்த்தி எங்களை மகிழ்வித்தவர் எங்கள் நண்பரும் சைவமெய்யன்பருமான "சித்தாந்த வித்தகர்" கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம் செட்டியார் ஆவார். அவர் தமது விரிவுரைகளில் பல நல்ல கருத்துக்களையெல்லாம் வாரி வழங்கினர். அது காலை நாங்களும் அவரைக் கொண்டு ஒரு சிறுநூல் அனைவருக்கும் எல்லாக் காலத்தும், எல்லா வகையாலும் பயன்படுமாறு எழுதி அன்பர்களுக்கு அச்சிட்டு வழங்க

எண்ணினேம். அவ்வெண்ணம் உருவாகிப் பயன் அளிக்க இத்துணை காலம் கடந்தது. எனினும், அது ஒரு நல்ல வாய்ப்பை இப்போது தந்துதவியது.

திருமலைராயன்பட்டினம் ஸ்ரீஅபிராமியம்பாள் சமேத ஸ்ரீஇராஜசோளீசுவரர் தேவஸ்தான தர்மகர்த்தரும், மிராசு தாரரும், எனது அருமைத் தமையனருமாகிய திருவாளர்: கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்களது அறுப தாம் ஆண்டு நிறைவெய்துங்காலை அவர்கள் மணிவிழா மலராக இந்நூல் வெளிவர நேர்ந்தது இறைவன் திரு வருளே என்பேன். இதனை அன்பர்கள் பெற்றுப் பக்தி சிரத்தையுடன் படனஞ் செய்து எல்லா நலன்களையும் இறைவன் திருவருளால் பெற்றுய்வார்களாக!

இனி, இம்மணிவிழா மலரைத் தொகுத்து உதவிய கயப்பாக்கம். திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கட்கும், இதற்கு அணிந்துரைகள் தந்து இம்மலரை அணி செய்த அன்பர்கட்கும், உரிய காலத்தில் இதனை அழகுற அச்சிட் டுத்தந்த அமுர்தா அச்சகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வாழ்க சைவம்! வாழ்க சீரடியாரெல்லாம்!!

தி. பட்டினம்,
28—2 63

இங்ஙனம்:
கு. சா. சு. நடேசமுதலியார்

உ
சிவமயம்

முகவுரை

மண்ணுல குத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

—கச்சியப்ப சிவாசாரியார்

கலியுக வரதன் கந்தப் பெருமான். அவன் விரத நாட்களுள் முக்கியமானது ஐப்பசி மாத வளர்பிறைச் சஷ்டித் திருநாளாகும். அந்நாளில் தான் முருகப் பெருமான் சூரபன்மனைச் சம்மரித்தான் என்று கந்தபுராணம் பேசும். இத்தகைய தெய்வீகமான கந்தபுராணத்தைக் கந்தர் சஷ்டி திருநாட்களில் ஒவ்வோராண்டிலும் படனம் செய்வது அடியேன் நியமம். அவ்வாறே சென்ற 1957–ம் ஆண்டிலும் திருமலைராயன் பட்டினத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ இராஜசோளீசுவரர் தேவஸ்தானத்திலுள்ள கந்தப் பெருமான் திருமுன் கந்தபுராணத்தை ஒருவாறு விரிவுரையாற்றினேன். அதுகாலை, மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தர்கள் அனைவரும் அடியேனைப் பெரிதும் உபசரித்துப் பாராட்டினர். அவ்விரிவுரைகளில் பல நல்ல கருத்துக்களையும் தெரிவிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. அவற்றையெல்லாம் ஒன்று

சேர்த்து ஒரு சிறு நூலாக எழுதித் தரவேண்டு மென்று அன்பர்கள் விரும்பினர். அவர்களுள் மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தர்களுள் ஒருவரும், மிராசுதாரரும், சைவ மெய் யன்பரும், பல நற்குண நற்செயல்களையுடையவரும், தர்ம சிந்தனை யுடையவரும் "யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற குறிக்கோளை உடையவருமான உயர் திருவாளர் கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் என்பவர் ஆவார்கள்.

ஒரு நூல் எழுதும் தகுதி அடியேனிடம் ஒரு சிறிதும் இல்லை என்பதை யுணர்ந்திருந்தும், ஆசை வெட்கமறியாது என்ற பழமொழிக் கிணங்க இதனை எழுதத் துணிந்தேன். இது தற்போது எனதருமை நண்பர் உயர் திரு. கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மணிவிழா மலராக வெளி வருகிறது இறைவன் திருவருட் சம்மதம் போலும். இம் மலரில் பன்னிரு திருமுறைகளிலுள்ள அற்புதத் தேவாரப் பதிகங்களையும், ஏனைய அரிய கருத்துக்கள் நிறைந்த திருப் பதிகங்களையும் பதிக வரலாறுகளுடன் சேர்த்து வெளியிட் டுள்ளேன். அன்பர்கள் பெற்றுப் படித்துப் பயனடைவார் களாக! இத் தொகுப்பை அடியேன் எழுதிச் சேர்க்க எண் ணிய காலத்து எனக்கு உதவியாயிருந்து ஆலோசனை கூறி இம் மலர் நறுமணம் வீசும்படிச் செய்தவர், சிவபூசா துரந் தரரும், எனதாப்த நண்பரும், சைவ மெய்யன்பருமான மஞ் சக்கொல்லை திரு. இராம. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கள் ஆவார்கள். இவர்களுக்கும், இச்சிறுநூலுக்கு அணிந்துரை உதவியிதனை அணிசெய்த பேரன்பர்களுக்கும், உரிய காலத் தில் அழகுற அச்சிட்டுக் கொடுத்த சென்னை அமுர்தா அச்சு கூடத்தாருக்கும், பிளாக்குகள் கொடுத்து உதவிய திரு. கா. நடேச முதலியார் அவர்கட்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்க முதலியாரவர்கள்! வாழ்க சைவம்!! வாழ்க சீரடியாரெல்லாம்!!!

மு. ஐ. பகதூர் தெரு
சென்னை-5
28-2-63

இங்ஙனம்:
கயப்பாக்கம். சோமசுந்தரம்

சிவமயம்

மணிவிழாத் தலைவர்

உயர்திரு. கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார்

அவர்கள் வாழ்க்கை வரலாறு

திரு. கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சுபகிருது ஆண்டு மாசி மாதம் 21வ (4-3-1903) புதன்கிழமை பரணி நக்ஷத்திரத்தில் திருமலைராயன் பட்டினத்தில் செங்குந்தர் மரபில் மிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்த திரு. கு. சு. சுவாமிநாத முதலியாருக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் திருமதி கமலம்மாளுக்கும் இரண்டாவது மகனாகத் தோன்றினர். இவர் உடன் பிறந்தவர்கள் இரு சகோதரிகளும் ஒரு சகோதரருமாவார்கள். (இவர் திரு. கு. சா. சு. நடேச முதலியார் அவர்கள்.)

இவ் விழாத் தலைவர் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தம் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கத் தொடங்கித் தமிழில் கற்கவேண்டிய முக்கியமான நூல்களைக் கற்று முடித்தார்கள்.

திருமணத்துக்கு உரிய பருவத்தில் இவர் பெற்றோர் இவருக்குத் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். இவருக்குத் தற்போது இரண்டு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் இறைவன் திருவருளால் ஏற்பட்டு உள்ளன.

இவர் இளம் வயது தொடங்கியே ஆண்டவனிடத்துப் பக்தியும், அடியார்களிடத்து விசுவாசமும் உடையவர்கள்.

இவர்தம் வாழ்நாட்களில் பல சிவத்தலங்கள் தோறும் யாத்திரை செய்தவர்கள். சிறப்பாக ஆண்டுதோறும் திருச் செந்தூருக்குத் தவறுமல் சென்று செந்திலாண்டவனை வழி படுவதை நியமமாகக் கொண்டவர்கள். அடிக்கடி வைத் தீசுவரன் கோயிலுக்கும், பழனிக்கும் திருக்கடவூருக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து வருவதும் இவர் நியமம். தினந்தோறும் தேவார திருவாசகம் முதலிய அருள் நூல் களையும், சிறப்பாகத் திருமுருகாற்றுப் படையையும், கந்தர் கலிவெண்பாவையும் பக்தி சிரத்தையுடன் படனம் செய்ப வர்கள். வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும், அடியவரை யும் விரும்பி உபசரிப்பவர். கற்றோர்களை ஆதரிக்கும் நல் லெண்ணம் உடையவர். நல்லொழுக்கமுடையவர்கள்.

இவர் திருமலைராயன் பட்டினத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ அபிராமியம்பாள் சமேத ஸ்ரீ இராஜ சோளீசுவரப் பெருமான் தேவஸ்தானத்திற்குப் பல ஆண்டுகளாகத் தர்மகர்த்தர்களுள் ஒருவராக விளங்கி வருபவர். இவ்வாலயத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி மண்டபத் திருப்பணி இவர்தம் சொந்தச் செலவில் செய்யப்பட்டது. கல்வியின் அவசியத்தை உத்தேசித்துப் பிள்ளைகள் அனைவ ரும் கற்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தம் சொந் தச் செலவில் ஒரு "ஆரம்பப்பள்ளியை" ஸ்ரீ அபிராமியம் பாள் கீழை வீதியில் நிறுவியுள்ளார்கள்.

இவர் சென்னை, பனையகாட் கம்பெனியில் (லிமிடெட்) பங்குதாரராகச் சேர்ந்து பல்லாண்டுகளாகச் சென்னை, இலங்கை இன்னும் பிறவிடங்களிலும் பிரபலமாக வியா பாரம் செய்து வருகிறார். இப்பட்டினத்தில் தக்க நில புலன்களுடன் ஒரு சிறந்த மிராசுதாரராகவும் விளங்கி வருகிறார்.

இவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வருவதால் இவர்தம் அடிச்சுவட்டை மற்றையோரும் பின்பற்றி நல் வாழ்க்கையில் ஈடுபட்டு வாழவேண்டு மென்றெண்ணித்தான் இவர் வர லாற்றை இங்கு எழுதியுள்ளேன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

கற்கக் கசடறக் கற்பவை—கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஒழுக்கம் விழுப்பந் தரலால்—ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

என்பது முதலான திருக்குறள்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர்.

இவர் இம்மையில் பெறவேண்டிய. எல்லாவிதமான நலங்களையும் பெற்று, நோயின்றிப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் செந்திலாண்டவன் திருவருள் புரிவாராக! வாழ்க முதலியாரவர்கள்! வாழ்க அவர்தம் மனைவி மக்கள்!! வாழ்க சீரடியா ரெல்லாம்!!

இங்ஙனம்:

மஞ்சட்கொல்லை
1—3—63

இராம. சம்பந்தமூர்த்தி
மஞ்சட்கொல்லை

சைவத் தந்தையார்

உயர்திரு—ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A. L. T.

(ஓய்வு பெற்ற முன்னுள் மாவட்டக் கல்வி அதிகாரி)

வழங்கிய வாழ்த்துரை

திருமலைராயன்பட்டினத்தில் நல்வாழ்வு நடத்தும் சைவத் திருவாளர் கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கட்கு, 1-3-63ல் மணிவிழா நிகழ இருப்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகின்றேன். இவர்கள் ஒழுக்கத்திலும், சிவ பக்தி அடியார் பக்தியிலும் சிறந்து விளங்குபவர்கள் என்றும், வள்ளன்மைப் பண்புடையவர் என்றும் தக்கார் வாயிலாக அறிந்துள்ளேன். அவர்களைப் பாராட்டுகிறேன்.

நம் நாட்டில் இல்லற வாழ்வு நடத்தும் தலைவனுக்கு அறுபதாம் ஆண்டு நிரம்பியபின் நிகழும் சுபச்சடங்கு மணிவிழா எனப்படுகின்றது. பண்டைக் காலத்தில் மனிதன் பூரண ஆயுளின் எல்லை நூற்றிருபது ஆண்டு என்னும் கொள்கையிருந்தது. அதன்படி நோக்குங்கால், அறுபதாண்டு நிறைவு மனித ஆயுளில் முற்பகுதியின் பூர்த்தியைக் குறிக்கின்றது, அச்சமயத்தில் அப்பாதியை எம் முறையில் பயன்படுத்தினோம் என்று அமைதியாய் ஆராய்ந்து பார்ப்பதும், இனி எஞ்சி நிற்கும் பகுதியில் எக்கடமைகளைச் செய்யவேண்டும் என்று நன்கு கருதித் திட்டமிட்டு வாழ்க்கை நடத்த உறுதி கொள்வதும் செய்யத்தக்கனவாகும். இல்லறம் நல்லறமாய் நடைபெற்று வருகையில் அது படிமுறையே துறவறமாக முற்றிப் பழுத்துவரும் பான்மையுடையது. “மங்கையோடிருந்தே யோகு செய்யும்” மகாதேவன் பெருமை, நன்மனிதன்

வாழ்க்கையிற் பதிந்து அவனை மேல்நிலைக்குச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்த மகோன்னத குறிக்கோளாய்த் திகழ்தற் குரியது.

இல்வாழ்வான் தன் அறுபதாம் ஆண்டு எல்லைக்குள் குடும்பப் பொறுப்பைத் தனது நன்மக்களிடம் ஒப்படைத்து விட்டு இறைவன் திருவடிநாட்டத்தை நாள்தோறும் பெருக்கி வரவேண்டும். அதனோடு தன் அறிவு, ஆற்றல், அன்பு, பொருள், பொழுது முதலிய வசதிகளில் பெரும் பகுதியை, உலகில் நல்லொழுக்கம் தெய்வ பக்தி, அடியார் பக்தி. தாய்மொழி, தாய்நாடு, உலகம் இவற்றில் உண்மையான முன்னேற்றம், ஆகிய பொதுநலங்கள் பெருகுதற்காக அர்ப்பணித்து ஆர்வமுடன் தொண்டாற்றி வரவேண்டும். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்"த் திகழ வேண்டும். மணிவிழாக் கொள்ளும் நல்லோரும் இந்த மாண்பார்ந்த குறிக்கோளைக் கொண்டு பற்றற்றான் பற்றி னைப் பற்றித் தியாக வாழ்வு நடத்திவருவர் என்று எதிர்பார்ப்பர் பெரியோர்.

சைவச் செம்மலாய் விளங்கும் இம்மணிவிழாத் தலைவர் இவ்விழாவில் சைவ அநுபூதிமான்களாகிய ஆன்றோர் தம் அருள் வாக்குக்களாகும் இதழ்களைக் கொண்ட மலர் ஒன்றை வெளியிட்டு வழங்குவது சாலப்பொருத்தமே.

இம்மலரைத் தொகுத்தவர் சிறந்த சைவ அறிஞரும் சைவ சீலருமாகிய "சித்தாந்த வித்தகர்" கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள். பன்னிரு திருமுறைப் படனத்தைத் தம் பேச்சும் மூச்சுமாகக் கொண்டு சைவ உலகிற்கு அருந் தொண்டாற்றிய பெரியார் சிவத்திரு. கயப்பாக்கம். சதாசிவ செட்டியார் B. A. அவர்களின் தமையனார் அருமைப் புதல்வர். அன்னாரின் அடிச் சுவட்டையே பின் பற்றிச் சிவத்தொண்டாற்றிவரு பவர்கள். இதில் சுமார் ஆயிரம் பாடல்கள் அடங்கியுள் ளன. இவை சிவபெருமானையும் பார்வதிதேவியாரையும்,

விநாயகரையும், முருகவேளையும் பற்றி ஆன்றோர் பாடியருளியவைகளாகும். இவற்றிற்கு ஓர் அநுபந்தமாக ஆலய வழிபாடு என்னும் பயன்மிக்க கட்டுரை ஒன்றும் சேர்க்கப் பட்டுள்ளது.

தேவாரத்தில் உள்ள அற்புதத் திருப்பதிகங்களிலிருந்து திருப்பாசுரங்களைத் தொகுத்திருக்கும் பகுதிகளில் எல்லாம் அவ்வவ்வற்புத நிகழ்ச்சி வரலாறுகள் குறிக்கப் பட்டுள்ளன.

இந்த அருள்ஞானக் கருவூலத்தை மணிவிழாவில் அன்பர் பலர்க்கும் வழங்குவது பெரிதும் போற்றற்குரியதோர் சிவதருமமாகும். "அறம் பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயன்களுள் முதல் இல்லை; கடையும் வேண்டாம். வாழ்க்கை வாணிபம் நடத்தி இடையிலுள்ள பொருளும் இன்பமும் மட்டும் அடையப்போகிறோம் என்றுஎண்ணுவோர் இக்காலத்தில் பலர் உளர்" என்று ஒரு பெரும் புலவர் பல ஆண்டுகட்குமுன் ஒரு பிரசங்கத்தில் நயமுறச் சொன்னார்.

அது இன்றும் உண்மையாகத்தான் இருக்கிறது. இந்த அஞ்ஞானம் அகலப் பல துறைகளிலும் அறிவும் அன்பும் செறிந்த தொண்டினை அன்பர்கள்தனித்தும் ஒன்று சேர்ந்தும் திறம்படப் பெரிய அளவில் அறவுணர்ச்சியையும் தெய்வ நாட்டத்தையும் வளர்க்க முற்படுதல் மிகவும் அவசியம். வாடிய பயிருக்குத் தண்ணீரை வேரில் ஊற்றுது இலைமேல் தெளிப்பதுபோலுள்ளது—தெய்வ நினைப்பைக் கைவிட்டுச் சமுதாய சேவை செய்வது என்று சுவாமி விவேகானந்தர் ஒரு சமயத்தில் கூறியுள்ளதைச் சமுதாய நலங்கருதுவோர் உய்த்துணர்தல் அவசியம்.

மணிவிழாக் கொள்ளும் மாண்பார்ந்த சைவசோதரர் சமரச சைவ சன்மார்க்க ஒளியை, இருள் சூழ்ந்து எளியோர் வாழிடங்களிலும், தேவையான பிற இடங்களிலும்

பரப்பும் ஞானத் தொண்டினைத் திருவருள் துணை கொண்டு ஏற்று வெற்றியுடன் நிகழ்த்திவர வேண்டுமென்று விழைகின்றேன்.

பொன்றாத மங்களத்தோடு என்றும் உள்ள இறைவரும், "தாய் தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவரும்" ஆகிய உமையொருபாகமுடைய பெருமான் அருளால் இம்மணிவிழாத் தலைவர் சைவப் பாதுகாவலராய்ப் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலத்துடனும் இனிது வாழ்வாராக!

இங்ஙனம்

ச. சச்சிதானந்தம் பிள்ளை

தருமை ஆதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி
உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B.A., L.T.,
அன்புடன் அளித்த

அணிந்துரை

திருஞானசம்பந்தர் திருவடி போற்றி

உயர் சைவப் பெருந்திருவாளர் கு. சா. கூ. சுப்பிரமணிய முதலியார் அவர்களது மணிவிழா மலராக வெளிவரும் 'பன்னிருத் திருமுறை திரட்டும், சைவத் தோத்திர மஞ்சரியும்' என்னும் அரிய பெரிய தொகை நூலின் ஒரு பாகத்தைக் கண்டு அறிந்து மகிழும் வாய்ப்பைப் பெற்றேன். அதற்கு அணிந்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைவதோடு பெருமிதமுங் கொள்கின்றேன்.

இத் தொகை நூல் "கண்ட பெருமந்திரம்'' எனப் போற்றப் பெறும் அருண்மொழிகளைப் பாராயணஞ் செய்து பயன் பெறுதற்கு ஏற்ற முறையிற் கொண்டு திகழ்கின்றது. நாயன்மார்களுடைய வரலாற்றுச் சுருக்கமும் திருப்பதிகங்களுடைய வரலாறுகளும் ஆங்காங்கு வரிசைப்பட இருத்தல் ஓதுவோர்க்கு மெய்யன்பு அரும்பித் திருவருட் பேற்றினை எய்துவித்தற்குச் சிறந்த கருவியாக அமையும். திருமுறைகளின் முதற்பெருந் திருப்பதிகம், திருநீற்றுத் திருப்பதிகம் கோளறுபதிகம் முதலாக உள்ள அனுபவப் பெருமந்திரங்களை முழுவடிவில் பெற்றுள்ளமை அவற்றை மட்டும் நாடோறும் நியதமாகப் பாராயணஞ் செய்து உரிய பயன்களைப் பெறுதற்கு உறுதுணையாக நின்று உதவும். இங்ஙனம் இத் தொகை நூலின் தனிப்பெருஞ் சிறப்பை எடுத்துக் கூறப்

புகின் விரியும். சுருக்கமாகக் கூறின், உயர்சைவப் பெருந் திரு. கயப்பாக்கம். சதாசிவ செட்டியார் B.A., அவர்களால் தொகுக்கப் பெற்ற "திராவிட வேதத் திரட்டும் தலமான் மியச் சுருக்கமும்" என்னும் நூலின் பின் வெளிவந்த இது போன்ற தொகை நூல்களுள் இது தலைசிறந்தது. இதனைத் தொகுக்கும் பெரியார், சித்தாந்தவித்தகர், உயர்சைவத்திரு. கயப்பாக்கம். சோமசுந்தரம் செட்டியார் அவர்கள். திருமுறைகளின் சற்சம்பிரதாயம் அறிந்தவர் எனக் கூறுதல் சாலும் எனக் கருதுகின்றேன்.

இப் பெறற்கரும் நன்னூலைத் தொகுப்போரும் தொகுப்பிக்கும் நிலைப்பட்ட மெய்யன்பின் செல்வரும் தெய்வச் சைவ நல்லுலகின் பாராட்டுக்கு உரியவர்கள். அவர்களும் அவர்களைச் சார்ந்தோரும்,'சார்வோரும் நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் திருவருளால் பொருளும் பொன்னும் போகமும் என்பவற்றோடு அருளும் அன்பும் அறனும் என்பவற்றையும் எளிதிற் பெற்றுத் தலைசிறந்து நிற்க என உலகெலாம் மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்குகின்றேன்.

காஞ்சிபுரம் }
16—2—1963 }

இங்ஙனம்,
சு. வச்சிரவேல் முதலியார்

உ

சிவமயம்

உயர்திரு. அ. உத்தண்டராமப்பிள்ளை அவர்கள் I. A. S.

(முன்னாள் அறநிலைய ஆணையாளர், சென்னை) அன்புடன் அளித்த

அணிந்துரை

தேடிப் பலகாலும் சிந்தித்துனைப் புகழ்ந்து
பாடிப்பரவ வரம் பாலிப்பாய்—நாடித்
தொழுவார் வினையைத் துணிக்குமொரு வென்றி
மழுவா சிதம்பர தேவா. —குருநமசிவாயர்

திருமலைராயன்பட்டினம் திருவாளர் கு. சா. சு. சுப்பிரமணிய முதலியார் வேளாண்மையாலும் நெசவு வாணிபம் மூலமாகவும் இல்வாழ்க்கை இனிது நடத்தி, சிவபத்தி சிவனடியார் இணக்கம் சுற்றத்தாரிடமும் நண்பர்களிடமும் பொது மக்களிடமும் அன்பு முதலிய நற்பண்புகள் பெற்று

'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு'

என்னும் குறளைத் தமது வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொண்டுள்ள பெரியார். பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றவர்கள் தங்கள்உடலுக்கும் உள்ளத்துக்கும் மட்டுமேயன்றி உயிருக்கும் உறுதி தேடிக்கொள்வதே வாழ்க்கையின் லட்சியமாகக் கொள்ளவேண்டும். மானிட வாழ்க்கையில் அறுபது ஆண்டுகள் ஒரு முக்கிய பகுதி. குழந்தைப் பருவத்திலும் பாலப் பருவத்திலும் இல்லற

வாழ்க்கையிலும் பொருளீட்டும் பணிகளிலும் பெறும் அநுபவம் அறுபது ஆண்டுகளில் உச்ச நிலையையடைகிறது. அறுபது ஆண்டுகள் நிறைந்ததும் மீண்டும் நாம் பிறந்த ஆண்டு திங்கள் நாள் துவங்குகிறது. இதை அருள் வாழ்வின் ஆரம்பம் என்று சொல்லலாம். நம் முதலியாரவர்கள் தம் பெயருக்கேற்ப முருகனிடம் தனி பக்தியுள்ளவர். தினந் தோறும் திருமுருகாற்றுப்படை,கந்தர் கலிவெண்பா முதலிய துதிப் பாடல்களைப் பாராயணம். செய்பவர். திருமலைராயன் பட்டினத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அபிராமியம்மை சமேத ராஜசோளீஸ்வரர் ஆலய அறங்காவலராகச் சீரிய முறையில் பணியாற்றுபவர். நல்லொழுக்க முடையவர். தமது மணிவிழா நினைவாக 1-3-63-ல் 'பன்னிரு திருமுறைத் திரட்டும் சைவத்தோத்திர மஞ்சரியும்' என்ற ஒரு நூல் வெளியிட வேண்டுமென்ற உயரிய எண்ணம் கொண்டு அப் புனிதப் பணியைச் சித்தாந்த வித்தகர்,சைவத்திரு.கயப்பாக்கம்.சோமசுந்தரஞ் செட்டியாரவர்களிடம் ஒப்புவித்துள்ளனர். இப் பணியைச் செய்யும் ஆற்றலும் ஆர்வமும் செட்டியாரவர்களுக்குத்தான் உண்டென்பதை நான் நன்கறிவேன். திருமுறைகளில் செட்டியாரவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு. தாம் அலுவலிலிருந்து ஓய்வு பெற்ற பின் திருமுறைக் கோயில்கள் அமைத்தல், திருமுறை விழாக்கள் நடத்துதல், திருமுறைப் பாடல்களைத் தொகுத்து வெளியிடல், பெரிய புராணம் திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் முதலிய புராணச் சொற்பொழிவுகள் மற்றும் சமயச் சொற்பொழிவுகள் முதலிய இறைத்தொண்டுகளிலேயே தம் வாழ்நாட்களை இனிது கழித்து வருகிறார்கள்—அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இம் மணிவிழா மலரில் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் அற்புதப் பதிகங்கள் அரிய கருத்துக்களடங்கிய பாடல்கள் சைவப் பெரியார் க. சதாசிவஞ் செட்டியாரவர்கள் குறிப்புக்கள், ஔவையாரருளிய விநாயகரகவல், நக்கீரரருளிய திருமுருகாற்றுப்படை, அருணகிரிநாதர் பாடிய

திருப்புகழ்ப் பாடல்கள், முருகன் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் திரட்டு, குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ், அபிராமிபட்டர் பாடிய அந்தாதிப் பாடல்கள் முதலிய துதிப் பாடல்களும், ஆலய வழிபாடு பற்றிய பகுதியும் இடம்பெறுகின்றன. இத்தகைய நூல் எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

திருவாளர் கு. சா. சு. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தம் மணிவிழா நினைவாக இத்தகைய துதிப் பாடல்களைத் தொகுத்து வெளியிட எண்ணியது அன்னாரின் சமயப் பற்றையும் நல்லொழுக்கத்தையும் காட்டுகிறது.

> 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனு மது'

என்ற குறள்வழி வாழ்பவர் நம் முதலியார். அவருக்கு ஆண் மக்கள் இருவர், பெண் மக்கள் இருவர். சுற்றத்தாருடனும் பொது மக்களுடனும் அன்புடனும் ஆதரவுடனும் பழகும் தன்மை வாய்ந்தவர். அவர் இன்னும் பல்லாண்டுகள் நல் வாழ்வு வாழ்ந்து முத்துவிழா, நூற்றாண்டு விழாக் கொண்டாட எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுமாய் அவனிணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

> 'வையத்து வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்'

> அனவரதங் கண்டடியேன் ஆநரித்துப் போற்றிய
> அனவரதம் முன்னின் றருள்வாய்—அனவரதம்
> பொன்னார் சபைக்கே புனித நடம்புரியு
> மன்னு சிதம்பர தேவா' —குருநமசிவாயர்

19—2—63 அ. உத்தண்டராமன்

உ

முருகன் துணை

வாகீச கலாநிதி

உயர்திரு கி. வா. ஜகந்நாதன் M. A. அவர்கள் அளித்த

அணிந்துரை

இந்த நாட்டில்தான் கோயில்கள் மிகுதி; கோயில்களில் மூர்த்திகளும் வழிபாடும் மிகுதி. அந்த மூர்த்திகளைப் பல அருளாளர்களும் அன்பர்களும் பாடிய நூல்களும் பாடல் களும் அளவிறந்தன. தமிழராகப் பிறந்தவர்களுக்கு வழிபட்டும் ஓதியும் நலம்பெறக் கற்கோயில்களும் சொற் கோயில்களும்இந்தநாட்டில் இருப்பதுபோல வேறு எங்கும் காண இயலாது.

ஆகவே இந்த நாட்டில் பிறந்தவர்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் கோயில்கள் பலவற்றிற் கும் சென்று மூர்த்திகள் அனைவரையும் வழிபடுவது என் பது அரியசெயல். சில தலங்களைத் தரிசித்து இன்புற்று, இருந்த இடத்தில் இருந்தபடியே மற்றத் தலங்களைப்பற்றிய பாடல்களை ஓதி நலம் பெறலாம்.

அவ்வாறு செய்தாலும் கடவுளை வாழ்த்திப் பலர்பாடிய பாடல்கள் அவ்வளவையும் ஓதுவது மிகமிக அரிது. ஆத லின் சிலவற்றைத்தேர்ந்து எடுத்து ஓதி வருவதே நடை முறையில் இயலுவது. இதனை உணர்ந்தே பழங்காலத்தில் இலக்கியம், சமயம், தோத்திரம் என்ற துறைகளில் பெரி யோர்கள் சிலதிரட்டு நூல்களைத் தொகுத்துத் தந்திருக்

கிறார்கள். புறத்திரட்டு இலக்கியச் செய்யுட்களின் திரட்டாகும். பெருந்திரட்டு, குறுந்திரட்டு என்பன சமய நூல்களிலுள்ள பாடல்களின் திரட்டு ஆகும். அகத்தியர் தேவாரத் திரட்டு என்பது தோத்திரத்துறையில் அமைந்த திரட்டு. பிற்காலத்தில் பலவகையான திரட்டுகள் வந்துள்ளன. நூல்கள் யாவற்றையும் படிக்கப் போதிய ஓய்வும் வசதியும் இல்லாதவர்கள் இந்தத் திரட்டுகளால் பயன் பெறலாம்.

இப்போது என் கெழுதகையன்பரும், சைவ நூற்பயிற்சியே குலவிச்சையாகக் கொண்ட சிவபக்திச் செல்வரும், தமிழ்ப்புலமையுடையவரும் ஆகிய கயப்பாக்கம். திரு சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பன்னிரு திருமுறைத் திரட்டும், சைவத் தோத்திர மஞ்சரியும்' என்ற இந்த நூலைத் தொகுத்து அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

இதில் முற்பகுதி திருமுறைகளிலிருந்து திரட்டிய பாசுரங்களும் பிற்பகுதி விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பற்றிப் பல பக்தர்கள் பாடிய பாடல்களினின்று தொகுத்தமைத்த பல செய்யுட்களும் அடங்கியவை. பலகாலமாகச் சிறந்த நூல்களிற் பழகிய பழக்கத்தால் இப்பாடல்களைத் தேர்ந்து திரட்டித்தரும் அறிவாற்றல் இவ்வன்பருக்கு அமைந்திருக்கிறது.

இறைவனுடைய துதிப் பாடல்களில் ஈடுபட்டு மனம் கசிந்து வழிபடுவதனால் உண்டாகும் இன்பத்தைப் பக்தர்கள் பெறுகிறார்கள். அவ்வாறு மனம் உருகுவதற்கு ஏற்ற உணர்ச்சிகளை இந்த அரிய பாடல்கள் உண்டாக்குகின்றன. நாள்தோறும் இத்தொகுதியால் வரையறையாகச் சில பாடல்களைத் தொடர்ந்து ஓதிவருவது என்ற நியமத்தை வைத்துக் கொள்பவர்களுக்குப் பல நன்மைகள் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.


தம்முடைய மணிவிழாவில் இத்தகைய பாமணித்திரட்டு ஒன்றை வெளியிட்டுப் பெரும்புகழ் படைக்கும் பெருந்

தகைமையாளரைப் பாராட்டுவது அவசியம். திருமலை ராயன்பட்டினத்துப் பெரு நிலக்கிழாராகிய திருவாளர். கே. எஸ். எஸ். சுப்பிரமணிய முதலியாரவர்கள் அறுபது நிறைந்த நல்வாழ்வுக்கு அறிகுறியாக இதனை வெளிவரச் செய்து பலருக்கும் வழங்குகிறார். இந்தக் கொடை உள்ளத்துக்கு விளக்கேற்றி வைக்கும் கொடை.

நூலைத் திரட்டிப் பதிப்பித்த திரு க. சோமசுந்தரம் செட்டியாரவர்களும், மணிவிழாக் கொண்டு இந்த நூலை மலரச் செய்த பெருந்தகையாராகிய திரு கு. சா. சு. சுப்பிரமணியமுதலியாரவர்களும், இறைவன் திருவருளால் நீடூழி வாழ்ந்து இதுபோன்ற பல நல்ல தொண்டுகளைச் செய்து கொண்டு நிலவ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

மயிலை
19—2—63

கி. வா ஜகந்நாதன்



சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர்

உ
சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணசாரம்

[கொற்றவன்குடி-உமாபதிசிவாசாரிய சுவாமிகள் அருளியது]

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னமுதுமையாள் கருதி யூட்டும்
ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை யிசைய ஏறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே. 1

ஆரெரியிட் டெடுத்தவேடு அவைமுன் னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்போ யணைய வேற்றி
ஓரமணர் ஒழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓடம் ஏற்றிக்
காருதவும் இடிபுத்தன் தலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிகள் ஏற்றி
ஈரமிலா அங்கமுயிர் எய்த வேற்றி
இலங்குபெரு மணத்தரனை எய்தி னாரே. 2

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

பண் — நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடையேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப் பொடிபூசிஎன்
உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்
தேத்தஅருள்செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன
முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னுப்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல்
கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்
நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன்
உள்ளங்கவர்கள்வன்

ஊர்பரந்தவுல கின்முதலாகிய
ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி
விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென
துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை
மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை
யூரும்இவனென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர்
காலம்இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தஒலி பாடலோடாடல
ராகிமழுவேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன்
உள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர்
சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னலன்எரி
வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்கும் அரவோடுழிதந்தென
துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம்
பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை
வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென
துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள்
தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு
தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென
துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய
வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங்
கூறநெறிநில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்

மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர்
மாயம்இதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன்
பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய
பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
பந்தன்உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல்எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் பிரம தீர்த்தக்கரையி லிருந்த காலை தம்பிதாவாகிய சிவபாதவிருதயர் நீருண்மூழ்கி அகமருடண ஜபம் செய்துகொண்டிருந்தபோது அவரைக் காணாது திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து அம்மே அப்பா என அழைத்து அழத் தொடங்கினார். அதனைக் கேட்டருளிய தோணியப்பர் பெரிய நாயகியாருடன் இடப வாகனத்தின் மீது எழுந்தருளிப் பிரம தீர்த்தக் கரையை அடைந்தார். அப்பர், அம்மையைப் பார்த்துக் குழந்தையின் அழுகையைத் தீர்க்கவேண்டித் தம் பர, அபர ஞான சுவ ரூபமாகிய தனங்களிலிருந்து பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தைக் குழைத்தூட்டுக என்றார். அம்மை யாரும் அவ்வாறே செய்தருளினார். குழந்தையின் அழுகை தீர்ந்தது. சிவஞானமும் கைவரப்பெற்றார். ஜபம் முடிந்து கரையேறிய பிதா தம் குழந்தை கையில் பொற்கிண்ண மிருப்பதையும், அவர் உடம்பில் பால் வடிந்திருப்பதையுங் கண்டார். "யாரளித்த பாலடிசில் உண்டதுநீ என"

வெகுண்டார். "எச்சில் மயங்கிட உனக்கு ஈதிட்டாரைக் காட்டுக" எனவும் குழந்தையை அதட்டினர். உடனே அச் சிறிய பெருந்தகையார் ஆனந்தக் கண்துளி பெய்து, உச்சி யினில் எடுத்தருளும் ஒரு திருக்கை விரற் சுட்டித் தம் எதிரே நின்ற அம்மையப்பரைக் காட்டி உயர்ஞானத் திரு மொழியால் அவரை அடையாளங்களுடன் சிறப்பித்து "எம்மையிது செய்த பிரான் இவனன்றே" எனத் தொடங் கும் "தோடுடைய செவியன்" என்ற ஆரம்பத்தையுடைய இத்திருப்பதிகத்தை யருளிச் செய்தார்கள்.

திருவேணுபுரம்

பண்-நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வண்டார்குழ லரிவையொடும்
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளம்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு
வேணுபுரம் அதுவே. 1

படைப்புந்நிலை யிறுதிப்பயன்
பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி
பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு
புன்னைமலர் நாற்றம்

விடைத்தேவரு தென்றல்மிகு
வேணுபுரம் அதுவே. 2

வேதத்தொலி யானும்மிகு
வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு
பந்தன்தன பாடல்
ஏதத்தினை இல்லாஇவை
பத்தும்இசை வல்லார்
கேதத்தினை இல்லார்சிவ
கெதியைப்பெறு வாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலை

பண்-நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே. 1

பெருகும்புன லண்ணாமலை
பிறைசேர் கடனஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
அணிவாரது பருகிக்

கருகும்மிட றுடையார்கமழ்
சடையார் கழல்பரவி
உருகும்மன முடையார்தமக்
குறுநோயடை யாவே. 6

விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய
அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை
தலைவன்னடி சரணே. 9

வெம்புந்திய கதிரோனொளி
விலகும்விரி சாரல்
அம்புந்திமூ எயிலெய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை.

பண் - நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சடையார்புன லுடையானொரு
சரிகோவணம் உடையான்

படையார்மழு வுடையான்பல
பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிடம்
உடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம்
வீழிம்மிழ லையே. 1

ஈருய்முத லொன்ருயிரு
பெண்ணுண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு
பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொ
டெட்டுத்திசை தானுய்
வேருய்உடன் ஆனுன்இடம்
வீழிம்மிழ லையே. 2

வீழிம்மிழ லைம்மேவிய
விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம்
பந்தன்தமிழ் பத்தும்
யாழின்இசை வல்லார்சொலக்
கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட
உயர்வானடை வாரே 11

திருச்சிற்றம்பலம்

திருநெய்த்தானம்.

பண் — நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை
மகள்பாகம துடையான்

கையாடிய கேடில்கரி
யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைமலர்
நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம்
நெய்த்தானமெ னீரே. 1

பறையும்பழி பாவம்படு
துயரம்பல தீரும்
பிறையும்புனல் அரவும்படு
சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி
அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில்
நெய்த்தானமெ னீரே. 2

தலமல்கிய புனற்காழியுள்
தமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு
நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்இவை
பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்அடி
சேர்வர்சிவ கதியே. 11

திருச்சிற்றம்பலம்

திருநின்றியூர்.

பண் — நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அச்சம்இலர் பாவம்இலர்
கேடும்இல ரடியார்

நிச்சம்உறு நோயும்இலர்
தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங்
கொன்றைநயந் தாளும்
பச்சம்உடை யடிகள்திருப்
பாதம்பணி வாரே. 2

திருச்சிற்றம்பலம்

திருச்சிவபுரம்.

திருவிராகம் — பண் — நட்டபாடை (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

புவம்வளி கனல்புனல் புவிகலை
யுரைமறை திரிகுணம் அமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்
திகழ்தரும் உயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு
பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர்
செழுநில னினில்நிலை பெறுவரே. 1

மலைபல வளர்தரு புவியிடை
மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முதல் உலகுகள்
நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல் நடுஅறி துயிலமர்
அரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை
பவர்திரு மகளொடு திகழ்வரே. 2

பழுதில கடல்புடை தழுவிய
படிமுத லியவுல குகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள்
குலம்மலி தருமுயி ரவையவை
முழுவதும் அழிவகை நினைவொடு
முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர்
தொழுமவர் புகழ்மிகு முலகிலே. 3

நறைமலி தருமள றொடுமுகை
நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடும் அடியவர்
குறைவில பதம்அணை தரஅருள்
குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது
நினைபவர் செயமகள் தலைவரே. 4

சினமலி யறுபகை மிகுபொறி
சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு
தருபொருள் நியதமும் உணர்பவர்
தனதெழி லுருவது கொடுஅடை
தகுபர னுறைவது நகர்மதில்
கனமரு வியசிவ புரம்நினை
பவர்கலை மகள்தர நிகழ்வரே. 5

சுருதிகள் பலநல முதல்கலை
துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர
வழியொழு குமெயுறு பொறியொழி

அருதவ முயல்பவர் தனதடி
யடைவகை நினையர னுறைபதி
திருவருள் சிவபுரம் நினைபவர்
திகழ்குலன் நிலனிடை நிகழுமே. 6

கதமிகு கருவுரு வொடுவுகி
ரிடவட வரைகண கணவென
மதமிகு நெடுமுக னமர்வளை
மதிதிக ழெயிறதன் நுதிமிசை
இதமமர் புவியது நிறுவிய
எழிலரி வழிபட அருள்செய்த
பதமுடை யவனமர் சிவபுரம்
நினைபவர் நிலவுவர் படியிலே. 7

அசைவுறு தவமுயல் வினில்அயன்
அருளினில் வருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை
யிருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு
விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுரம் நினைபவர்
செழுநில னினில்நிகழ் வுடையரே. 8

அடல்மலி படையரி அயனெடும்
அறிவரி யதொரழல் மலிதரு
சுடருரு வொடுநிகழ் தரவவர்
வெருவொடு துதியது செயவெதிர்
விடமலி களநுத லமர்கண
துடையுரு வெளிபடு மவன்நகர்
திடமலி பொழிலெழில் சிவபுரம்
நினைபவர் வழிபுவி திகழுமே. 9

குணமறி வுகள்நிலை யிலபொரு
ளுரைமரு வியபொருள் களுமில
திணமெனு மவரொடு செதுமதி
மிகுசம ணருமலி தமதுகை
உணலுடை யவருணர் வருபர
னுறைதரு பதியுல கினில்நல
கணமரு வியசிவ புரம்நினை
பவரெழி லுருவுடை யவர்களே. 10

திகழ்சிவ புரநகர் மருவிய
சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை
நலமலி யொருபதும் நவில்பவர்
நிகழ்குல நிலநிறை திருவுரு
நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின்
மிகைபுணர் தரநலம் மிகுவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கோலக்கா.

பண் – தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங்கொண்ட வுருவ மென்கொலோ. 1

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்

கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே. 2

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் சீகாழிக்கு அண்மையிலுள்ள திருக்கோலக்காவை வழிபடச் சென்ரூர். அங்கே திருக்கோயிலை வலம் வந்து ஆங்கு எழுந்தருளியுள்ள பெருமானை "மடையில் வாளைபாய" என்னு மிப் பதிகத்தால் கைத்தாளமிட்டுப் பாடியருளினர். அதனைக் கேட்ட இறைவன் இவர் பாட்டுக்குகந்து பஞ்சாட்சரம் எழுதிய பொற்ருளத்தை யிவருக்கீந்தார். திருத்தாளம் நமது சுவாமிகள் திருக்கரத்திற்கு வந்தது. அவற்றை ஞானசம்பந்தப் பெருமான் கையேற்றுத் திருமுடிமேல் வைத்து ஏழிசையும் ஓங்க இப்பதிகத்தை ஓதியருளினர்.

திருப்புகலி.

பண் - தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

விதியாய் விளைவாய் விளைவின் பயனுகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே. 1

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர்.

பண் - தக்கராகம் (1–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிடமாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானும் மகிழ்ந்
தீடாவுறை கின்ற இடைமரு தீதோ. 1

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந் தழகாய
ஈசன்உறை கின்ற இடைமரு தீதோ. 2

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம் பந்தன்
எண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்தும் வல்லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பாச்சிலாச்சிராமம்.

பண்-தக்கராகம். (1–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ் செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 1

கலைபுனைமானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண் கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் இவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட
இடர்செய்வதோ இவரீடே. 2

அகமலி அன்பொடு தொண்டர்வணங்க
ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ்ஞானசம் பந்தன்
தகைமலிதண்தமிழ் கொண்டிவையேத்தச்
சாரகிலாவினை தானே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் மழ நாட்டிலுள்ள திருப்பாச்சிலாச்சிராமம் பணிய எழுந்தருளும்போது அந்நாட்டில் கொல்லிமலைக்குரிய மழவன் என்னும் சிற்றரசன் அந்நாட்டையாண்டுவந்தான். அவனது மகளுக்கு முயலகன் என்னும் கொடிய நோய்பற்றி மருந்தாலும், மந்திரத்தாலும் நீங்காதிருந்தது. அரசன் பெரிதும் வருத்தமடைந்தான். கடைசியாக ஆண்டவன் அருளினல்தான் இந்நோய் நீங்குமென்றெண்ணித் தன் மகளைப் பாச்சிலாச்சிராமத்துள்ள திருக்கோயிலில் தூவஜஸ்தம்பத்தருகில் இட்டுவைத்தான். அது காலை திருஞானசம்பந்த சுவாமிகள் தன்னுட்டுக்கு எழுந்தருளி வருவதை யறிந்து நகரை அலங்கரித்துச் சகல

விதமான உபசாரங்களுடனும் அவரையும் அவர் தம் திருக் கூட்டத்தாரையும் வரவேற்ருன். சுவாமிகள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யவர் நல்லாசிபெற்ருன். பிறகு சுவாமிகள் கோயிலுக்குச் சென்று பெருமானை வணங்க எழுந்தருளிய போது அங்கு கிடத்தப்பட்டிருந்த அரசன் மகளைக் கண்டு அதன் வரலாற்றையு மறிந்துகொண்டு பாச்சில் மேய பரம்பொருளைத் "துணிவளர் திங்க" ளென்றெடுத்து "மணி வளர்கண்டரோ மங்கையை வாட மயல்செய்வதோ விவர் மாண்பு" எனப்பிணிதீர்க்கும் இப்பதிகத்தைப் பாடி யருளினர். உடனே அப்பெண் நோய் நீங்கி எழுந்து வந்து நாயனரைப் பணிந்து அருள் பெற்றது.

திருஆலங்காடு.

பண் - தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும்
வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரும்
முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணுள்கொள்ளும்
வகைகேட்டு
அஞ்சும்பழையனூர் ஆலங்காட்டெம்
அடிகளே. 1

திருச்சிற்றம்பலம்

திருநள்ளாறு.

பண்—தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற்
றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன்
கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன்
தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன்
பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ
டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான்
மேயது நள்ளாறே. 2

தண்புனலும் வெண்பிறையுந்
தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி
ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்து பாடல்
பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ
டுலகிலுறை வாரே. 11

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய பிள்ளையார் திருத்கருமபுரத்தை வழிபட்டுத் திருநள்ளாற்றை யடைந்து இறைவனை வணங்கி உருகிய அன்புறு காதலினல் உள்ளுருகிப் பொருவில் திருப்பதிகம் "போக மார்த்த பூண்முலையாள்" என்றெடுத்துப்பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தி வெளிவந்து திரு நீலகண்டப் பெரும்பாணரை யதனை யாழிலிட்டு வாசிக்குமாறு செய்தும், தாம்தாளம் கொடுபாடியும் எல்லோரையும் மகிழ்வித்தருளினர்.

இத்திருப்பதிகமே மதுரையில் பாண்டியன் அவைக் களத்தே சமணருடன் வாதஞ்செய்யும் போது அனல் வாதத்தின் பொருட்டுப் பிள்ளையார் திருமுறையிற் கயிறு சாத்தியபோது வரநேர்ந்தது. அந்த ஏட்டைப் பிள்ளை யார் கையிலெடுத்துச் சிவபெருமானே பரம்பொருள் என்பது உண்மையாயின் இந்த திருவேடு நெருப்பில் வேகாதிருக்கக் கடவது எனத் திருநள்ளாறரை நோக் கித் "தளிரிள வளரொளி" என்னும் பதிகம்பாடி நெருப் பிலிட்டுக் குறித்த நேரத்திற்குப் பின் பச்சையாக எடுத்து அவையினர் எல்லோருங்காணக் காட்டித் திருமுறையில் சேர்த்துக் கொண்டார். இக்காரணத்தால் இப்பதிகம் பச்சைத் திருப்பதிகமென வழங்கப்பெறும்.

திருநெடுங்களம்.

பண் - பழந்தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றுன்னைப் பேசினல்லால்

குறையுடையார் குற்றம்ஓராய்
கொள்கையினல் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 1

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ்
கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த
திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடல்ஆடல்
பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 2

நின்னடியே வழிபடுவான்
நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரைவவ்வேல்
என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 3

மலைபுரிந்த மன்னவன்றன்
மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும்
அவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய்
தலைவநின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார்
பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு
தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந்
தலைவநின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி
வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன்
அடியிணையே பரவும்
நிருத்தகீதர் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக்
கூடியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்
றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 7

குன்றின் உச்சி மேல்விளங்குங்
கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை
யருவரைக்கீழ் அடர்த்தாய்

என்றுநல்ல வாய்மொழியா
லேத்தியிராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 8

வேழவெண்கொம் பொசித்தமாலும்
விளங்கியநான் முகனும்
சூழவெங்கும் நேடஆங்கோர்
சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான்
கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 9

வெஞ்சொல்தஞ்சொல் லாக்கிநின்ற
வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந்
தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால்
தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 10

நீடவல்ல வார்சடையான்
மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற்
சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை
ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார்
பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவோத்தூர்.

பண் – பழந்தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர்மேய வொளிமழு வாள் அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 1

இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீரே புள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துதும் ஓத்தூர்ச்
சடையீரே யும தாளே. 2

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

நடு நாட்டிலுள்ள திருவண்ணமலையை வழிபட்டுப் புறப்பட்ட பிள்ளையார் தொண்டை நாட்டுத் திங்கள் முடியார் இனிது அமர்ந்த திருவோத்தூரை அடைந்து இறைவனைப் பணிந்து வைகும் நாளில் ஒரு தொண்டர் பிள்ளையாரை அடைந்து அழுது வணங்கித் தாம் இறைவனுக்கு ஆக்கும் பனைகளெல்லாம் ஆண் பனையாய்க் காயாமலிருக்கின்ற நிலையினைச் சமணர் கண்டு இகழ்கிறார்கள் என்று விண்ணப்பித்தார். உடனே பிள்ளையார் கோயிலை யடைந்து "பூத்தேர்ந்தாயன" என்னுமிப்பதிகத்தைப் பாடித் திருக்கடைக்காப்பில் "குரும்பை யாண்பனை யீன்குலையோத்தூர்" என்று முடிக்குமளவில் அப்பனைகள் யாவும் பெண்

பனையாய்க் குரும்பை யீன்று காய்த்தன. இதனைக் கண்ட அடியார் அதிசயித்தார்கள். இகழ்ந்த சமணர் சிலர் உடனே சைவராயினர். பிறகு அப்பனைகள் தங்காலங் கழித்துப் பிறவி யொழித்துச் சிவத்தை மேவின.

திருச்செங்காட்டங்குடி.

பண் – தக்கராகம் (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நறைகொண்ட மலர்தூவி
விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார்
முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ்
செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதீச் சரத்தானே. 1

பாலினால் நறுநெய்யாற்
பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் மணமாலை
கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ்
செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான்
கணபதீச் சரத்தானே. 5

கறையிலங்கு மலர்க்குவளை
கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித்
தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச்
செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார்
வானுலகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருஇலம்பையங்கோட்டூர்.

பண் — குறிஞ்சி (1–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

மலையினார் பருப்பதந் துருத்திமாற் பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினான் எனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயி லாலும்
இலையினாற் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையைப் பேணியென்எழில்கொள்வதியல்பே. 1

திருமலர்க் கொன்றையான் நின்றியூர் மேயான்
தேவர்கள் தலைமகன் திருக்கழிப் பாலை
நிருமலன் எனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்

கருமலர்க் கமழ்சுனை நீள்மலர்க் குவளை
கதிர்முலை யிளையவர் மதிமுகத் துலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே. 2

கந்தனை மலிகனை கடலொலி யோதங்
கானலங் கழிவளர் கழுமல மென்னும்
நந்தியா ருறைபதி நான்மறை நாவன்
நற்றமிழ்க் கின் துணை ஞானசம் பந்தன்
எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்
இசையொடு கூடிய பத்தும்வல் லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும்
விடுபெற் றிம்மையின் வீடௌி தாமே. 11

திருச்சிற்றம்பலம்

கோயில்.

பண் - குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

செல்வ நெடுமாடஞ் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருஆரூர்.

திருவிருக்குக்குறள்.

பண் — குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

சித்தந் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. 1

பிறவி யறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே. 2

துன்பந் துடைப்பீர்காள், அன்பன் அணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே. 3

உய்ய லுறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கையி னுல்தொழ, நையும் வினைதானே. 4

பிண்டம் அறுப்பீர்காள். அண்டன் ஆரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே. 5

பாசம் அறுப்பீர்காள், ஈசன் அணியாரூர்
வாச மலர்தூவ, நேச மாகுமே. 6

வெய்ய வினைதீர, ஐயன் அணியாரூர்
செய்ய மலர்தூவ, வையம் உமதாமே. 7

அரக்கன் ஆண்மையை, நெருக்கினுன் ஆரூர்
கரத்தி னுல்தொழத், திருத்த மாகுமே. 8

துள்ளும் இருவர்க்கும், வள்ளல் ஆரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே. 9

கடுக்கொள் சீவரை, அடக்கினுன் ஆரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. 10

சீரூர் சம்பந்தன், ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார், பேரா ரின்பமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை.

திருவிருக்குக்குறள்

பண் — குறிஞ்சி(1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே. 1

இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 2

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழும் மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்.

ஆளுடைய பிள்ளையார் அப்பமூர்த்தியுடன் எம்பெரு
மானைப் போற்றித் திருவீழிமிழலையில் இருக்கும்போது

மழையின்மையினுனும், காவிரிப் பெருக்கின்மையினுனும் பஞ்சமுண்டாகி உயிர்கள் பசி நோயால் மெலிந்து வருத்த முறச் சிவனடியாரும்வருந்தினர். அதுகண்ட நாயன்மார்கள் கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினேர்க்கும் கவலை வருமோ என்று கருத்துட் கொண்டு துயிலு மன்றிரவில் இறைவன் அவர் கனவில் தோன்றி "அன்பர்களே! கால மாறுதலினுன் நீங்கள் கவலையுறமாட்டீர்கள், எனினும் உங் களைச் சார்ந்த அடியவர் வாட்டம் தீர்க்கும் பொருட்டுப் பஞ் சம்தீரும்வரை திருக்கோயிலில் கிழக்குப் பலி பீடத்திலும் மேற்குப் பலிபீடத்திலும் நாள்தோறும் ஒவ்வொரு காசு உங் களுக்குத் தருகின்ருேம்" என்றருளிச் செய்து மறைந்தருளி ஞர். பிள்ளையார் மறுநாட் காலையில்அப்பமூர்த்தியுடன திருக் கோயிலை அடைந்து கிழக்குப் பலிபீடத்துக் காசு இருத் தலை வணங்கி எடுத்து நாள்தோறும் சிவனடியார் வந்து அமுது செய்யக் கடவர் என்று இருபோதும் பறைசாற்றித் தெரி வித்துத் தம் திருமடத்தில் வரும் அடியவர்களெல்லோரை யும் கறி,பால்,தயிர்,நெய்யோடும் உண்பித்து வந்தார். அப்ப மூர்த்திகளும் தமது திருமடத்திலும் அவ்வாறே செய்து வந்தனர். அப்போது பிள்ளையார் வாகீசரது திருமடத் தில் அடியவர்கள் காலமுற அமுது செய்விக்கப்பெறுதலை யும், தமது மடத்தில் காலந்தாழ்த்துச் செய்தமைக்கப் பெறு தலையும் அறிந்துஅவ்வாருதல் தாம் இறைவனிடம் பெறுங் காசு வட்டங்கொடுத்து மாற்றப்பெற வேண்டியிருத்தலை யறிந்து அப்பமூர்த்திகள் கைத்தொண்டு செய்தலினுல் வாசியில்லாக் காசுபெறுதலை உன்னித் தாமும் இறைவனைப் பாடி யவ்வாறு பெறுமாறு திருக்கோயிலையடைந்து "வாசி தீரவே காசு நல்குவீர்" எனுமிப்பதிகம் பாடி யன்று முதல் வருநாளெல்லாம் வாசியில்லாக்காசு பெற்று மகிழ்ந்து தமது திருமடத்திலும் காலம் பெற உண்பித்தார்.

———

திருச்சிராப்பள்ளி.

பண் — குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 1

திருச்சிற்றம்பலம்

பொது

திருநீலகண்டப்பதிகம்

பண் - வியாழக்குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும்
உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத்
தீண்டப்பெ றுதிரு நீலகண்டம். 1

காவினை யிட்டுங் குளம்பல
தொட்டும் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித்
தீரென் றிருபொழுதும்

பூவினைக் கொய்து மலரடி
போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 2

மூலத்தடம் மூழ்கிய போகங்களும்
மற் றெவையும் எல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை
யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும்
மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 3

விண்ணுல காள்கின்ற
விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந்
தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை
யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 4

மற்றிணை யில்லா மலைதிரண்
டன்னதிண் டோளுடையீர்
சிற்றெமை யாட்கொண்டு கேளா
தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந்
திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 5

மறக்கும் மனத்தினை மாற்றியெம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்
கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை
யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 6–7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை
கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை
யேத்துதும் நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரி
லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 8

நாற்ற மலர்மிசை நான்முகன்
நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும்
முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது
வணங்குதும் நாமடியோம்
சீற்றம் தாம்வினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 9

சாக்கியப் பட்டுஞ் சமணுரு
வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப்
போகமும் பற்றும்விட்டார்

பூக்கமழ் கொன்றைப் புரிசடை
யீரடி போற்றுகின்ருேம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம். 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ்
செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில்
இமையவர் கோன்அடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன்
செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர்
கோனெடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தப் பிள்ளையார் கொங்கு நாட்டின் பக்கங்களிலுள்ள தலங்களை வணங்கிக் கொண்டு திருக்கொடிமாடச் செங்குன்றூரில் வந்து தங்கினர். அப்போது மழைக்காலம் நீங்கிப் பனிக் காலம் வந்து குளிர்மிகுந்து நாயனரது திருக்கூட்டத்தினர் பன்னாள் அந்நாட்டில் தங்கிய காரணத்தால் நளிர் சுரத்தால் வருந்தினர். இதனையறிந்த பிள்ளையார் இஃது இந்நாட்டு இயல்பு எனினும் நமக்கெய்தப் பெருது என்றும், முன் விடத்தை யுண்டு தேவர்களது இடரினைக் காத்தருளிய நீலகண்டமே எந்நாளும் அடியார் இடர் தீர்ப்பதென்றும் கருதி "அவ்வினைக் கிவ்வினை" என்றெடுத்துச் "செய்வினை தீண்டப்பெரு திரு நீலகண்டம்" என்று திருப்பாட்டு இறுதிதோறும் வைத்து இத்திருப்பதிகத்தைப் பாடியருளினர். உடனே அந்நாடு முழுவதும் பனிப்பிணி தீர்ந்தது.

திருவிடைமருதூர்

திருவிராகம். பண்-வியாழக்குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடம்இடை மருதே. 5

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம்

திருவெழுகூற்றிருக்கை

பண் - வியாழக்குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஒருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்

கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை

ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின்பெருமையும
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீள்நிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

சிவபாத விருதயர் தமது பூசைக் காலத்து நாடோறும் பிள்ளையாரது புத்திமுத்திகளைத் தரத்தக்க திருப்பதிகங் களையோதும் நியமமுடையவராயிருத்தலையும், திருப்பதி கங்கள் நாளும் பெருகி எண்ணிறந்தவாதலின் அக் கருத்து அவர்க்கு முற்றுப்பெருதகதை அறிந்த பிள்ளை யார், இத்திருவெழு கூற்றிருக்கையை யருளினர். இதனை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பேறு உண்டாம் என்றும் சொன்னர்.

———

திருப்பிரமபுரம்.

பண் — மேகராகக்குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்த அன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்ருன்
வழிபட்ட நலங்கொள் கோயில்

வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. 1

புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன் ஐந்தாய்
நிலன்ஐந்தாய்க் கரணம் நான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றான் அமருங் கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின் காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே.

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை.

பண் — மேகராகக்குறிஞ்சி (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லும் மிழலை யாமே. 1

ஆருடு சடைமுடியன் அனலாடும்
மலர்க்கையன் இமயப் பாவை
கூருடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங் கோயில்
சேருடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேருய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலையாமே. 7

திருச்சிற்றம்பலம்

திருத்தருமபுரம்

பண் — யாழ்மூரி. (1-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பா டுவரா ழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தா தவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே. 1

பொங்குந டைப்புகலில் விடை யாமவர் ஊர்திவெண்
பொடி யணி தடங் கொள்மார் புபூண நூல்புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவர் ஆடுவர்
வளங் கிளர் புனல்அர வம்வைகிய சடையர்
சங்குக டல்திரையால் உறை யுண்டுச ரிந்திரிந்
தொசிந்த சைந்திசைந் துசேரும் வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் திலம் எல்லிருள் ஒல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழில் தருமபு ரம்பதியே. 2

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
 பொரூஉ புனல் திரூஉ அமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
 துசெந் தமிழ்த் தடங் கடல் தருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்அர வும்முடை
 யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னெடு நல்லுலகெய் துவ ரெய்திய போகமும்
 உறு வர்கள் இடர் பிணி துயரணைவ் விலரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவேட்டக்குடியை வணங்கிய ஆளுடைய பிள்ளையார் திருத்தருமபுரத்தை யடைந்தபோது, அது திருநீலகண்டப் பெரும்பாணரது திருத்தாயார் பிறப்பிடமாதலின் அவர் சுற்றத்தார் யாவரும் வந்தெதிர் கொண்டு வணங்கினர்கள். பாணர் பெருமான் சுவாமிகள் பாடியருளுந் திருப்பதிகங்களைத் தாம் யாழிலிட்டு வாசிக்கும் பேற்றினையவர்க்குச் சொன்னார். அதனைக் கேட்ட அவர்கள் "நீர் பிள்ளையார் பாடுந் திருப்பதிக இசைகளை யாழிலே இட்டு அளவு பெற வாசித்தலினால் அவற்றின் சிறப்பு உலகத்தில் விளங்குவதாயிற்று" என்று பாராட்டிப் பேசினர். உடனே பாணர் பெருமான் மன நடுங்கிச் சுவாமிகளது திருவடிகளை வணங்கி. "இறைவரே, திருப்பதிக இசை அளவு படாத அரிய தன்மையை இவர்களே யன்றி நிலவுலகிலுள்ள யாவரும் அறிந்து உய்யும் பொருட்டுத் தேவரீர் வுரு திருப்பதிகம் பாடியருளுவீரெனின், அடியேன் அதனை யாழிலேயிட்டு அதனில் அஃது அடங்கப்பெருமையைக் காட்டப்பெறுவேன்" என்றார். பிள்ளையார் அப்போது பதிகவிசை மாந்தர்களது கண்டத்தினும், யாழினும், இசை நூலிற்கூறிய இசையினது எல்லா முயற்சியினும் அடங்காமையைக் காட்டும் பொருட்டு "மாதர் மடப்பிடி" என்னு மித்திருப்பதிகம் பாடியருளினர். திருநீலகண்டப் பாணர் அதனை யாழிலேயிட்டு அடங்காமையைக் கண்டு

பயந்து பிள்ளையாரை வணங்கிச் சுவாமிகளது பாடல்களை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப் பண்ணியது இந்த யாழன்றோ வென்று அதனை யோச்சி உடைக்கப் புக்கனர். பிள்ளையார் அதனைத் தடுத்து யாழைத் தமது கையிலே வாங்கி, " ஐயரே, இதனை உடைப்பதேன்? இறைவனும் இறைவியும் அருளிய அருட்டிறமெல்லாம் இந்தக் கருவியிலே அமையுமோ? இயன்ற அளவு வாசித்தலே சால்பு" என்று யாழை அவர் கையிலே கொடுத்தருள அவரும் அதனை வாங்கிச் சிரமேற் கொண்டார். இதனல் இப் பதிகம் 'யாழ்முரி' என வழங்கியது.

குறிப்பு: " இப்பதிகத்தை அடாணு ராகத்தில் ஒதிவருகின்ருர்கள். இது முறையல்ல. ஏனென்ருல், திருஞானசம்பந்த சுவாமிகள் வாழ்ந்த 7ம் நூற்ருண்டில் அடாணு ராகமென்பதே கிடையாது. இந்த ராகம் 9ம் நூற்ருண்டிலே தான்வழங்கத் தொடங்கியது. இப்பதிகத்தைச் சம்பிரதாயமாக நீலாம்புரி ராகத்தில் ஓதுவது தான் முறை'' சென்னைப் பல்கலைக் கழகச் சங்கீதப் பேராசிரியர் உயர்திரு. P. சாம்பமூர்த்தி ஐயர் அவர்கள் B. A. B. L. இவ்வாறு பேசியுள்ளார்கள்.

திருச்சிற்றம்பலம்

திருச்சிக்கல்.

பண் — இந்தளம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வானுலா வும்மதி வந்துலா வும்மதில் மாளிகை
தேனுலா வும்மலர்ச்சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண்
ணெய்ப்பெரு மானடி
ஞானமா கந்நினை வார்வினை யாயின நையுமே. 1

மடங்கொள்வா ளைகுதி கொள்ளும் மணமலர்ப்
பொய்கை சூழ்
திடங்கொள் மாமறை யாரவர் மல்கிய சிக்கலுள்
விடங்கொள் கண்டத்துவெண் ணெய்ப்
பெருமானடி மேவியே
அடைந்துவா ழும்அடி யாரவர் அல்லல் அறுப்பரே.

கந்த மார்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்நல்
செந்தண் பூம்பொழிற் சிக்கல் வெண் ணெய்ப்
பெரு மானடிச்
சந்த மாச்சொன்ன செந்தமிழ் வல்லவர் வானிடை
வெந்த நீறணி யும்பெரு மானடி மேவரே.

திருச்சிற்றம்பலம்

திருமருகல்.

பண் — இந்தளம் (2–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. 1

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்

கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே. 2

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் திருமருகலில் தங்கிப் பெருமானை வழிபட்டுக்கொண்டிருந்தார். ஒருநாள் ஒருவணிகன் வழிப்போக்கனய் ஒரு கன்னியை அழைத்துக் கொண்டு வந்து கோயிலின்பக்கலில் ஒரு மடத்தில் இரவில் கண் துயிலும்போது பாம்பு கடித்து இறந்து விட்டான். அக் கன்னி அவனைப் பாம்பு தீண்டியிறந்தும் தான் தீண்டாமல் இருந்து வருந்தி யழுது புரண்டு அரற்றினள். பலதீர்வுகள் செய்தும் அவன் பிழைக்கவில்லை. அதனைக்கண்டதும் அப் பெண் விடியற்காலையில், “அன்னையையும் அத்தனையும் நீத்து உன்னைச் சார்ந்து வந்தேன், நீ அரவால் உயிர் நீங்கி இறந்தாய், என்னையும் விட்டுநீத்தாய். இவ்விடுக்கண் தீர்த்து எனக்குத் துணையாவார் யார்? வணிக குலமணியே, யானும் வாழாமல் உயிர்துடிக்கின்றேன்” என்று அழுது பின் தன்னறிவினல் திருக்கோயில் திசையைநோக்கியும் அழுதாள். “அடியவர்களாய அமரருய்ய அலைகடல்வாய் விடமுண்ட அமுதே, நெடியானும் நான் முகனும் காணுத நீலவிட அரவணிந்த நிமலா, வெந்து பொடியான காமனை இரதி வேண்டப் புரிந்தளித்த புண்ணியனே, சீறிவந்த காலனை யுதைத்துச் சிறுவனுக்குயிரளித்த செய்ய தாளா, இந்த விடக்கொடுவேகம் நீங்குமாறும், யானிடுக்கண் குழியி னின்றேறுமாறும் எழில்மருகற் பெருமானே இரங்காயோ?” என்று புலம்பிய ஓசையைச் சுவாமி தரிசனத்திற்கு வந்த ஞானசம்பந்தப் பெருமான் கேட்டு அவளுக்கு அருள் புரிய

எண்ணிக் கோயிலிலுள்ள பெருமான் மீது இப்பதிகத்தைப் பாடியருளினர். விடம் பூர்ந்து அவ்வணிகன் உயிர் பெற்று எழுந்து பெருமானை வணங்கி நின்ருன். அவ்விருவருக்கும் ஞானசம்பந்தப் பெருமான் திருமணம் செய்வித்து ஆசிகூறி வழியனுப்பினர்கள்.

திருமறைக்காடு.

பண் — இந்தளம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே. 1

சங்கந் தரளம் மவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை உமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே. 2

காழிந் நகரான் கலைஞா னசம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் இசைமாலை யீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருமறைக் காட்டினைச் சென்றெய்திய ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசுகளும் இறைவனை வணங்குமாறு திருக்கோயிலையடைந்தபோது முன்பு வேதம் பூசித்து அடைத்த திருக்கதவு திறக்கப்பெருமையினுல் வேருேர்

வாயில் வகுத்து அதனல் உட்செல்லப் பெறுதலையறிந்தனர். அறிந்தபோது பிள்ளையார் ஆளுடைய அரசினை அது திறக்கப்பெறுமாறு பாடும்படி வேண்ட அவரும் திருப்பதிகம் பாடித் திறந்தருள, இரண்டு நாயன்மார்களும் அவ்வயி முகத்துத் திருவாயிலானேஉட்சென்று பெருமானைப்பாடி வணங்கிப்புறம் போந்தனர். அப்போது வாகீசர் அத்திரு வாயில் திறக்கவும் அடைக்கவுமான வழக்கம் எப்போதும் நிகழும் படிப் பிள்ளையாரை அதனை அடைக்கப் பாடுமாறு வேண்டுதலும், அவரும் "சதுரம் மறைதான்" என்னுமிப் பதிகம் எடுத்துப்பாடி முதற்பாட்டானே யடைத்துப் பதிகத்தை நிரப்பித் திருக்கடைக்காப்புச் சாத்தியபின் இரு பெருமக்களும் தத்தம் மடாலயங்களுக்கு எழுந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்

திருவாஞ்சியம்

பண் - இந்தளம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வன்னி கொன்றைமத மத்த மெருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி வித்தபு ராணனுர்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திரு வாஞ்சியம்
என்னை யாளுடை யானிட மாக வுகந்ததேயே. 1

மேவி லொன்றர் விரிவுற்ற விரண்டினர் மூன்றுமாய்
நாவி னுலருட லஞ்சினர் ஆறரே ழோசையர்
தேவி லெட்டர்திரு வாஞ்சிய மேவிய செல்வனுர்
பாவந் தீர்ப்பர்பழி போக்குவர் தம்மடி யார்கட்கே 3

தென்றல்துன்றுபொழில்சென் றணையுந் திரு வாஞ்சியத்
தென்று நின்றவிறை யானை யுணர்ந்தடி யேத்தலால்

நன்று காழிமறை ஞானசம் பந்தன செந்தமிழ்
ஒன்று முள்ளமுடை யாரடை வாருயர் வானமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம்

பண் - சீகாமரம். (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் எனக்கமுத
மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானுந்
தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த
காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம
புரத்துறையும் வானவனே. 1

தாமென்றும் மனந்தளராத்
தகுதியராய் உலகத்துக்
காமென்று சரண்புகுந்தார்
தமைக்காக்குங் கருணையினான்
ஓமென்று மறைபயில்வார்
பிரமபுரத் துறைகின்ற
காமன்றன் உடலெரியக்
கனல்சேர்ந்த கண்ணானே. 2

நன்னெஞ்சே யுனையிரந்தேன்
நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய்
உய்வதனை வேண்டுதியேல்

அன்னஞ்சேர் பிரமபுரத்
தாரமுதை எப்போதும்
பன்னஞ்சீர் வாயதுவே
பார்கண்ணே பரிந்திடவே. 3

கண்ணுதலான் வெண்ணீற்ருன்
கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமாம் உருவத்தான்
பிஞ்ஞகன்பேர் பலவுடையான்
விண்ணுதலாத் தோன்றியசீர்ப்
பிரமபுரந் தொழவிரும்பி
எண்ணுதலாஞ் செல்வத்தை
இயல்பாக அறிந்தோமே. 5

எங்கேனும் யாதாகிப்
பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும்
எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக்
குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச்
சங்கரன்றன் தன்மைகளே. 6

சிலையதுவெஞ் சிலையாகத்
திரிபுரமூன் றெரிசெய்த
இலைநுனைவேல் தடக்கையன்
ஏந்திழையா ளொருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத்
தருமணியை அடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம்
நீடுலகிற் பெறலாமே. 7

தன்னடைந்தார்க் கின்பங்கள்
தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம
புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன்
மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள்
பலவடைந்தார் புண்ணியரே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்புள்ளிருக்குவேளூர்

பண் – சீகாமரம் (2-ம் திருமுறை)

திருசிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. 1

தையலாள் ஒருபாகஞ் சடைமேலாள் அவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோர் அந்தணனார் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. 2

வாசநலஞ் செய்திமையோர் நாடோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானார் இனிதாக உறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும்
ஒழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே. 3

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 5

திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம்உரைத்தபிரான்அமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 6

பண்ணொன்ற இசைபாடும்
அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும்
மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி
வாணாளு துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே. 8

செடியாய வுடல்தீர்ப்பான்
தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த
புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக்
கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க்
கில்லையாம் மறுப்பிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சாய்க்காடு

பண் – சீகாமரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றுருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்தாள் சார்ந்தாரே. 1

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 3

நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர்மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் தமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி ஏத்துவார்க் கிடர்கெடுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருமயிலாப்பூர்

பண் — சீகாமரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங்
கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்
சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின்
உருத்திர பல்கணத்தார்க்

கட்டிட்டல் காணுதே
போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த ஒண்கண்
மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான்
கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓண
விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணுதே
போ தியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார்
மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சர த்தான்றெல்
கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார்
தையலார் கொண்டாடும்
விளக்கீடு· காணுதே
போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை
யுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார்
கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக்
கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணுதே
போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசும் ஒண்கண்
மடநல்லார் மாமயிலைக்

கைப்பூசு நீற்றான்
கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண் புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே
போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்த தெங்கின்
மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான்
கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல்ஆனே றூரும்
அடிக ளடி பரவி
நடமாடல் காணாதே
போதியோ பூம்பாவாய். 6

மலிவிழா வீதி
மட நல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான்
கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய்
பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய். 7

தண்ணா அரக்கன்தோள்
சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக்
கபாலீச்சரம் அமர்ந்தான்
பண்ணார் பதினெண்
கணங்கள்தம் அட்டமிநாள்

கண்ணுரக் காணுதே
போதியோ பூம்பாவாய். 8

நற்ரு மரைமலர்மேல்
நான்முகனும் நாரணனும்
உற்ருங் குணர்கிலா',
மூர்த்தி திருவடியைக்
கற்ருர்க ளேத்துங்
கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்ருப்புக் காணுதே
போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாய வாழ்க்கை
அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள்
எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த
கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே
போதியோ பூம்பாவாய். 10

கானமர் சோலைக்
கபாலீச்சரம் அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப்
பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன்
நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத்
தவரோடும் வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருமயிலாப்பூரில் வணிகர் குலத்திலே சிவநேசர் என்பவர் புறச் சமயங்கள் ஒழிந்து சைவந்தழையும் மனமுடை

ராய்ச் சிவபக்தி, சிவனடிபார் பத்திகளிற் சிறந்துமிக்க செல்வராய் ஒருவரிருந்தனர். அவர் ஆளுடைய பிள்ளையா ரது அருட்பெருஞ்செயல்களைக் கேட்டு அவர்பால் பேரன் புடையவராய்த் தாமும், பூமகளை யொத்த பூம்பாவை என்னும் தன் பெண்ணும், எல்லையில்லாத் தமது செல்வ மும் எல்லாம் ஆளுடைய பிள்ளையார் திருவடிக்கும் பாங் காக எனப் பலரறியச் சொன்னர். நாட்கள் பல சென்றன. ஓர் நாள் பூம்பாவை பூங்காவில் மலர் பறிக்கும்போது பாம்பு கடித்தது. விடம் தலைக்கேறியது, மருந்தாலும் மந்திரத் தாலும் விடம் இறங்காமல் பூம்பாவை உயிர்நீத்தாள். சிவ நேசர் " இவளை முன்னமே ஞானசம்பந்தருக்கு எனக் கொடுத்ததனல் இவளைத் தகனஞ்செய்து இவளது என்பை யும் சாம்பரையும் அவர் வரும் வரையில் சேமித்து வைப் பேன் " என்று தீர்மானித்து அவ்வாறே செய்து முடித் தார். எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்திலிட்டுக் கன்னிமாடத்தில் வைத்துத் தூபதீபம் முதலியவற்ருல் உப சரித்துவந்தார். சிரபுரச் செம்மலார் தொண்டை நாட்டுத் தலங்களை வழிபட்டுக் கொண்டு திருவொற்றியூரில் வந்து தங்கியிருந்தார். இதனை அறிந்த சிவநேசர் திருவொற்றியூர் சென்று பிள்ளையாரை வணங்கித் தம்மூருக்கு வந்து பெரு மானை வணங்க வேண்டினர். அவரும் இசைந்தார். சிவ நேசரும்திருவொற்றியூர்முதல் திருமயிலாப்பூர்வரை நடைக் காவணமிட்டு நகரத்தைப் பலவகையாலும் அலங்கரித்துப் பிள்ளையாரை உபசாரத்துடன் அழைத்துச் சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன் வரலாற்றைத் தெரி வித்தார். பிள்ளையாரும் அவர்பால் கருணை கூர்ந்து கபா லீச்சரப் பெருமானை வணங்கி விண்ணப்பித்து வெளிவந்து அவ்வென்புக் குடத்தைக் கொண்டுவந்து குளக்கரையில் வைக்கப் பணித்தார். அதனைப் பிள்ளையார் திருவருள் நோக்கம் செய்து " பூம்பாவாய் " என விளித்து " மண்ணுல கத்தில் பிறந்தவர் பெறும்பேறு அடியார்களுக்கு அமுது செய்வித்தல், சிவாகம விதிப்படிச் செய்யப்பெறுகின்ற

சிவபிரான் திருவிழாச் சிறப்பினைக் கண்டு தொழுதலு மாகிய இவ்விரண்டுமேயாம், என்பது உண்மையாயின் இப்போது நீ இங்கு உயிர் பெற்று எழுந்து வரக்கடவாய்'' என்னும் திருவுள்ளக் கிடையோடு "மட்டிட்ட புன்னை யம்'' என்னு மிப்பதிகத்தினைப் பாடினர். இப்பதிகத்தின் முதற்பாட்டில் அப்பெண் வடிவு பெற்றும், அடுத்த எட்டுப் பாட்டில் பன்னிரண்டாண்டளவு எய்தியும், தெளிந்த பொருள் நிச்சயமில்லாத சமணரும் சாக்கியரும் இச்செய் கை ஏற்றதன்று என்று சொல்வார்கள் என்னும் கருத் துடைய பத்தாவது பாட்டாகிய சமண் பாடலைச் சொன்ன மாத்திரத்தில்வளையலணிந்தசிவந்தகைவெளியேதோன்றும் படித் தாமரை மலரிலிருந்து எழும் இலக்குமியைப் போலக் குடமுடைந்து வெளியே வந்தாள். மண்ணும் விண்ணும் போற்றின. சிவனடியார் அரகர முழக்கஞ் செய்தனர். பூம் பாவை தன் பிதாவுடன் பிள்ளையாரை வணங்கினுள். சிவ நேசர், பிள்ளையார் அவளை மணம் புணருமாறு வேண்டி னர். அவரும் தான் பூம்பாவையை எழுப்பியதால் பிதாப் போல் ஆனதால் உரை தகாதென மறுத்தார். பூம்பாவையும் கன்னிமாடத்திலிருந்து பிள்ளையார் திருவடிகளையுன்னிச் சிவத்தையடைந்தாள்.

திருவெண்காடு.

பண் — சீகாமரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங்
கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும்
பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும்
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடைகாட்டுங் கொடியானே. 1

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத்
தோயாவாந் தீவினையே. 2

தண்பொழில்சூழ் சண்பையர்கோன்
தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி
விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை
பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய்
. வான்பொலியப் புகுவாரே . 11

திருச்சிற்றம்பலம்.

திரு ஆலவாய்

பண் - காந்தாரம் (2 - திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர்வாயுமைபங்கன் திருஆலவாயான் திருநீறே1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகைசூழ்ந்த திருஆலவாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் கும்திரு மேனி ஆல வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள்தங்கள் மெய்யது வெண்பொடிநீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடுசாக்கியர் கூட்டமுங்கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத்தவர்பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலரவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பாண்டி நாட்டுத் தலைநகராகிய மதுரையிலே மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனர் என்னுமிருவரது வேண்கோளுக்கிசைந்து எழுந்தருளியிருந்த ஆளுடையபிள்ளையார் தம்மடியார் கூட்டத்தோடு வசிக்கும் திருமடத்தில் அருகர் அரசன் ஆணையால் தீக் கொளுவினர். இது அமணர் செயலன்று, அரசன் செயல் என்றுன்னி அத்தீயை வெப்பு நோயாகப் பையவே சென்று பாண்டியனைப் பற்றுமாறு பணித்தருளினர். தமதரசன் அவ்வெப்பு நோயைச் சகிக்கலாற்ருது துன்புறுதலைக் கண்டு மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும்அவ்வரசனது இசைவுபெற்றுஆளுடையபிள்ளையாரை அரசனிடத்துக் கருணை வைத்து அந்நோயைத் தீர்க்குமாறு வேண்டிக்கொண்டபோது ஆளுடையபிள்ளையார் திருக்கோயிலையடைந்து இறைவனது அருளை நாடித் தேர்ந்து அரசிருக்கையை யடைந்து அவனது வேண்டு கோளின்

படியும் சமணர்களோடு செய்த ஏற்பாட்டின் படியும், பாண்டியனது வலப்பால் வெப்பைத் திருவாலவாய் அண்ணலாரது திருநீறே மந்திரமும் மருந்து மாகித் தீர்க்கும் என்று இத்திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருநனிபள்ளி

பண்-பியந்தைக்காந்தாரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

காரைகள் கூகைமுல்லை களவாகை
யீகைபடர்தொ டரிகள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடமர்ந்த
சிவன்மேய சோலைநகர் தான்
தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல் வாரிவயன்மேதி வைகும்
நனிபள்ளி போலும் நமர்காள். 1

கடல்வரை யோதம்மல்கு கழிகானல் பானல்
கமழ் காழி யென்று கருதப்
படுபொரு ளாறுநாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்ற அத்தர் பியன்மே லிருந்தி
னிசையா லுரைத்த பனுவல்
நடுவிரு ளாடுமெந்தை நனிபள்ளியுள்க
வினைகெடுதல் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

பொது

கோளறு திருப்பதிகம்

பண் - பியந்தைக்காந்தாரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமேபுகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடவா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலை யானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனேடும் உடனுய்!
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனுல்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னேடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

இப்பதிகத்தில் இப்பாடல் விடுபட்டதற்கு வருந்துகின்றேன். உரிய இடத்தில் சேர்த்துப் படனம் செய்யவும்.

க. சோ.

ஆளுடைய பிள்ளையார் அப்பமூர்த்திகளுடன் தல யாத்திரை செய்து கொண்டு வந்து திருமறைக்காட்டில் எழுந்தருளியிருந்தார். பாண்டி நாட்டில் மதுரையில் அக் காலத்து அரசியற்றிவந்த கூன்பாண்டியர் ஊழ்வினைத் திறத்தால் உண்மை நெறியாகிய சைவத்தை விட்டுச் சமண் சமயப் படுகுழியில் வீழ்ந்தாழ்ந்தார். அரசன் போல அந்நாட்டு மக்களும் அவ்வாறாயினர். இதனைப் பொறாத மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், பிள்ளையார் சிவஞானப் பாலுண்டு சிவத்தலங்கள் தோறும் யாத்திரை செய்து பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு திருமறைக் காட்டில் வந்து தங்கியிருப்பதைக் கேள்விப்பட்டார்.

தம் நாடு மீண்டும் சைவநெறியில் ஈடுபடவேண்டும் என்றெண்ணி ஓலையனுப்பி அவ்விரண்டு நாயன்மார்களையும் தம் நாட்டிற்கு எழுந்தருளி வர வேண்டினார்கள். ஞானசம்ப தரும் மகிழ்ச்சியுடன் மதுரைக்குச் செல்லப் புறப்பட்டார். இதனை அறிந்த அப்பமூர்த்திகள் பிள்ளையாரை நோக்கிப் "பிள்ளாய், அமணர் கொடுந் தொழிலில் வல்லவர், தேவரீர் திருமேனியால் எளியர். அன்றியும் உமக்கு நாள்களும் கோள்களும் வலியில. ஆதலின் ஆங்கெழுந்தருள யான் இசையேன்" என்றார். அதனைக் கேட்ட பிள்ளையார் "அப்பரே, பாண்டிநாட்டினை யடைந்து நவை நெறி நீக்கித் திருநீற்று நெறியினை வளர்த்தன்றி வேறொன்றும் செய் யேன். இஃது உம்மாணை, திருவருள் நெறியிற் செல்லும் சிவனடியார்களை நாள்களும் கோள்களும் ஒன்றுஞ் செய்யா. நல்லனவுமாகும். இறைவன் திருவடித் துணையுமுண்டு" என்று இத்திருப்பதிகத்தைப் பாடி அப்பமூர்த்திகளிடம் விடைபெற்றுக் கொண்டு பாண்டி நாட்டுக்கு எழுந்தருளினர்.

திருநாரையூர்

பண் - பியந்தைக்காந்தாரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

உரையினில் வந்தபாவம் உணர்நோய்களும்ம
செயல் தீங்கு குற்றமுலகில்
வரையினி லாமைசெய்த அவைதீரும் வண்ணம்
மிகவேத்தி நித்தம் நினைமின்
வரைசிலை யாகஅன்று மதில் மூன்றெரித்து
வளர்கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 1

ஊனடை கின்றகுற்ற முதலாகி யுற்ற
பிணிநோ யொருங்கும் உயரும்
வானடை கின்றவெள்ளை மதிசூடு சென்னி
விதியான வேத விகிர்தன்
கானிடை யாடிபூதப் படை யான் இயங்கு
விடையான் இலங்கு முடிமேல்
தேனடை வண்டுபாடு சடையண்ணல் நண்ணு
திருநாரை யூர்கை தொழவே. 2

தனம்வரும் நன்மைக்குந் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற உடலின்
இனம்வள ரைவர் செய்யும் வினையங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொரு காலம்மூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன் றெரிந்த அவுணர்
சினமொரு காலழித்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 7

எரியொரு வண்ணமாய உருவானை எந்தை
பெருமானை யுள்கி நினையார்
திரிபுர மன்றுசெற்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்தகாழி மறைஞான பந்தன்
உரைமாலை பத்தும் மொழிவார்
திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க
துளதென்பர் செம்மை யினரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநெல்வாயில் அரத்துறை

பண் – பியந்தைக்காந்தாரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமான்
ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக்
கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில்
அரத்துறை யடிகள்தம் அருளே. 1

ஈர வார்சடை தன்மேல்
இளம்பிறை யணிந்தஎம் பெருமான்
சீருஞ் செல்வமும் ஏத்தார்
சிதடர்கள் தொழச்செல்வ தன்றால்
வாரி மாமல ருந்தி
வருபுனல் நிவாமல்கு கரைமேல்

ஆருஞ் சோலை நெல்வாயில்
அரத்துறை யடிகள்தம் அருளே. 2

கறையி ஞர்பொழில் சூழ்ந்த
காழியுள் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த
அரத்துறை யடிகள்தம் அருளை
முறைமை யாற்சொன்ன பாடல்
மொழியும் மாந்தர்தம் வினைபோய்ப்
பறையும் ஐயுற வில்லைப்
பாட்டிவை பத்தும்வல் லார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் திருப்பெண்ணு கடத்தை வணங்கித் திருநெல்வாயில் அரத்துறையை வணங்க எழுந்தருளிய போது, இதற்கு முன்னெல்லாம் தமது பிதாவின் தோள் மேலமர்ந்தருளும் நியம மொழிந்து தம் திருவடித்தாமரைகள் நோவுறும்படி பையப்பையத் தரையில் நடந்து சென்ருர். சூரியனும் மறைந்து இரவு வந்தது. அரத்துறை நாதர் பிள்ளையாரின் வருத்தம் பொருதவராய் இனி ஆளுடையபிள்ளையார் ஏறி யாத் திரை செய்ய முத்துப்பல்லக்கும், இட மூத்துக்குடையும், இவரது பிரபாவங்களைக் கூறி யூதுவதற்கு முத்துச் சின்னங் களும் உதவ எண்ணினர். அவ்வூர் வாசிகளின் கனவில் பெரு மான் தோன்றி "ஞானசம்பந்தன் நம்பாலணைகின்ருன், அவ னுக்குக் கொடுக்குமாறு முத்துச் சிவிகையும், முத்துக் குடைகளும், முத்துச் சின்னங்களும் நம் திருக்கோயிலில் வைத்துள்ளோம். நீங்கள் அவைகளையவன்பால் கொண்டு கொடுங்கள்" என்று பணித்தருளினர். அவர்களும் விடி யற்காலையில் கோயிலைத்திறந்து பார்க்க அப்பொருள்கள் இருப்பக் கண்டார். அதேயிரவில் திருஞான சம்பந்தர் கன விலும் எழுந்தருளி "மேற்படிப் பொருள்களை இந் நகர

வாசிகள் உன்னிடம் சேர்ப்பிப்பார்கள். அவைகளை ஏற்றுக் கொள்வாயாக'' என்றும் பணித்தார். உடனே அவ்வூரார் அப்பொருள்களைக்கொண்டு தக்க மரியாதைகளுடன் திருஞானசம்பந்தரிடம் பெருமான் கனவில் பணித்ததைத் தெரிவித்தார்கள். திருஞானசம்பந்தர் தம்கனவும் ஒத்திருந்ததால் அவற்றைப் பெருமான் திருவருளை நினைந்து வணங்கியேற்றுக் கொண்டார். திருவைந்தெழுத்தை யோதி அம்முத்துச்சிவிகையில் ஏறியருளினர். இச்சந்தர்ப்பத்தில் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்

பண் - பியந்தைக்காந்தாரம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பட்டம் பால்நிற மதியம்
படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிருள் ஆடும்
நாதனுர் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும்
பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும்
வர்த்தமா னீச்சரத் தாரே. 1

தொண்டர் தண்கயம் மூழ்கித்
துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக்
குறிப்பறி முருகன்செய் கோலம்

கண்டு கண்டுகண் குளிரக்
களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர்
வர்த்தமா னீச்சரத் தாரே. 3

தென்சொல் விஞ்சமர் வடசொல்
திசைமொழி யெழில்நரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத்
தொழுதெழு தொல்புக லூரில்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய
அலைகடல் கடைய அன்றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர்
வர்த்தமா னீச்சரத் தாரே. 7

பொங்கு தண்புனல் சூழ்ந்து
போதணி பொழிற்புக லூரில்
மங்குல் மாமதி தவழும்
வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான
சம்பந்தன் தண்டமிழ் பத்தும்
எங்கும் ஏத்தவல் லார்கள்
எய்துவர் இமையவ ருலகே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கீழ்வேளூர்

பண் - நட்டராகம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மின்னு லாவிய சடையினர் விடையினர்
மிளிர்தரும் அரவோடும்

பன்னு லாவிய மறையொலி நாவினர்
கறையணி கண்டத்தர்
பொன்னு லாவிய கொன்றையந் தாரினர்
புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னு லாவிய சிந்தையர் மேல்வினை
யோடிட வீடாமே. 1

நீரு லாவிய சடையிடை யரவொடு
மதிசிர நிரைமாலை
வாரு லாவிய வனமுலை யவளொடு
மணிசிலம் பவையார்க்க
ஏரு லாவிய இறைவன துறைவிடம்
எழில்திகழ் கீழ்வேளூர்
சீரு லாவிய சிந்தைசெய் தணைபவர்
பிணியொடு வினைபோமே. 2

குருண்ட வார்குழற் சடையுடைக்
குழகனை அழகமர் கீழ்வேளூர்த்
திரண்ட மாமறை யவர்தொழும்
பெருந்திருக் கோயிலெம் பெருமானை
இருண்ட மேதியின் இனம்மிகு வயல்மல்கு
புகலிமன் சம்பந்தன்
தெருண்ட பாடல்வல் லாரவர்
சிவகதி பெறுவது திடமாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருவலஞ்சுழி

பண் - நட்டராகம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வயாரப்
பன்னியாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே. 1

விண்டொ ழிந்தன நம்முடை
வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத்
தாங்கிய இறைவனை உலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையொர் பங்கனை
வலஞ்சுழி யிடமாகக்
கொண்ட நாதன் மெய்த் தொழில்புரி
தொண்டரோ டினிதிருந் தமையாலே. 2

மாதொர் கூறனை வலஞ்சுழி
மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்
பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக்
கேட்டுகந் தவர் தம்மை
வாதி யாவினை மறுமைக்கும்
இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம்

பண் — நட்டராகம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணர
வா அனல் எரிஅம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. 1

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. 2

மாடெ லாம்மண முரசெனக்
கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை அண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருவாய்மூர்

பண்-நட்டராகம் (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரென உமைபாடத்
 தாளம் இடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த்
 தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருள்நல்கி
 வெண்ணீ றணிந்தோர் சென்னியின் மேல்
வளரிள மதியமொ டிவர்காணீர்
 வாய்மூ ரடிகள் வருவாரே. 1

வெந்தழல் வடிவினர் பொடிப்பூசி
 விரிதரு கோவண வுடைமேலோர்
பந்தஞ்செய் தரவசைத் தொலிபாடிப்
 பலபல கடைதொறும் பலிதேர்வார்
சிந்தனை புகுந்தெனக் கருள்நல்கிச்
 செஞ்சுடர் வண்ணர்தம் அடிபரவ
வந்தனை பலசெய இவராணீர்
 வாய்மூ ரடிகள் வருவாரே. 2

திங்களொ டருவரைப் பொழிற்சோலைத்
 தேனலங் கானலந் திருவாய்மூர்
அங்கமொ டருமறை யொலிபாடல்
 அழல்நிற வண்ணர்தம் அடிபரவி
நங்கள்தம் வினைகெட மொழியவல்ல
 ஞானசம் பந்தன் தமிழ்மாலை
தங்கிய மனத்தினால் தொழுதெழுவார்
 தமர்நெறி யுலகுக்கோர் தவநெறியே. 11

திருச்சிற்றம்பலம்

திருகேதாரம்

பண் — செவ்வழி (2ம்- திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 1

பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே. 2

வாய்ந்த செந்நெல் விளைகழனி மல்கும்வயற்காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள்பத் தும்மிசைவல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாகேச்சரம்

பண் - செவ்வழி (2-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தழைகொள்சந் தும்அகிலும் மயிற்பீலி யுஞ்சாதியின்
பழமும் உந்திப் புனல்பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவில்வானோர் தொழநல்கு சீர்மல்கு நாகேச்சரத்
தழகர் பாதந் தொழுதேத்த வல்லார்க் கழகாகுமே. 1

பெண்ணெணொர்பாகம் அடையச் சடையிற் புனல்பேணிய
வண்ணமான பெருமான் மருவும் இடம் மண்ணுளார்
நண்ணிநாளுந் தொழுதேத்தி நன்கெய்து நாகேச்சரம்
கண்ணினுற் காணவல்லா ரவர்கண் ணுடையார்களே. 2

கந்தநாறும் புனற்காவிரித் தென்கரைக் கண்ணுதல்
நந்திசேருந் திருநாகேச் சரத்தின் மேன்ஞானசம்
பந்தன்நாவிற் பனுவல் லிவைபத்தும் வல்லார்கள்போய்
எந்தையீசன் இருக்கும் உலகெய்த வல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

கோயில்

பண் – காந்தாரபஞ்சமம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஆடினுய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினுயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினுய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினுயருளாய் சுருங்கஎம தொல்வினேயே. 1

கொட்டமேகம ழூங்குழலாளொடு
கூடினுயெரு தேறினுய்நுதல்
பட்டமேபுனேவாய் இசைபாடுவ பாரிடமா
நட்டமேநவில்வாய் மறையோர் தில்லே
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவாயிவைமேவியதென்னேகொலோ 2

நீலத்தார்கரிய மிடற்ருர்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணிஞர்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. 3

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும்இன்தமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்துசிற்றம்பலத்
தீசனை இசையாற் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை.

நாலடிமேல்வைப்பு

பண் - காந்தாரபஞ்சமம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்

தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை. யரனே. 2

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றா தென்நாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன் றினால்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலால் அரற்றுதென்நா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழல் அலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் அடியலால் அரற்றுதென்நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 10

அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படையெம் இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்

வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் விய னுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய பிள்ளையார் திருவாவடுதுறையை யடைந்து பெருமானை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது இவர் பிதாவான சிவபாதவிருதயர் வந்து யாகஞ் செய்தற்குரிய காலம் வந்தமையால் தாம் சீகாழிக்குச் சென்று அதனைச் செய்யப் போன் வேண்டும் என்று விண்ணப்பித்தார். அதனைக் கேட்ட பிள்ளையார் இதனை நினைந்து அந்தமில்லாத பொருள் எனப்படுவது ஆவடுதுறையுள் எந்தையார் இணையடித் தலங்களன்றோ என எழுந்து திருக்கோயிலையடைந்து இறைவனைப் போற்றி, "என்னையடைந்து கேட்பாருக்குக் கொடுக்கும் செல்வப் பொருள் ஒன்றுமில்லேன், அஃது உன்னடியல்லது வேறொன்றுவதையு மறியேன்," என்று இறைவனது திருவருளை வினவி "இடரினுந்தளரினும்" எனும் இப்பதிகத்தைப் பாடியருளினர். அவ்வாறு தந்தையார் பொருட்டுப் பொருளை நச்சி இன் தமிழ்பாடிய பிள்ளையாரது இச்சையை நிரப்பியருள்கின்ற இறைவனது இன்னருளால் ஒரு சிவபூதம் பலிபீடத்தின் கண் பசும் பொன் நிறைந்த உலவாக்கிழி யொன்றை வைத்துப் பிள்ளையாரை நோக்கி 'இவ்வுலவாக்கிழி உமக்கு இறைவன் நல்கியது' என்றது. உடனே பிள்ளையார் அதனைக் கைகூப்பி வணங்கி நிலமுறப்பணிந்து எழுந்தார். எழுந்த அவர் அக்கிழியைத் தனது தலைமீது தரித்தெடுத்துத் தமது தந்தையார் கையில் கொடுத்து "வேதமுதல்வராகிய சிவபெருமானைப் பொருளாகக் கொண்டு தேவரீர் செய்யும் வேள்விக்கும் மற்றும் சீகாழியில் பிறர் செய்வனவற்றிற்கும் ஆகும். எவ்வளவு பொன் எடுப்பினும் குறையாது நிறைவதாகும்" என்று சொல்லி விடைகொடுத்து அவரைச் சீகாழிக்கு அனுப்பி விட்டுத் தாம் சில நாள் அங்கேயே தங்கியிருந்தார்

திருக்கொள்ளம்பூதூர்.

ஈரடிமேல்வைப்பு

பண் – காந்தாரபஞ்சமம் (3–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 1

ஓடம்வந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 6

கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

தென் தமிழ் நாட்டில் திருநீற்று நெறியை வளர்த்துத் திரும்பி எழுந்தருளும் பிள்ளையார் சோழநாட்டைஅடைந்து திருக்களர் முதலிய திருத்தலங்களை வணங்கி முள்ளிவாய்க் கரையை அணைந்தார். அணைந்தபோது அவ்வாறு ஆளி யங்கா வண்ணம் பெருகி யோடக் கோல் நிலைபெறாத காரணத்தால் ஓடக்காரர்கள் ஓடங்களை நிறுத்திப்போய் விட்டார்கள். கரையில் நின்ற பிள்ளையார் அடுத்த கரையில் தமக்கு முன்பாகத் திருக்கொள்ளம்பூதூர் தோன்றுதலைக் கண்டு அதனை விரைந்து சென்றுவணங்க விரும்பி ஓடத்தைக் கட்டவிழ்த்து ஆற்றில் விட்டுத் திருக்கூட்டத்

தவரையேற்றி நாவலமே கோலாக அதன்மேல் தாமும் நின்று நம்பர் தம்மைக் "கொட்டமே" எனும்இப்பதிகத்தைப் பாடி ஆற்றைக் கடந்து திருக்கூட்டத்துடன் இறைவரை அணைந்து வழிபட்டுத் "தாணுவே, ஆற்றின் கண் ஓடமுய்க்குந் தன்மையால் அருள் தந்த தலைவா, நாகப் பூணினுய், களிற்றுரிவை போர்த்த முக்கட் புனிதனே" என்று துதித்து அங்கு எழுந்தருளியிருந்தார்.

திருஇராமேச்சுரம்.

பண் – காந்தாரபஞ்சமம் (3–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அலைவளர் தண்மதி யோடயலே
யடக் கியுமை
முலைவளர் பாகம்மு யங்கவல்ல
முதல் வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகானல்
இரா மேச்சுரம்
தலை வளர்கோலநன் மாலையன்
தானிருந் தாட்சியே. 1

தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி ஞர்கள்தம் மேல்வினை வீடுமே. 2

பகலவன் மீதியங் காமைக்காத் தபதி யோன்றனை
இகலழி வித்தவன் ஏத்துகோ யில்இரா மேச்சுரம்

புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்தவல் லார்க்கில்லை
அல்லலே. 11

திருச்சிற்றம்பலம்.

பொது

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

பண் - காந்தாரபஞ்சமம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திரம் நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணுச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் சீகாழியில் எழுந்தருளியிருக்கையில் அவருக்கு உபநயனப் பருவம் வந்து எய்தியது. ஆளுடைய பிள்ளையார் உலகிறந்த சிவஞான முணரப் பெற்றாரேனும் பண்டைய முறைப்படிச் செய்யப்பெறும் உபநயனச் சடங்கினை மறையோர்கள் செய்ய மான் தோலுடன் கூடிய உபவீதத்தைத் தரித்தருளினர். ஒரு பிறப்பும் எய்தாதவராகிய இவர் இச்சடங்கினால் சாத்திர முறைப்படி இரு பிறப்பையும் அடைந்தவராய்ச் சடங்கினைச் செய்யும் மறையவர்களால் நான்கு வேதங்களையும், அச்சடங்கினுக்குரிய மந்திரத்தையும் தரப்பெற்றார். தந்தவராகிய அவர் யாவரும் பிள்ளையாரைத் தமது தியானப்பொருளாக் கருதி வணங்கித் துதித்து வழிபட்டு அவ் வேதங்களில் தமக்குள்ளனவாய ஐயங்களை யெல்லாம் கேட்டுத் தெளிந்தார்கள். அம் மறையவர்க்கும், உலகவர்க்கும் ஆன்மாக்களை உய்விக்கும் உண்மைப் பொருளைத் தெரிவிக்க விரும்பிய பிள்ளையார் பஞ்சாக்கரத் திருப்பதிகம் என்னும் இத் திருப்பதிகத்தை யோதி அதில் 2-ம் திருப்பாட்டில் வேதியர் யாவரும் தமது சந்திகளிலும், சிறப்பாக அந்தியிலும் ஓதவேண்டிய திருமந்திரம் திருவைந்தெழுத்தே என்று தெரிவிக்குமாறு "செந்தழலோம்பிய செம்மை வேதியர்க்கு, அந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இப்பதிகமே, போதிமங்கையில் ஞானசம்பந்தப் பிள்ளையார் முத்துச் சிவிகையில் அடியார் புடைசூழ எழுந்தருளி வருகையில், தம்மை எதிர்த்த புத்த நந்தியின் தலையில் இடி விழுமாறு ஓதப்பெற்றது.

———

திருப்பிரமபுரம்

பண் – கொல்லி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. 1

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. 2

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

திருந்துதேவன்குடி

பண் – கொல்லி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே. 1

வீதிபோக்கா வன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் ககப்படாப் பொருளையோர் விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதியந் தம்மிலா அடிகள்வே டங்களே. 2

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருஏடகம்

பண் - கொல்லி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே. 1

கொடிநெடு மாளிகை கோபுரங் குளிர்மதி
வடிவுற அமைதர மருவிய ஏடகத்
தடிகளை யடிபணிந் தரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள்போய் இல்லைய தாகுமே. 2

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரும் ஏடகத் தொருவனை
நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய்

பண் - கொல்லி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந்
தேவிகேள்
பானல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்றுநீபரி
வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திரு ஆலவாயரன்
நிற்கவே. 1

ஆகமத்தொடு மந்திரங்க ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த சனங்கள்வெட்குறு
பக்கமா
மாகதக்கரி போல்திரிந்து புரிந்துநின்றுணும் மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனலேன் திரு ஆலவாயரன்
நிற்கவே. 2

எக்கராம்அமண் கையருக்கெளி யேனலேன்திரு
ஆலவாய்ச்
சொக்கனென்னு ளிருக்கவே துளங்
கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன்தமிழ் நாதன் ஞானசம்
பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்த பத்தும் உரைப்பவர்க்கிடர்
இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

திருஆரூர்

பண் - கௌசிகம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ. 1

கருத்த னேகரு தார்புரம் மூன்றெய்த
ஒருத்த னேஉமை யாளொரு கூறனே
திருத்த னேதிரு ஆரூரெந் தீவண்ண
அருத்த வென்னெனை யஞ்சலென் றுததே. 2

வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னி வைத்த பிரான்திரு ஆரூரை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருஆலவாய்

பண் - கௌசிகம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 1

மத்த யானையின் ஈருரி மூடிய
அத்த னேயணி ஆலவா யாய்பணி

பொய்த்த வன்தவ வேடத்த ராஞ்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே. 2

செந்தெ ஞுமுர லுந்திரு ஆலவாய்
மைந்த னேயென்று வல்லம ஞுசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. 11

திருச்சிற்றம்பலம்

பொது

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - கௌசிகம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றிஞல்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ ஞர்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிங்கினங்
தக்கு மாலைகொ டங்கையி லெண் ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. 3

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணிஞல்

நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே 4

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. 7

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்

சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் திருநல்லூர்ப் பெருமணத்தை யடைந்து திருமணச் சடங்குகளைச் செய்தருளும்போது பொரியிட்டு எரிவலம் செய்யவேண்டிய சமயம் வர, அவர் எரியாவார் இறைவரன்ருே என்று தன் மனைவியைப் பற்றிக்கொண்டு சுற்றத்தோடும் திருக்கூட்டத்தோடும் திருக்கோயிலை யடைந்து இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே. இவ்வென் மனைவியோடும் அந்தமில் சிவன்ருள் சேர்வன் என்றெண்ணி இறைவனை நோக்கிப் பவமற முன்னுள் என்னை யாண்ட பண்பினுக் கேற்ப இந்நாள் உமது நவமலர்ப் பாதங் கூட்டியருளு மென்று விண்ணப்பித்துக் "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகம் பாடியருளினர். இதனைக் கேட்ட இறைவர் திருவருள் புரிந்து "நீயும் உன் மனைவியும் உனது புண்ணிய மணத்தில் வந்தவர்களோடும் எமது சோதியில் நண்ணுவீராக" என்று தாம் மூவுலகும் தமது ஞான வொளிப் பிழம்பால் விளங்குமாறு திவ்ய சோதியிலிங்கமாய்த் தோன்றித் திருக்கோயிலும் தமதொளியி லடங்குமாறு மேலோங்கித் தம்முள் ஒரு வாயிலை வகுத்துக் காட்டியருளினர். அதனைக் கண்ட பிள்ளையார் அச்சோதியை வணங்கி எழுந்து உலகமுய்யுமாறு வீட்டு நெறியினை அருளிச் செய்வாராய், இந் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடி இம் மணத்தில் வந்தவர் யாவரும் தமது இழிந்த பிறவி தீரும்படி இதனுட் புகக் கடவீர் என்று அருளிச் செய்தார். அப்போது திருமணத்தைச் சேவிக்க வந்தவரும், திருநீலநக்க நாயனர், முருக நாயனர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய திருத்தொண்டர்களும், சிவபாத விருதயரும், நம்பாண்டார் நம்பி முதலிய சுற்றத்தவர்களும் மற்றும் பிறரும் தத்தமது பன்னி

யர்களோடும் அச்சோதியிற் புகுந்தார்கள். எல்லோரும் புகுந்தபின், பிள்ளையார் தமது பன்னியைக் கைப்பற்றிக் கொண்டு அச்சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்து சிவபிரானுடன் கலந்து ஒன்றுனர்.

திருஆலவாய்

பண்–கௌசிகம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 1

சித்த னே திரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யென
எத்த ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற் காகவே. 2

அப்பன் ஆலவா யாதி யருளினல்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பொது

திருப்பாசுரம்

பண் — கௌசிகம் (3ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 1

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே. 2

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ. 3

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார். 4

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. 5

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்

கேடும் பிறப்பும் அறுக்கும் மெனக்கேட் டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே. 6

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்
கேட்டுமன்றே. 7

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே. 8

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே. 9

மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர்பக ரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலாலம் உண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே. 10

அற்றன் றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை
தெண்ணீர்
பற்றின் றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்பு நோக்கில்
பெற்றென் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே. 11

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே. 12

திருச்சிற்றம்பலம்

சிரபுரச்செல்வர் மதுரையில் பாண்டியரது அவைக் களத்துச் சமணர்களோடு அனல் வாதஞ்செய்து வென்ற பின்னர் மீண்டும் சமணர் கருத்துக்கு இசைந்து அரசரோடும் மற்றவரோடும் வைகையாற்றையடைந்து புனல் வாதம் செய்வாராயினர். சமணர்கள் தங்கள் மந்திரமாகிய அத்தி நாத்தியை எழுதி ஏட்டை ஆற்றில் இட அவை கடலை நோக்கி யோடின. உடனே பிள்ளையார் "வாழ்க அந்தணர்" என்னுமித் திருப்பாசுரத்தைப் பாடி எழுதிய திருவேட் டைத் தமது கையால் ஆற்றிலிட அது எதிரேறிச் சென்று இது பொருள் என யாவரும் அறியக்காட்டியது. இப்பாசு ரத்தில் "வேந்தனுமோங்குக" என அருளிச் செய்த பிள்ளை யாரது வாக்கின் மேன்மையினல் அரசரது கூன் நிமிர்ந்து நெடுமாறபாண்டியரானர்.

திருப்பனந்தாள்.

பண் — பஞ்சமம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினன் திகழ்
கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு
பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு
செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத்
தாடகை யீச்சரமே. 1

சூழ்தரு வல்வினையும் உடல்
தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக
ஏத்துமின் பாய்புனலும்

போழிள வெண்மதியும் அனல்
பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத்
தாடகை யீச்சரமே. 4

தண்வயல் சூழ்பனந்தாள் திருத்
தாடகை யீச்சரத்துக்
கண்ணய லேபிறையான் அவன்
றன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழால் மிகு
ஞானசம் பந்தன்நல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர்
தம்வினை பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்செங்காட்டங்குடி.

பண் – பஞ்சமம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பைங்கோட்டு மலர்ப்புன்னைப்
பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத்
தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய
சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி
விளையாடும் பெருமானே. 1

பொன்னம்பூங் கழிக்கானற்
புணர்துணையோ டுடன்வாழும்
அன்னங்காள் அன்றில்காள்
அகன்றும்போய் வருவீர்காள்
கன்னவில்தோள் சிறுத்தொண்டன்
கணபதீச் சரம்மேய
இன்னமுதன் இணையடிக்கீழ்
எனதல்லல் உரையீரே. 2

செந்தண்பூம் புனல்பரந்த
செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன்
சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி
அடிகளையே அடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன்
தமிழுரைப்போர் தக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பெருவேளூர்.

பண் - பஞ்சமம் (3-ம்திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அண்ணாவுங் கழுக்குன்றும்
ஆயமலை யவைவாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும்
வியந்தேத்த அருள்செய்வார்
கண்ணாவார் உலகுக்குக்
கருத்தானார் புரமெரித்த

பெண் ஆணும் பெருமானூர்
பெருவேளூர் பிரியாரே. 1

குணக்குந்தென் திசைக்கண்ணுங்
குடபாலும் வடபாலும்
கணக்கென்ன அருள்செய்வார்
கழிந்தோர்க்கு மொழிந்தோர்க்கும்
வணக்கஞ்செய் மனத்தராய்
வணங்காதார் தமக்கென்றும்
பிணக்கஞ்செய் பெருமானூர்
பெருவேளூர் பிரியாரே. 3

விழையாதார் விழைவார்போல்
விகிர்தங்கள் பலபேசிக்
குழையாதார் குழைவார்போற்
குணநல்ல பலகூறி
அழையாவும் அரற்றவும்
அடிவீழ்வார் தமக்கென்றும்
பிழையாத பெருமானூர்
பெருவேளூர் பிரியாரே. 5

பைம்பொன்சீர் மணிவாரிப்
பலவுஞ்சேர் கனியுந்தி
அம்பொன்செய் மடவரலார்
அணிமல்கு பெருவேளூர்
நம்பன்றன் கழல்பரவி
நவில்கின்ற மறைஞான
சம்பந்தன் தமிழ்வல்லார்க்
கருவினைநோய் சாராவே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி

திருவிராகம். பண்—சாதாரி (3–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்
மேவுமலை தன்னைவினவில்
ஏனமின மானினொடு கிள்ளைதினை கொள்ள
எழிலார் கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி
விலகுகா ளத்திமலையே. 1

வேயனைய தோளுமையொர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடுசுடு காடில்நட
மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும்
வேடன்மல ராகுநயனம்
காய்கணை யினாலிடந் தீசனடி
கூடுகா ளத்திமலையே. 4

காடதிட மாகநட மாடுசிவன்
மேவுகா ளத்திமலையை
மாடமொடு மாளிகைகள் நீடுவளர்
கொச்சைவயம் மன்னுதலைவன்
நாடுபல நீடுபுகழ் ஞானசம்
பந்தனுரை நல்லதமிழின்
பாடலொடு பாடுமிசை வல்லவர்கள்
நல்லர்பர லோகமெளிதே. 11

திருச்சிற்றம்பலம்

திருவைகாவூர் (திருவைக்காவில்)

திருவிராகம். பண் – சாதாரி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கோழைமிட றாககவி கோளுமில
வாகஇசை கூடுவகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன
சொல்மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின்
வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல்
சேறுசெயும் வைகாவிலே. 1

முற்றுநகை யாளுடைய முக்கண்முதல்
வன்திருவை காவிலதனைச்
செற்றமலி ஞர்சிரபு ரத்தலைவன்
ஞானசம் பந்தன்உரைசெய்
உற்றதமிழ் மாலையீ ரைந்துமிவை
வல்லவர் உருத்திரரெனப்
பெற்றமர லோகமிக வாழ்வர்பிரி
யாரவர்பெ ரும்புகழொடே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிறுகுடி

திருமுக்கால். பண் - சாதாரி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே

படமலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே. 1

சிற்றிடை யுடன்மகிழ் சிறுகுடி மேவிய
சுற்றிய சடைமுடி யீரே
சுற்றிய சடைமுடி யீரும தொழுகழல்
உற்றவர் உறுபிணி யிலரே. 2

தேனமர் பொழிலணி சிறுகுடி மேவிய
மானமர் கரமுடை யீரே
மானமர் கரமுடை யீருமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே. 11

திருச்சிற்றம்பலம்.

திருமாகறல்

திருவிராகம். பண் - சாதாரி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி
நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீருமுடனே. 1

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி
யாடல்கவி னெய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்

இலையின்மலி வேல்நுனைய சூலம்வல
 னேந்தியெரி புன்சடையினுன்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை
 யேத்தவினை யகலுமிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
 யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
 ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
 நாகமசை யாவழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
 யேத்தவினை பறையுமுடனே. 3

இங்குகதிர் முத்திினொடு பொன்மணிகள்
 உந்தியெழில் மெய்யுளுடனே
மங்கையரு மைந்தர்களு மன்னுபுன
 லாடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
 செஞ்சடையி னுனடியையே
நுங்கள்வினை தீரமிக வேத்திவழி
 பாடுநுகரா வெழுமினே. 4

துஞ்சுநறு நீலமிரு ணீங்கவொளி
 தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கணட
 மாடமலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
 வானொர்மழு வாளன்வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி
 யாரைநலி யாவினைகளே. 5

மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை
யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைக ளொல்கவுயர்
வானுலக மேறலெளிதே. 6

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரி கானன்மது வார்கழனி
மாகறலு ளானெழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சியடை
யாவினைக ளகலுமிகவே. 7

தூசுதுகி னீள்கொடிகள் மேகமொடு
தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி யீசனென வேத்தவினை
நிற்றலில போகுமுடனே. 8

தூயவிரி தாமரைக ணெய்தல் கழு
நீர்குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலு
மோசைபயின் மாகறலுளான்

சாயவிர லூன்றியவி ராவணன
தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுக ழேத்துமடி யார்கள்வினை
யாயினவு மகல்வதெளிதே. 9

காலினல பைங்கழல்க ணீண்முடியின்
மேலுணர்வு காமுறவினுர்
மாலுமல ரானுமறி யாமையெரி
யாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனும்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி
யாரையடையா வினைகளே. 10

கடைகொணெடு மாடமிக வோங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி
கூடுசம் பந்தனுரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறலு ளானடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள்
தொல்வினைக ளொல்குமுடனே. 11

திருச்சிற்றம்பலம்

திருபட்டீச்சரம்.

பண் – சாதாரி (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பாடல்மறை சூடல்மதி பல்வளையோர்
பாகமதில் மூன்றொர் கணையால்
கூடஎரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்பழையையுள்

மாடமழ பாடியுறை பட்டி சரம்
மேயகடி கட்டரவினுர்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே. 1

அந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறை யதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர
மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி
ஞானசம் பந்தன்அணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல
தொண்டர்வினை நிற்பதிலவே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவலஞ்சுழியை வழிபட்டு அங்கெழுந்தருளுயிருக்கும் நாள்களில் மிக்க கொடுமையோடு முதுவேனில் வந்தடைந்தது. அப்போது நாயனுர் அங்கு நின்றெழுந்து திருவாறைமேற்றளி, திருச்சத்திமுற்றம் முதலிய தலங்களை வழிபட்டுக் கொண்டு திருப்பட்டீச்சரத்தை யடைந்தார். அவர் முத்துப்பல்லக்கில் எழுந்தருளி வரும்போது வெயில் வெப்பத்தைத் தணித்தருளும் பொருட்டுத் தமிழ் விரகர் முடிமீது அவரறியாதபடி தண்டரளப் பந்தரெடுத்து ஒரு சிவபூதம் "பட்டீசர் எம்மை விடுத்தார்" என்று சொல்லியது. அவ்வார்த்தையும் முத்துப் பந்தரும் ஆகாயத்தில் ஒருங்கு தோன்றக் கண்ட ஆளுடைய பிள்ளையார் "இச் செய்கை பட்டீசர் செயலென்ருல் இதற்கு நாம் உடன்படத் தக்கது" என்று நிலமுறப் பணிந்து எழுந்தார். திருக்கூட்டத்தவர்கள் அப்பந்தரைக் காம்பிலே பிடித்தார்கள். சுவாமிகளும் அப்பந்தர் நிழற்றச் சென்று திருப்பட்டீச்சரத்தையடைந்து இறைவனை வணங்கி இப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருஆலவாய்.

நாலடிமேல்வைப்பு

பண் - பழம்பஞ்சுரம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வா தில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மா துட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 1

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வமுடைக் காரமண் தேரரை
எய்தி வா துசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 5

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாயக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய்

பண் - புறநீர்மை (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனல்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே. 1

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவினின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை யொழிந்திட்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற
ஆலவா யாவதும் இதுவே. 2

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவா யீசன்
திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்கோணமலை (திரிகோணமலை)

பண் – புறநீர்மை (3 - ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6-7

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்ப் பெருமணம்

பண் — அந்தாளிக்குறிஞ்சி (3–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே. 1

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் காட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணொர் பாகங்
கொண்டானே. 2

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழும் நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னூர்க்கே. 4

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 5

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டரு நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே. 6

மேகத்த கண்டனெண் தோலின்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 7

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. 8

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தும் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. 9

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்

நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாள்தொழ வீடெளி தாமே. 10

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருநல்லூர்ப் பெருமணத்தை யடைந்து திருமணப் பந்தரில் வேள்விச் சடங்கினை முற்றி எரிவலம் வரவேண்டிய சமயத்தில் எரியாவாரிறைவனே என்று திருக்கோயிலை யடைந்து தம்மை இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததை யுன்னித் தம் மனைவியாரோடு இறைவனடி சேரும் ஆதரவு பொங்குதலானும், தம் மணம் காண வந்த சுற்றத்தவரும் திருக்கூட்டத்தினரும் மற்றும் பிறரும் இறைவனடி எய்துதலை விரும்பியும், பிறவிப் பாசம் தீர்த்தலைச் செம்பொருளாகக் கொண்டு இறைவன் பாதநீழல் சேரும் பருவமீதென்று, இத்திருப்பதிகம் எடுத்துப் பாடி இறைவன் வகுத்துக் காட்டிய சுயஞ்சோதியில் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யருளிச் செய்து எல்லோரையும் புகுவித்துத் தாமும் தம் பன்னியோடு போத நிலை முடிந்தவழி புக்கொன்றி யுடனானர்.

———

உ

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணசாரம்

(கொற்றவன்குடி-உமாபதி சிவசாரிய சுவாமிகள் அருளியது)

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில்கொ றுக் கையரதிபர் புகழனார்பால்
மாற்றரும்அன் பினில்திலக வதியாம்மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயரம் நீங்கத்
துணைவரருள் தரவந்த சூலை நோயால்
மாற்றருநீள் இடரெய்திப் பாடலிபுத் திரத்தில்
பாழியொழித் தரன்அதிகைப் பதியில் வந்தார். 1

வந்துதமக் கையர்அருளால் நீறு சாத்தி
வண்டமிழால் நோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம் வேழம் வேலை நீந்தி
வியன்சூலம் கொடிஇடபம் விளங்கச் சாத்தி
அந்தமில்அப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்றுமறை அடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றில் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னாரே. 2

உ

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

பண் - கொல்லி (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியா துவணங் குவன்எப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றின்அகம்படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன்அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 1

நெஞ்சம் உமக்கே யிடமா கவைத்தேன்
நினையா தொருபோ தும்இருந் தறியேன்
வஞ்சம் இதுவொப் பதுகண் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
நணுகாமல் துரந் துகரந் துமிடீர்
அஞ்சே லுமென்னீர் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 2

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
சுடுகின் றதுசூ லைதவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும்வெண்
டலைகொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 3

முன்னம் அடியேன் அறியா மையினுன்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதான்
அன்ன நடையார் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 4

காத்தாள் பவர்கா வல்இகழ்ந் தமையாற்
கரைநின்ற வர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள்ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை இதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 5

சலம்பூ வொடுதூ பம்மறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்

உலர்ந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன்அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க் கையும்ஒண் பொருளும்
ஒருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே என்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தேன் அடியேன்அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 7

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடைஎம் பெருமான்
கலித்தே என்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 8

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மல்துரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மைஇனித் தெளியார்
அடியார் படுவ திதுவே யாகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 9

போர்த்தா யங்கொரா னையின்ஈ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே. 10

திருச்சிற்றம்பலம்

திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில், வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் திலகவதியார் என்ற ஒரு பெண் திலகமும், மருணீக்கியார் என்ற ஒரு மாணிக்கமும் திருவவதாரஞ் செய்தனர். தக்க வயதிலே கல்வி கற்கத் தொடங்கிக் கல்விகேள்விகளில் சிறந்தவர்களாக விளங்கினர். திலகவதியாருக்கு மங்கைப் பருவம் வந்தது. பெற்றோர்கள் அரசனிடம் சேனாபதித் தொழில் செய்யும் தங்கள் குலத்திற்கும் குடிக்கும் ஒத்தவராய் இருந்த கலிப்பகையாருக்கு மணஞ் செய்து கொடுக்க உறுதி செய்தனர்.

இதற்குள் புகழனார் பரமன் திருவடி நீழலையடைந்தனர். அக்காலத்திய வழக்கம்போல மாதினியாரும் உடன் கட்டை யேறி உயிர் நீத்தார். திலகவதியாரும் மருணீக்கியாரும் இளையவர்களாயிருந்ததால் உறவினர் மனந்தேற்ற ஒருவாறு தேறி இருந்தனர். இதற்குள் போருக்குச் சென்ற கலிப்பகையாரும் போரில் உயிர் நீத்துப் புகழுடம்பைப் பெற்றனர். இச்செய்தி கேட்ட திலகவதியாரும், பெற்றோரால் தனக்கெனப் பேசியிருந்த கலிப்பகையார் உயிர்நீத்த பின் தானும் இறக்கத்துணிந்தனர். அதுகாலை மருணீக்கியார் தமக்கை திருவடியில் வீழ்ந்து தாமும் உயிர் நீப்பதாகக் கூறி வருந்தினார். திலகவதியார் மனமிரங்கித் தம்பியார்

உளராக வேண்டுமென வைத்த தயாவால் அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கித் துறவுக் கோலத்துடன் வாழத் துணிந்தார். இதற்குள்ளாக மருணீக்கியாரும் பெற்றோர் இறந்ததையும் கலிப்பகையார் இறந்ததையும் நினைத்து யாக்கை நிலையாத தன்மையது என்று எண்ணிப் பல கலைகளையும் கற்றும் பல நல்லறங்களைச் செய்தும் வாழ்ந்தனர். இருந்தும் பல சமயங்களை யறிந்தும் "நம்பரருளாமையினல் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகினர்" நம் மருணீக்கியார். அவர்களும் இவருக்குத் தருமசேனர் என்னும் பட்டத்தையளித்து இவர் மூலம் தம் சமயத்தைப் பேணி வளர்த்து வந்தார்.

இதனை யுணர்ந்த திலகவதியார் தம்பியின் நிலையைக் கண்டு வருந்தித் திருவதிகையில் சரியைத்தொண்டுசெய்து வாழ்ந்து வந்தார்கள். தினமும் தம்பியின் நிலையை ஆண்டவனுக்கு முறையிட்டு வந்தார். ஆண்டவனும் அவர் கனவில் தோன்றி "தபோதனியே! உனது தம்பி முன்னமே முனியாய் எனை அடையத் தவஞ் செய்திருக்கின்ருன். சிறிது வழுவினற் சமணரை அடைந்தான். அவனை விரைவில் சூலைநோயைக் கொடுத்து ஆட்கொள்வோம் உன் கவலையொழி" என்று கூறி மறைந்தனர்.

சூலை நோயால் வருந்திய மருணீக்கியார், மருந்தாலும், சமண சமய மந்திரங்களாலும் அந்நோய் நீங்காதது கண்டு வருந்தி இச் செய்தியைத் தன் தமக்கைக்குச் சொல்லியனுப்பித் தன்னைக் காத்தருளுமாறு வேண்டினர். சைவ திலகமாக விளங்கும் திலகவதியார் சமணர் பள்ளிக்கு வந்து தம்பியைக் காண மறுத்தார். பின்பு மருணீக்கியார் தானக ஒரு இரவு ஒரு துணைவனுடன் திருவதிகை நோக்கி வந்துதம் தமக்கையார் திருவடியில் வீழ்ந்து தன்னைக் காக்குமாறு வேண்டிக்கொண்டார். திலகவதியாரும் தம்மடியில் வீழ்ந்த தம்பியை எழும்படிச் சொல்லித் திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்தார். அவரும் அதனைத் தம்மிரு கைகளிலேற்று உடம்பு முழுவ

தும் பூசிக்கொண்டு பூரித்தார். பின் இருவருமாக திருவதிகை வீரட்டானேசுவரர் திருக்கோயிலுக்குள் சென்று பெருமான் திருவடியில்வீழ்ந்து எழுந்துநின்றதும் மருணீக்கீயார் சூலை நோய் தீர்ந்தது. பாடும் வன்மையையும் பெற்று விளங்கினர். உடனே ''கூற்ருயின வாறு விலக்ககிலீர்'' என்னும் இப்பதிகத்தைப் பாடி நின்ருர். சூலை நோயும் அடியோடு இவரை விட்டு நீங்கியது.

[குறிப்பு: வயிற்று வலியால் துன்பப்படுவோர் இன்றும் இப்பதிகத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதினல் நோய் நீங்குவது கண்கூடு.]

———

திருஅதிகை வீரட்டானம்

பண் — காந்தாரம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 1

பூண்டதோர் கேழல் எயிறும்
பொன்றிக ழாமை புரள
நீண்ட திண்டோள்வலஞ் சூழ்ந்து
நிலாக்கதிர் போலவெண் ணூலும்

காண்டகு புள்ளின் சிறகுங்
கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 2

நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தான்
ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார் நீற்றறையிலே வேகாது பிழைத்தும், நஞ்சு கலந்த பாற் சோற்றை உண்டு தங்கியும் விளங்குவதை யறிந்த மாபாவிக் கடையமணர் வாகீசத்திரு வடிகளைச் சினம் மிக்க கொலைக்களிற்றின் முன்னர் விட வேண்டுமென்று சொன்ன சொல்லை ஒப்பி முறை திறம்பிய பல்லவனும் அவ்வாறே அவர்மேல் யானையை யேவப் பணித்தான். பாவகாரிகளாகிய சமணர் அவ்வாறு செய்ய நாயனார் அதற்குச் சிறிது மஞ்சாது "சுண்ணவெண் சந்தனச்சாந்து" என்னுமிப்பதிகத்தை எடுத்துத் திருப்பாட்டு தோறும் தாம் வீரட்டேசுவரருடைய அடியவராதலையும் அதனாற்றும் அஞ்ச வேண்டாமையையும் சொல்லித் தம் பெருமானைச் சரணடைந்தபோது அந்த யானை தொண்டரை

வலமாகச் சூழ்ந்து எதிரே வணங்கிஎழுந்து மீண்டு தன்னை அவர் மேல் செலுத்தும் பாகரையும் சமணரையுங் கொன்று மிக்க ஆகுலத்தை விளைத்தமையின் எஞ்சி நின்றோர் யாவரும் ஓடி விலகினர்கள்.

திருவையாறு

பண் — காந்தாரம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 1

போழிளங் கண்ணியி னானைப்
பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றியென் றேத்தி
வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்தும்
ஐயா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக்
குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 2

திங்கள் மதிக்கண்ணி யானைத்
தேமொழி யாளொடும் பாடி
எங்கருள் நல்குங்கொ லெந்தை
எனக்கினி யென்னு வருவேன்
அங்கிள மங்கைய ராடும்
ஐயா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப்
பறந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனர் திருக்காளத்தியை அடைந்து வழிபட்டபோது உத்தர கயிலாயமாகிய திருநொடித் தான்மலையை அடைந்து வணங்க விரும்பிப் பலதலங்களை வணங்கிச் சென்று செல்லுதற்கரிய சுரத்தில் தலைப்பட்டு நடந்து தமது பல உறுப்புக்களுஞ் சிதைந்து சிறிதுஞ் சத்தியின்றி ஓரிடத்தில் கிடக்க இறைவர் ஒரு முனிவர் வடிவாய் முற்பட்டுத் தோன்றி அவரை "நீர் உமது அங்கங்களெல்லாம் சிதைய வருந்தி இவணடைந்ததேன்" என்று வினவினர். அதனைக் கேட்டும், அவரது திருவேடத்தைக் கண்டும் அயர்ச்சி நீங்கிச் சிறிது உணர்வெய்திய நாயனர் தமது கருத்தினைச் சொல்லியருளினர். முனிவரும் "தேவர்க்கும் அரிய திருக்கயிலை உமக்கு எளிதாகுமோ! இங்கு இம்முயற்சியில் இறப்பதனினுந் திரும்பிச் சென்று பிழைத்தல் நன்று" என்னலும் அதனைக் கேட்ட வாகீசப் பெருந்தகையார் "ஆளுநாயகன் திருக்கயிலையைக் கண்டல்லால் மாளுமிவ் வுடலைக்கொண்டு மீளேன்" என்று மறுத்தார். இறைவர் அவருறுதியைப் பாராட்டி ஆகாயத்திலே மறைந்து அசரீரியாய் அவரை எழுந்திருக்குமாறு பணித்துப் பின்னர் அங்குள்ள பொய்கையின் மூழ்கித்

திருவையாற்றிலுள்ள குளத்தின் வெளிவந்து தமது திருக் கயிலாயத் திருவோலக்கத்தை அங்குக் காணும்படிப் பணித்து எழுந்தருளினர். வாகீசப் பெருந்தகையாரும் அவ்வாறே செய்து திருவையாற்றில் நிற்பவுஞ் சரிப்பவு மான எல்லாம் தத்தமது துணைகளோடும் சிவமும் சத்தியு மாக விளங்குவதைக் கண்டு களித்துச் சந்நிதியடைந்து அது கயிலாயமானதையும் இறைவன் திருக்கயிலாயத் திருக்கோலத்தையுங்கண்டு தரிசித்துப் பேரானந்தத்தின் மூழ்கி "மாதர்ப் பிறைக்கண்ணி யானை" என்னுமிப்பதி கத்தையும் இன்னும் பல திருப்பதிகங்களையும் பாடி யருளினர்.

திருஆரூர்

பண் - காந்தாரம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பாடிளம் பூதத்தி னானும்
பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும்
ஆரு ரமர்ந்தஅம் மானே. 1

நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய் வானும்

முரசதிர்ந் தானைமுன் னோட
முன்பணிந் தன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 2

பையஞ் சுடர்விடு நாகப்
பள்ளிகொள் வானுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக்
கால்விர லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சின் அப்புறத் தானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சியேகம்பம்.

பண் — காந்தாரம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே 3

அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானைஎன்மனத்தேவைத்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - காந்தாரபஞ்சமம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென் றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

கோபம் மிகுந்த கொலைக்க ளிற்றை விட்டும் பதிகம் பாடி யாதொரு ஊறுபாடும் இல்லாதிருந்த வாகீசத் திருவடிகளைப் பார்த்து மானமும், பொருமையும், அச்சமும் மிகுந்த சமணர்கள் மீண்டும் பல்லவ அரசனையடைந்து

''தருமசேனர் நமது சமயத்தில் பயின்ற மந்திரம், பாவனை முதலிய நிலைகளால் பிழைத்துக்கொண்டார். அவரைத் தொலைத்தாலன்றி நீயும் நாங்களும் பிழைக்க இல்லோம்'' என்று கூற, அரசன் ''நமது தொல்லைச் சமயம் அழித்து நமக்கும் துயரம் விளைத்தவன் தன்னை யாது செய்வது'' என்று கேட்டான். அதற்குத் தாங்கள் எண்ணிய சூழ்ச்சியையே முடிக்கும் தொழிலுடையவர்களாகிய சமணர் ''அவரைக் கல்லுடன் கயிற்றினுற் பிணித்துக் கடலில் பாய்ச்சுக'' என்று கூற அரசனும் அவ்வாறே செய்யும்படிப் பணித்தான். கொடியவர்களாகிய சமணர்களும் அப்படியே செய்து முடித்தார்கள். சிந்தனை உறைப்புடைய மெய்த் தொண்டராகிய வாகீசர் ''எது எப்பரிசாயினுமாகுக யான் எந்தையை ஏத்துவன்'' என்று திருவைந்தெழுத்தைத் துதிக்கத் தொடங்குபவராய் ''சொற்றுணை வேதியன்'' என்னுமிப் பதிகத்தைப் பாடிய அளவில் அவரைப் பிணித்த பாசங்கள் அற அவரை ஏற்றிய கல்லே தெப்பமாக, அதன்மீது மிதந் தருளினுர்கள். முன் மிக்க நோன்பு இயற்றியவனுன வருணனும் அவரைத் தன் முதுகின்மீது சுமந்துகொண்டு வந்து திருப்பாதிரிப்புலியூருக்கு அருகே கரையேற விட்டான். நாயனுரும் பல்லாயிரந் திருக்கூட்டத்தினருடன் அரவொலியினிடையே திருக்கோயிலுக் கெழுந்தருளினர்.

திருப்பழனம்

பண் — பழந்தக்கராகம் (4 - ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொலலீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானே. 1

மண்பொருந்திவாழ்பவர்க்கும்மாதீர்த்தவேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போதத்துங்கைவிடநான்கடவேனோ 5

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர்

பண் — இந்தளம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே. 1

மேகநல் ஊர்தியர் மின்போல் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையோர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. 2

கறுத்தார் மணிகண்டங் கால்விர லூன்றி
இறுத்தார் இலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலனைந்தும் ஆயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

திருஅங்கமாலை பண் - சாதாரி (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய்-தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய். 1

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5

நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய் 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால்அட்டிப் போற்றி யென்னுதஇவ்
ஆக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென் 9

உற்று ராருளரோ - உயிர்
கொண்டு போம் பொழுது
குற்று லத்துறை கூத்தனல் லால்நமக
குற்றார் ஆருளரோ. 10

இறுமாந் திருப்பன்கொலோ – ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன் 12

திருச்சிற்றம்பலம்

———

பொது

விடந்தீர்த்த திருப்பதிகம். பண் - இந்தளம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே. 1

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவர் எய்தின தாமே. 2

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே. 3

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே. 4

அஞ்சுகொ லாமவர் ஆடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னுவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவர் ஆடின தாமே. 5

ஆறுகொ லாமவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக ஞர்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. 6

ஏழுகொ லாமவர் ஊழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாமவர் ஆளு முலகங்கள்
ஏழுகொ லாம்இசை யாக்கின தாமே. 7

எட்டுக்கொ லாமவர் ஈறில் பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடு மினமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. 8

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடங் தானே. 9

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுங்நெரிங் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே. 10

திருச்சிற்றம்பலம்

திருநல்லூரை வணங்கி வழிபட்ட திருநாவுக்கரசு நாயனர் திருப்பழனத்தை வணங்கும் பொருட்டு வரும்போது திங்களூரில் அந்தணர் பெருமாளுகிய அப்பூதியடிகள் நாயனர் தம்மிடத்து எல்லையில்லாத பேரன்பு கொண்டு தாம் செய்த அறங்களையெல்லாம் வாகீசரது என்றும், தம் மக்களெல்லாம் திருநாவுக்கரச ரென்றும் சொல்லி மேம்படுவதைக் கேள்வியுற்று அவர் மனையினெய்தினர். அதையறிந்த

அப்பூதியடிகள் பெருமகிழ்ச்சி யெய்தி நாயனுரை வணங்கி வழிபட்டுத் தமது மனேயிலே திருவமுது கொள்ளக் குறை யிரந்தார். அடிகளும் அதனுக் கிசைந்தருளினுர். அப்பூதியடி களும் பொருந்துமாறு போசனமும் கறிகளும் சுவைபடச் செய்வித்ததன் பின் நாயனுரை உண்பிக்கத் தமது மூத்த மகனுன மூத்த திருநாவுக்கரசைத் தோட்டத்திற்குச் சென்று குருநாளக்குருத் தரிந்துகொண்டு வர விடுத்தார். அப்பிள்ளேயும் நல்ல தாய் தந்தை யேவ நானிது செயப் பெற்றேனென்று சென்று குருத்தரியும் போது பாம்பு தீண்ட ஓடோடியும் வந்து குருத்தைத் தாயார் கையில் கொடுத்து வீழ்ந்திறந்தான். அவனது பெற்ரேர் இது நாயனுர் உணவெடுத்தற்குத் தடையாகும் என்று என் ணிச் சவத்தை மறைத்து நாயனுரை உண்பிக்கத் தொடங்கி ஞர்கள். எனினும், அடிகள் திருவருளால் தமது திருவுள் ளத்திற் ரேன்றிய தடுமாற்றத்தால் அதனையறிந்து அவர்க ளது அன்பின் பொருட்டு அளவிறந்த அருள் கொண்டு அச் சவத்தைத் திருப்பழனத்து இறைவரது திருமுன் கொணர் வித்து ''ஒன்று கொலாம்'' என்னுமிப்பதிகத்தை எடுத்து அதில் இறைவனது சீரெல்லாம் பாடி அப்பிள்ளேயை எழுப்பியருளினுர்.

திருவாரூர்

திருவாதிரைத் திருப்பதிகம் பண் – குறிஞ்சி (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலே மாலே விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 1

நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்(கு)
அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 2

பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்(து)
ஓரூர் ஒழியா துலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரூ ரன்றன் ஆதிரை நாளால் அதுவண்ணம். 11

திருச்சிற்றம்பலம்.

கோயில்

திருநேரிசை பண் – கொல்லி (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன்
என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை
அம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வாறே. 1

கருத்தனாய்ப் பாட மாட்டேன்
காம்பன தோளி பங்கா
ஒருத்தரால் அறிய வொண்ணாத்
திருவுரு வுடைய சோதீ

திருத்தமாந் தில்லை தன்னுள்
திகழ்ந்தசிற் றம்ப லத்தே
நிருத்தம்நான் காண வேண்டி
நேர்பட வந்த வாறே. 2

மண்ணுண்ட மால வனும்
மலர்மிசை மன்னி னானும்
விண்ணுண்ட திருவு ருவம்
விரும்பினார் காண மாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்க
தில்லைச்சிற் றம்ப லத்தே
பண்ணுண்ட பாட லோடும்
பரமநீ யாடு மாறே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூர் வீரட்டம்

திருநேரிசை (4-ம் திருமுறை)

மண்ணிடைக் குரம்பை தன்னை
மதித்துநீர் மைய லெய்தில்
விண்ணிடைத் தரும ராசன்
வேண்டினால் விலக்கு வாரார்
பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க் கென்றுங்
கண்ணிடை மணியர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே.

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தற்குப் பத்த ராகி

அரும்பொடு மலர்கள் கொண்டாங்
　　கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
　　விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
　　கடவூர்வீ ரட்ட னாரே. 4

திருச்சிற்றம்பலம்

—

திருவையாறு

திருநேரிசை 4-ம் (திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சகமலா தடிமை யில்லை
　　தானலால் துணையு மில்லை
நகமெலாந் தேயக் கையால்
　　நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க
　　முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயி லில்லை
　　ஐயன்ஐ யாற னார்க்கே. 8

திருச்சிற்றம்பலம்

——

திருஒற்றியூர்

திருநேரிசை (4—ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஓம்பினேன் கூட்டை வாளா
உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின் வாய்த் தேரைபோல
பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
ஒற்றியூ ருடைய கோவே. 1

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணு(து)
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூ ருடைய கோவே. 2

திருச்சிற்றம்பலம்

திருக்குறுக்கை வீரட்டம்

திருநேரிசை (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நீற்றினை நிறையப் பூசி
நித்தலும் நியமஞ் செய்து

ஆற்றுநீர் பூரித் தாட்டும்
அந்தண னுரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென் று
தருமரா சற்காய்:வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. 2

தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்த்
தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 3

சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங் கணானு மாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 4

ஏறுடன் ஏழ டர்த்தான்
எண்ணிஆ யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை
அர்ச்சித்தான் அடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய
மெய்ம்மலர்க் கண்ணை யீண்ட...

கூறுமோர் ஆழி ஈந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 5

கல்லினால் எறிந்து கஞ்சி
தாமுணுஞ் சாக்கி யனார்
நெல்லினார் சோறு ணாமே
நீள்விசும் பாள வைத்தார்
எல்லியாங் கெரிகை ஏந்தி
எழில்திகழ் நட்ட மாடிக்
கொல்லியாம் பண்உ கந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 6

காப்பதோர் வில்லும் அம்புங்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 7

நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலக மெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. 8

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை 4-ம் (திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஆத்தமாம் அயனு மாலும்
அன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தம்எம் பெருமா னென்று
தொழுதுதோத் திரங்கள் சொல்லத்
தீர்த்தமாம் அட்ட மீமுன்
சீருடை ஏழு நாளுங்
கூத்தராய் வீதி போந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 2

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை

திருநேரிசை (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 1

வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர்கொண்டுபோற்றச்
சக்கரங் கொடுப்பர் போலுந் தானவர் தலைவர் போலும்
துக்கமா மூடர் தம்மைத் துயரிலே வீழ்ப்பர் போலும்
அக்கரை ஆர்ப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 6

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை

திருநேரிசை (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எண்ணகத் தில்லை அல்லர் உளரல்லர் இமவான் பெற்ற
பெண்ணகத் தரையர் காற்றில் பெருவலி யிருவ ராகி
மண்ணகத் தைவர் நீரில் நால்வர் தீ யதனில் மூவர்
விண்ணகத் தொருவர் வீழி மிழலையுள் விகிர்த ளுரே. 6

நீற்றினை நிறையப் பூசி நித்தல்ஆ யிரம்பூக் கொண்டு
ஏற்றுழியொருநாளொன்றுகுறையக்கண் நிறையவிட்ட
ஆற்றலுக்காழிநல்கியவன்கொணர்ந்திழிச்சுங்கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த ளுரே 8

திருச்சிற்றம்பலம்

திருநாகேச்சரம்

திருநேரிசை (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

கச்சைசேர்அரவர்போலுங்கறையணிமிடற்றர் போலும்
பிச்சைகொண் டுண்பர் போலும் பேரரு ளாளர் போலும்
இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச் சரவ ளுரே. 1

கற்றுணை வில்ல தாகக் கடியரண் செற்றார் போலும்
பொற்றுணைப் பாதர் போலும் புலியதளுடையர்போலும்
சொற்றுணை மாலை கொண்டு தொழுதெழு வார்க்கட்
கெல்லாம்
நற்றுணை யாவர் போலும் நாகவீச் சரவ ளுரே. 3

திருச்சிற்றம்பலம்.

திருநனிபள்ளி

திருநேரிசை (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதின் நாளும் அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி அடிக ளாரே. 5

திருச்சிற்றம்பலம்

கோயில்

திருவிருத்தம் (4–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கருநட்ட கண்டனை அண்டத்
தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதில் எய்யவல்
லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக்
கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர்
கோனென்று வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான் அடியவற்காச்

சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு
மான்றன் திருக்குறிப்பே. 2

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு
வதேஇந்த மாநிலத்தே. 4

படைக்கல மாகஉன் நாமத்
தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்
பும்உனக் காட்செய் கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித் தூநீ றணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத் தரனே. 8

திருச்சிற்றம்பலம்

———

திருப்பிரமபுரம் (திருக்கழுமலம்)

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட
ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளினம் ஏந்தின
என்பர் நளிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்
தாடுங் கழுமலவர்க்
காளன்றி மற்று முண்டோ
அந்தணூழி அகலிடமே. 1

சடையார் கொடிநெடு மாடங்கள்
எங்குங் கலந்திலங்க
உடையான் உடைதலை மாலையுஞ்
சூடி உகந்தருளி
விடைதா னுடையஅவ் வேதியன்
வாழுங் கழுமலத்துள்
அடைவார் வினைக ளவைஎள்க
நாடொறும் ஆடுவரே. 2

கரையார் கடல்சூழ் இலங்கையர்
கோன்றன் முடிசிதறத்
தொலையா மலரடி ஊன்றலும்
உள்ளம் விதிர்விதிர்த்துத்
தலையாய்க் கிடந்துயர்ந் தான்றன்
கழுமலங் காண்பதற்கே
அலையாப் பரிசிவை நாடொறும்
நந்தமை ஆள்வனவே. 10

திருச்சிற்றம்பலம்

———

திருஒற்றியூர்

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சொல்லக் கருதிய தொன்றுண்டு
கேட்கில்தொண் டாயடைந்தார்
அல்லற் படக்கண்டு பின்னென்
கொடுத்தி அலைகொள்முந்நீர்
மல்லற் றிரைச்சங்க நித்திலங்
கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றுமொற்றி
யூருறை யுத்தமனே. 2

திருச்சிற்றம்பலம்

திருவையாறு

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச்
சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன
மொய்த் திருண்டு
பந்தித்து நின்ற பழவினை
தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை
யாறன் அடித்தலமே. 1

மணிநிறம் ஒப்பன பொன்னிறம்
மன்னின மின்னியல்வாய்
கணிநிற மன்ன கயிலைப்
பொருப்பன காதல்செய்யத்
துணிவன சீலத்த ராகித்
தொடர்ந்துவி டாததொண்டர்க்
கணியன சேயன தேவர்க்குஐ
யாறன் அடித்தலமே. 3

இருள்தரு துன்பப் படல
மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந் துண்பொருள்
நாடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக்
கொடுநர கக்குழிநின்(று)
அருள்தரு கைகொடுத் தேற்றும்ஐ
யாறன் அடித்தலமே. 4

எழுவாய் இறுவாய் இலாதன
வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன
மாநர கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன
மீட்பன மிக்கஅன்போ(டு)
அழுவார்க் கமுதங்கள் காண்கஐ
யாறன் அடித்தலமே. 5

துன்பக் கடலிடைத் தோணித்
தொழில்பூண்ட தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந்
திறத்தன மாற்றயலே

பொன்பட் டொழுகப் பொருந்தொளி
செய்யுமப் பொய்பொருந்தா
அன்பர்க் கணியன காண்கஐ
யாறன் அடித்தலமே. 6

பேணித் தொழுமவர் பொன்னுல
காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக்
கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்கம் ஒத்து மரகதம்
போன்று வயிரமன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும்ஐ
யாறன் அடித்தலமே. 16

ஓதிய ஞானமும் ஞானப்
பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு
மாவன விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறும்
ஒப்பன தூமதியோ(டு)
ஆதியும் அந்தமு மானஐ
யாறன் அடித்தலமே. 17

திருச்சிற்றம்பலம்

திருப்பாதிரிப்புலியூர்

திருவிருத்தம் (4–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு
மாயுடன் தோன்றினராய்

மூன்று யுலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன்
தன்னடி யோங்களுக்கே. 1

பற்றாய் நினைந்திடப் போதுநெஞ்
சேஇந்தப் பாரைமுற்றும்
சுற்றாய் அலைகடல் மூடினுங்
கண்டேன் புகல்நமக்கு
உற்றான் உமையவட் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி
னான்றன் மொய்கழலே. 2

விடையான் விரும்பியென் னுள்ளத்
திருந்தான் இனிநமக்கிங்
கடையா அவலம் அருவினை
சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல்
பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியார் அடியடி
யோங்கட் கரியதுண்டே. 3

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்

தருவாய் சிவகதி நீபா
திரிப்புலியூர் அரனே. 6

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே. 8

மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே. 9

திருந்தா அமணர்தந் தீநெறிப்
பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம்
புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கன் உடல்நெரித்
தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற
வாமல்வந் தேன்றுகொள்ளே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சத்திமுற்றம்

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கோவாய் முடுகி யடுதிறற்
கூற்றம் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற்
பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்
டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்
துறையுஞ் சிவக்கொழுந்தே. 1

காய்ந்தாய் அனங்கன் உடலம்
பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தாய் உயிர்செகப் பாதம்
பணிவார்தம் பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பாய் அடியேற்
கருளாயுன் அன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத்
துறையுஞ் சிவக்கொழுந்தே. 2

பொறித்தேர் அரக்கன் பொருப்பெடுப்
புற்றவன் பொன்முடிதோள்
இறத்தாள் ஒருவிரல் ஊன்றிட்
டலற இரங்கிஒள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன்
செய்குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத்
துறையுஞ் சிவக்கொழுந்தே. 10

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

படவேர் அரவல்குற் பாவைநல்
 லீர்பக லேயொருவர்
இடுவார் இடைப்பலி கொள்பவர்
 போலவந் தில்புகுந்து
நடவார் அடிகள் நடம்பயின்
 றாடிய கூத்தர்கொலோ
வடபாற் கயிலையுந் தென்பால்நல்
 லூருந்தம் வாழ்பதியே. 3

நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ்
 சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று
 சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடும்
 அங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன்
 றேஇவ் வகலிடமே. 7

திருச்சிற்றம்பலம்

திருஇன்னம்பர்

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மன்னும் மலைமகள் கையால்
 வருடின மாமறைகள்

சொன்ன துறைதொறுந் தூப்பொரு
ளாயின தூக்கமலத்
தன்ன வடிவின அன்புடைத்
தொண்டர்க் கமுதரும்பி
இன்னல் களைவன இன்னம்ப
ரான்றன் இணையடியே. 1

போற்றுந் தகையன பொல்லா
முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறு
சமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய
தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்ப
ரான்றன் இணையடியே. 7

திருச்சிற்றம்பலம்

திருஆரூர்

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன்
ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை
நீணா டறியுமன்றே. 2

திருச்சிற்றம்பலம்

திருநாகைக்காரோணம்

திருவிருத்தம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தூமென் மலர்க்கணை கோத்துத்தீ
வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடல்
நாகைக் காரோணநின்
நாமம் பரவி நமச்சிவா
யஎன் னும்அஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதிகண்
டாய்எங்கள் சங்கரனே. 3

செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை
வெண்ணகைத் தேன்மொழியார்
வந்து வலஞ்செய்து மாநடம்
ஆட மலிந்தசெல்வக்
கந்த மலிபொழில் சூழ்கடல்
நாகைக்கா ரோணமென்றும்
சிந்தைசெய் வாரைப் பிரியா
திருக்குந் திருமங்கையே. 5

திருச்சிற்றம்பலம்

திருத்தூங்கானைமாடம்

திருவிருத்தம் (4–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்

என்னுவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னுரு மூவிலைச் சூலமென்
மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே. 1

ஆவா சிறுதொண்ட னென்நினைந்
தானென் றரும்பிணிநோய்
காவா தொழியிற் கலக்குமுன்
மேற்பழி காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப்
பூசுசெந் தாமரையின்
பூவார் கடந்தையுள் தூங்கானை
மாடத்தெம் புண்ணியனே. 2

கடவுந் திகிரி கடவா
தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத்
தாய்பனி மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை ஏன்றுகொள்
ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை
மாடத்தெந் தத்துவனே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருந்த திருநாவுக்கரசர் இறைவனது பல தலங்களையும் கண்டு வணங்கிப் பாடித் தொண்டு செய்ய விரும்பிப் புறப்பட்டுத் திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களை வழிபட்டுத் திருப்பெண்ணாகடத்தை யடைந்து ஆண்டுள்ள திருத்தூங் கானைமாடத் திருக்கோயிலைச் சேர்ந்து முன்னவனை

யிறைஞ்சி நின்று, "எம்பிரானே புன்னெறியாகிய சமண சமயத் தொடக்குண்டு வந்த இந்த உடலோடு வாழத் தரிக்கமாட்டேன்; அதனைப் பொருந்தி வாழ்வதற்கு உன்னுடைய சூலவிடப இலச்சினைகளை இட்டருள வேண்டும்" என்று" பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்" என்னும் இப் பதிகத்தைப் பாடியருளினர். உடனே இறைவன் திருவருளால் ஒரு சிவபூதம் ஒருவருமறியாமல் ஆண்ட அரசினது திருத்தோளில் மூவிலைச் சூலத்தைச் சின விடையினுடன் சாத்திச் சென்றது. அதனைக் கண்ட தமிழ் முனிவர் மனங்களித்துத் திருவருளினை நினைந்து ஆனந்த அருவி பொழிய விழுந்தெழுந்து ஆர்வம்மிக்க சிந்தையுடன் உய்ந்தொழிந்தேன் என்று அடிபரவிப் பிற பதிகளையும் வணங்கிச் சென்றனர்.

கோயில்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. 1

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்
தாடி பாதமென் நெஞ்சுள் இருக்கவே. 10

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு

திருக்குறுந்தொகை (5–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைக்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருமறைக்காட்டை யடைந்து திருக்கோயிலிற் சென்று வலம்வந்து கடவுள் திருமுன்சென்று, முன்னாள் மறைகள் வழிபாடு செய்து திருக்காப்பிட்ட திருக்கதவம்

திறக்கப்பெருமையால். அங்குள்ளவர்கள் வேறு வழியாற் சென்று கடவுளை வணங்குகின்ருர்கள் என்பதைக் கேட்டனர். அப்போது பிள்ளையார் அரசரை, அப்பரே! யாம் எப்படியும் இறைவனை நேர்முகத்துத் திருவாயிலைத் திறந்தே வணங்கவேண்டும். ஆதலால் தேவரீர் இத்திருக் கதவு திறக்கப் பாடும் என்றருள, அரசுகளும் அவ்வாறே "பண்ணினேர் மொழியாள்" என்னுமித் திருக்குறுந்தொகையை யெடுத்துப் பத்துப் பாட்டுப் பாடியும் கதவு திறக்கப்படாமையால், "இரக்கமொன்றிலீர்" என்று பாடியிறைஞ்சுதலும் திருக்கதவு திறக்கப்பட, நாயன்மார் இருவரும் உள்ளே சென்று கடவுளை வணங்கினர்கள்.

திருவீழிமிழலை

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கரைந்து கைதொழு வாரையுங் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்
விரைந்து போவது வீழி மிழலைக்கே. 1

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஞால மேவிசும் பேநலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்றெழும்
சீல மேதிரு வீழி மிழலையுள்
கோல மேஅடி யேனைக் குறிக்கொளே. 3

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 4

கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கடம்பூர்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டருக்
களரும் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே. 1

குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடை யாரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. 6

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன் பணி செய்து கிடப்பதே. 9

திருச்சிற்றம்பலம்

திருவாஞ்சியம்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

படையும் பூதமும் பாம்புமபுல் வாயதள்
உடையுந் தாங்கிய வுத்தம ஞர்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடையவல்லார்க் கல்லலொன் றில்லையே. 1

அருக்க னங்கி யமனொடு தேவர்கள்
திருத்துஞ் சேவடி யான்றிக ழுந்நகர்
ஒருத்தி பாக முகந்தவன் வாஞ்சியம்
அருத்தி யாலடை வார்க்கில்லை யல்லலே. 10

திருச்சிற்றம்பலம்

திருஇன்னம்பர்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

என்னி லாரும்·எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யாஞெரு வன்னுளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. 1

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் ருரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே. 8

திருச்சிற்றம்பலம்

திருநின்றியூர்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின் றி யூரைநீ
இஞ்சி மாமதில் எய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. 9

எளிய ஞமொழி யாயிலங் கைக்கிறை
களியி ஞற்கயி லாய மெடுத்தவன்
நெளிய வூன்றவ லானமர் நின்றியூர்
அளியி ஞற்ஞெழு வார்வினை அல்குமே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூர்மயானம்

திருக்குறுந்தொகை (5–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கட வூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமா னடிகளே. 1

திருச்சிற்றம்பலம்

திருமயிலாடுதுறை

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

குறைவி லோங்கொடு மாநுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டன்எண் டோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவன் நீள்கழல் ஏத்தி யிருக்கிலே. 5

திருச்சிற்றம்பலம்

திருவாய்மூர்

திருக்குறுந்தொகை (5–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எங்கே யென்னை இருந்திடந் தேடிக்கொண்(டு)
அங்கே வந்தடை யாளம் அருளினுர்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனுர்
அங்கே வாவென்று போனுர தென்கொலோ. 1

பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பார் அவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயென
ஓடிப் போந்திங் கொளித்தவா றென்கொலோ. 7

திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யார்இவர் பித்தரே. 8

திருச்சிற்றம்பலம்.

திருமாற்பேறு

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஏது மொன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. 1

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே. 3

இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினல்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே. 4

ஈட்டும் மாநிதி சால இழக்கிலும்
வீட்டுங் காலன் விரைய அழைக்கிலுங்
காட்டில் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லர்மாற் பேறரே. 6

ஐய னேயர னேயென் றரற்றினுல்
உய்ய லாமுல கத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே. 7–9

திருச்சிற்றம்பலம்

திருச்சேறை

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன் நாம நவிலவே. 1

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. 2

தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னுருளர் அஞ்சுவ தென்னுக்கே. 6

குலங்க ளென்செய்வ குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின் றுசோர்ந் திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னுருளர் அஞ்சுவ தென்னுக்கே. 8

திருச்சிற்றம்பலம்

பொது

தனித்திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 1

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 2

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே. 5

குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 6

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 7

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே. 9

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட். டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனர் மறுமாற்றத் திருத்தாண்டகத்தை யருளி நாம் சிவபெருமானையன்றி வேறு யார்க்கும் குடியல்லோம் என்று கூறி மறுத்தருளியும் அமைச்சர்பால் வைத்த அருளால் அவர் வேண்டுகோளுக்கு ஈண்டுவரும் வினைகளுக்கு எம்பிரான் உளன் என்று இயைந்து அவரோடு சென்றபோது பல்லவ அரசன் இவனை இனி என்ன செய்வது என்று கேட்க, அறந்துறந்து தமக்குறுதி அறியாத புல்லறிவினராகிய சமணர்கள் சிறிதும் அஞ்சாது நீற்றறையிலிடும்படிச் சொன்னார்கள். கொடுங்கோலனாகிய அரசனும் அவ்வாறே செய்கவென அருகிலுள்ள ஏவலாளரை ஏவ அவரும் நாயனரை உலோகங்களும் உருகும் தழல் வெம்மையினையுடைய நீற்றறையிலிட்டுத் திருகலான கருந்தாளிட்டுச் சேமஞ்செய்து ஒழிந்தார்கள். ஆண்ட அரசுகளும் அதனுள்ளணைந்து அம்பலத்துச் தாண்டவம் புரியும் தம்பிரான்தாள்நினைந்து சிவனடியாருக்கு வருந் துயருளதோ வென்று மனவுறுதி கொண்டு, "மாசில்வீணையும்" என்னு மிப்பதிகத்தைப் பாடியருளினர், அந்நீற்றறை

குற்றமற்ற யாழிசையையும். வெண்ணிலாவையும், தென்றல் காற்றையும், இளவேனிலையும், நீர் நிலையையும் ஒத்துச் சிவபெருமானுடைய திருவடிநீழலைப் போற் குளிர்ந்து ஊறையுஞ் செய்யாததாக இன்ப வெள்ளத்தழுந்தி அம்பலவர் தேனுந்து சேவடியின் தேனுண்டு ஊனமில்லாதிருந்தார். அரசனும் அமணர்களும் ஏழுநாட்கள் சென்று அறையைத் திறந்து அடிகளின் நிலையைக் கண்டு வியந்தார்கள்.

பொது

தனித் திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே. 3

புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே. 4

மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே. 5

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னுல்முனி வுண்பதே. 6

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே. 7

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானுமுன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே. 8

திருச்சிற்றம்பலம்

திருமருகல்

திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. 1

ஆதி மாமலை யன்றெடுத் தானிற்றுச்
சோதி யென்றலுந் தொல்லருள் செய்திடும்
ஆதி யான்மரு கற்பெரு மான்றிறம்
ஓதி யாரவ ரும்பர்க்கு மும்பரே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

காலபாசத் திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென் றரற்றுவார்
ஆர்க ளாகிலு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறில்தீங்கு நீங்குமே. 3

இறையென் சொல்மற வேல்நமன் தூதுவர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே. 5

திருச்சிற்றம்பலம்

கோயில்

பெரிய திருத்தாண்டகம் (6-ம்திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றை
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே 1

கற்றானைக் கங்கைவார் சடையான் தன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 5

திருச்சிற்றம்பலம்

———

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந்தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

திருச்சிற்றம்பலம்

புக்க திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கிலுள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்குமிட மறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 1

சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோம் இந்நாள்

பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையி லென்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமு மெல்லா
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 9

பாதங்கள் நல்லார் பரவி யேத்தப்
பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர் தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
எழு பிறப்பும் ஆளுடைய ஈசனார்தாம்
வேதங்க ளோதியோர் வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

திருஅதிகை வீரட்டானம்

போற்றித் திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி

வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி. 1

திருச்சிற்றம்பலம்

திருவடித் திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
அருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணு மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
திரைவிரவு தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 1

திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தார்க்குத் தேனுய் விளக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
உருவிரண்டு மொன்றோடொன் ருெவ்வா அடி
உருவென் றுணரப் படாத அடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 6

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான்
காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 5

திருச்சிற்றம்பலம்

திருஆமாத்தூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கட்டங்கந் தாமொன்று கையி லேந்திக்
கடிய விடையேறிக் காபாலியார்
இட்டங்கள் தாம்பேசி யில்லே புக்கு
இடும்பலியும் இடக்கொள்ளார் போவா ரல்லர்
பட்டிமையும் படிறுமே பேசா நின்றார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டியசில் பலியுங் கொள்ளார் விள்ளார்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 3

ஒன்றாலுங் குறைவில்லை ஊர்தி வெள்ளே
    றேற்றியூர் உம்மூரே யுணரக் கூறீர்
நின்றுதான் என்செய்வீர் போவீ ராகில்
    நெற்றிமேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்
என்றுந்தான் இவ்வகையே இடர்செய் கின்றீர்
    இருக்குமூர் இனியறிந்தோம் ஏகம் பமோ
அன்றித்தான் போகின்றீர் அடிக ளெம்மோ
    டழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 8

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
    நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
    செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
    இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
    நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 1

பொன்னலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்
    புலியுரியின் அதள்வைத்தார் புனலும் வைத்தார்
மன்னலத்த திரள்தோள்மேல் மழுவாள் வைத்தார்
    வார்காதிற் குழைவைத்தார் மதியும் வைத்தார்
மின்னலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்
    வேழத்தி னுரிவைத்தார் வெண்ணூல் வைத்தார்

நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 2

குலங்கிளரும் வருதிரைக ளேழும் வைத்தார்
குருமணிசேர் மலைவைத்தார் மலையைக் கையால்
உலங்கிளர எடுத்தவன்தோள் முடியும் நோவ
ஒருவிரலா லுறவைத்தார் இறைவா என்று
புலம்புதலும் அருளொடுபோர் வாளும் வைத்தார்
புகழ்வைத்தார் புரிந்தாளாக் கொள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கருகாவூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

குருகாம் வயிரமாங் கூறு நாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானும்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும்
ஒருகா லுமையாளோர் பாகனு மாம்
உள்நின்ற நாவிற் குரையாடி யாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 1

வித்தாம் முளையாகும் வேரே தானும்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால் நிறமுமாம் பரஞ்சோதி தானும்

தொத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்ருதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணு காட்டுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 2

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனென்று கையேந்தி இல்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகஅறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 7

திருச்சிற்றம்பலம்

திருப்பூவணம்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றும்

கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றும்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 2

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானில் தோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 5

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்

பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனூர்க்கே. 7

ஆருருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்த வடிவுந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனூர்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

திருவாலவாய்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணுக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறுத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 1

வான மிதுவெல்லா முடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கையுமை நோக்காவென்மேல்

ஊன மதுவெல்லா மொழித்தான் தன்னை
உணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 4

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத் தொடர்ந்துநின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 8

தூர்த்தனைத் தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்
தொன்னரம்பினின்னிசைகேட் டருள்செய் தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை அடியேனுக் கன்பன் தன்னை
அளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாகைக்காரோணம்

திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
திகழுந் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் தன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் தன்னைக்
காரார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தென்ஞான்றுங் காண லாமே. 2

சிறையார் வரிவண்டு தேனே பாடுந்
திருமறைக்காட் டெந்தை சிவலோ கனை
மறையான்ற வாய்மூருங் கீழ்வே ளூரும்
வலிவலமுந் தேவூரும் மன்னி யங்கே
உறைவானை உத்தமனை ஒற்றி யூரிற்
பற்றியாள் கின்ற பரமன் தன்னைக்
கறையார் கடல்புலடசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தென்ஞான்றுங் காண லாமே. 3

திருச்சிற்றம்பலம்.

திருக்கீழ்வேளூர்

திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க

தாளானைத் தன்னொப்பா ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரை யிலார்த்த
கீளானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 1

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை
நற்பான்மை அறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி னானைப்
பற்பாவும் வாயாரப் பாடி யாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 2

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியின் முக்கூடல்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள்
அருவினைகள் நல்குரவு செல்லா வண்ணங்
கடிந்தானைக் கார்முகில்போற் கண்டத் தானைக்
கடுஞ் சினத்தோன் தன்னுடலை நேமியாலே
தடிந்தானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தத்துவனை உத்தமனை நினைவார் நெஞ்சில்
படிந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 5

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காடு

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையும் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 4

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே. 1

முன்னம் அவ னுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி·யானுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னுமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 7

நீரூருஞ் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணுய்
நிலாத்திங்கள் து ண்ட த்தாய் நின்னைத் தேடி
ஓரூரு மொழியாமே யொற்றித் தெங்கும்
உலகமெலாந் திரிதந்து நின்னைக் காண்பான்
தேரூரும் நெடுவீதி பற்றி நின்று
திருமாலும் நான்முகனுந் தேர்ந்துங் காணு(து)
ஆரூரா ஆரூரா என்கின் ருர்கள்
அமரர்கள்தம் பெருமானே ஆரூ ராயே. 9

நல்லூரே நன்ருக நட்ட மிட்டு
நரையேற்றைப் பழையாறே பாய ஏறிப்
பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர் மீதே
பலர்காணத் தலையாலங் காட்டி னூடே
இல்லார்ந்த பெருவேளூர்த் தளியே பேணி
இராப்பட்டீச் சரங்கலந்து மணற்கால் புக்கு
எல்லாருந் தளிச்சாத்தங் குடியிற் காண
இறைப்பொழுதில் திருவாரூர் புக்கார் தாமே. 10

கருத்துத்திக் கதநாகங் கையி லேந்திக்
கருவரைபோற் களியானைக் கதறக் கையால்
உரித்தெடுத்துச் சிவந்ததன்தோல் பொருந்த மூடி
உமையவளை அச்சுறுத்தும் ஒளிகொள் மேனித்

திருத்துருத்தி திருப்பழனந் திருநெய்த் தானந்
திருவையா றிடங்கொண்ட செல்வர் இந்நாள்
அரிப்பெருத்த வெள்ளேற்றை அடர வேறி
யப்பனூர் இப்பருவ மாரு ராரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஆரூர்

திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே. 1

பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தின் எல்லை யெல்லா
முழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானேல்
அங்கமலத் தயனெடுமா லாகி மற்றும்
அதற்கப்பா லொன்ருகி யறிய வொண்ணுச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை யாரூர்ச்
செலவனைச்சேர் வேன்நும்மாற்
செலுத்து ணேனே. 6

இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவீரும் உலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
அமரர்கள்தம் பெருமானை அரனை யாரூர்
உடையானைக் கடுகச்சென் றடைவேன் நும்மால்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 7

விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை அமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன் நும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டேன் மின்னே. 8

மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ரானை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மால்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 9

திருச்சிற்றம்பலம்

—

திருவாரூர்

திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டொளிசேர் கங்கைச் சடையா யென்றும்
சுடரொளியா யுள்விளங்கு சோதீ யென்றுந்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா வென்றும்
கடல்விடம துண்டிருண்ட கண்டா வென்றுங்
கலைமான் மறியேந்து கையா வென்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 1

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 3

புண்ணியமும் நன்னெறியும் ஆவ தெல்லாம்
நெஞ்சமே இதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணியவெண் ணூல்கிடந்த மார்பா என்றும்
நுந்தாத வொண்சுடரே யென்று நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலுங் கூடி
எண்ணரிய திருநாம முடையா யென்றும்
எழிலாரூ ராவென்றே ஏத்தா நில்லே. 4

இழைத்தநாள் எல்லை கடப்ப தன்றால்
　　இரவினொடு நண்பகலு மேத்தி வாழ்த்திப்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோய் என்றும்
　　பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா என்றும்
அழைத்தலறி அடியேனுன் னரணங் கண்டாய்
　　அணியாரூர் இடங்கொண்ட அழகா என்றும்
குழற்சடையெங் கோனென்றுங் கூறு நெஞ்சே
　　குற்றமில்லை யென்மேல்நான் கூறி னேனே. 5

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
　　பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
　　சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
　　உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
　　பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே. 7

திருச்சிற்றம்பலம்

———

திருவெண்காடு

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மருதங்க ளாமொழிவர் மங்கை யோடு
　　வானவரும் மாலயனுங் கூடித் தங்கள்
சுருதங்க ளாற்றுதித்துத் தூநீ ராட்டித்
　　தோத்திரங்கள் பலசொல்லித் தூபங் காட்டிக்

கருதுங்கொல் எம்பெருமான் செய்குற் றேவல்
என்பார்க்கு வேண்டும் வரங்கொ டுத்து
விகிர்தங்க ளாநடப்பர் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 8

புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்துங்
காணார் பொறியழலாய் நின்றான் தன்னை
உள்ளானை யொன் றலா உருவி னானை
உலகுக் கொருவிளக்காய் நின்றான் தன்னைக்
கள்ளேந்து கொன்றைதூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொ டுப்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்துருத்தி

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் னோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. 1

எனக்கென் றும் இனியானை யெம்மான் தன்னை
யெழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை

மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்கென்றும் அடியேனை யாளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. 1

திருச்சிற்றம்பலம்

திருப்புள்ளிருக்குவேளூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலின் நான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 5

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 8

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயம்

போற்றித் திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந் தீயானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

உண்ணு துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணு இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணு ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணு யுலகுக்கு நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கன்ருப்பூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடீ வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைந்துருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 1

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றுந்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றுஞ்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றுங்

கடிமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 2

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 3

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனுர்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 7

திருச்சிற்றம்பலம்

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூ ருள்ளார்
புறம்பயத்தார் அறம்புரிபூந் துருத்தி புக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தா னத்தார்
மாதவத்து வளர்சோற்றுத் துறையார் நல்ல

தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக் கீந்து
திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாள்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 8

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்புத்தூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவன மேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி னான்காண்
விரைக்கொன்றைக்கண்ணியன்காண்வேதநான்குந்
தெரிந்துமுதல் படைத்தோனைச் சிரங்கொண்
டோன் காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பங்கத் தான்காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான்காண் அவனென் சிந்தை யானே. 1

வாராரும் முலைமங்கை பங்கத் தான்காண்
மாமறைக ளாயவன்காண் மண்ணும் விண்ணுங்
கூரார்வெந் தழலவனுங் காற்றும் நீருங்
குலவரையும் ஆயவன்காண் கொடுநஞ் சுண்ட
காராருங் கண்டன்காண் எண்தோ ளன்காண்
கயிலைமலைப்பொருப்பன்காண் விருப்போடென்றுந்
தேரா றும் நெடுவீதித் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென்
சிந்தை யானே. 2

மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்ப வன்காண் பொருப்புவலிச்
சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழி தருமிக் கருளி னேன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. 3

திருச்சிற்றம்பலம்

திருவாய்மூர்

திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பாட வடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கைஅனல் கண்டேன் கங்கை யாளைக்

கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே. 1

விளைத்த பெரும்பத்தி கூர நின்று
மெய்யடியார் தம்மை விரும்பக் கண்டேன்
இளைக்குங் கதநாகம் மேனி கண்டேன்
என்பின் கலந்திகழ்ந்து தோன்றக் கண்டேன்
திளைக்குந் திருமார்பில் நீறு கண்டேன்
சேணுர் மதில்மூன்றும் பொன்ற அன்று
வளைத்த வரிசிலையுங் கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே. 4

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே. 8

திருச்சிற்றம்பலம்

திருவாலங்காடு

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அல்லும் பகலுமாய் நின்ருர் தாமே
அந்தியுஞ் சந்தியு மானுர் தாமே
சொல்லும் பொருளெலா மானுர் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானுர் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானுர் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவலாங் காடுறையுஞ் செல்வர் தாமே. 5

திருச்சிற்றம்பலம்

திருமாற்பேறு

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நீருகி நீறுமிழும் நெருப்பு மாகி
நினைவாகி நினைவினிய மலையான் மங்கை
கூருகிக் கூற்ருகிக் கோளு மாகிக்
குணமாகிக் குறையாத வுவகைக் கண்ணீர்
ஆருத ஆனந்தத் தடியார் செய்த
அனுசாரம் பொறுத்தருளி அவர்மே லென்றுஞ்
சீருத பெருமானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன்நானே. 5

பிறப்பானைப் பிறவாத பெருமை யானைப்
பெரியானை அரியானைப் பெண் ஆண் ஆய
நிறத்தானை நின்மலனை நினையா தாரை
நினையானை நினைவோரை நினைவோன் தன்னை
அறத்தானை அறவோனை ஐயன் தன்னை
அண்ணறனை நண்ணரிய அமர ரேத்துந்
திறத்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன்நானே. 7

திருச்சிற்றம்பலம்

திருச்செங்காட்டங்குடி

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பெந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்தோள் வீசி
அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்று லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க் கருள்செய் தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 1

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை உண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணியஅந் தணர்க்குமறைப் பொருளைப் பின்னும்

முருகுவிரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 3

கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொரு பாகத் தானைச்
சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 4

அரியபெரும் பொருளாகி நின்றான் தன்னை
அலைகடலில் ஆலாலம் அமுது செய்த
கரியதொரு கண்டத்துச் செங்கண் ஏற்றுக்
கதிர்விடுமா மணிபிறங்கு காட்சி யானை
உரியபல தொழில் செய்யும் அடியார் தங்கட்
குலகமெலாம முழுதளிக்கும் உலப்பி லானைத்
தெரிவையொரு பாகத்துச் சேர்த்தி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 9

திருச்சிற்றம்பலம்

பொது

தனித்திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ

ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. 1

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே. 3

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. 4

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்

அருப்போடு மலர்பறித்திட் டுண்ணு வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே. 5

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் செப்பா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. 6

நின்னுவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னனாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே. 7

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே. 8

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய

நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே. 9

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

வினாவிடைத் திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஓருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

மறுமாற்றத் திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 1

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. 5

மூவுருவின் முதலுருவாய் இருநான் கான
மூர்த்தியே என்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றோமே. 6

ஈசனைஎவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலன்செய் கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்
நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லாம் மறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனு வான்றா னாரே. 8

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன்
அயனெடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாகக்கொள்ளோமெண் குணத்து ளோமே. 10

திருச்சிற்றம்பலம்

திருஆவடுதுறை

திருத்தாண்டகம் (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற

கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பின்னாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 1

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 7

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்

திருத்தாண்டகம் (6-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஒருவனுய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனுய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனுய் மண்ணும்விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகம்
திருவினுள் சேர்வதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 1

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர்

திருத்தாண்டகம் (6–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனே
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்

புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

அங்கமே பூண்டாய் அன லாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்ன டிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை யேந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையு மென்மேற் றரவறுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போ துகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்றதேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி யாதியாய் வேத மாகி
யலர்மேலா னீர்மேலா னைந்துங் காணாப்
பொருளாவா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே

பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டரங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்க ளெரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டான மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்றோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியே னுனிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்ருய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையும் தண்மதியும் பாம்பு நீரும்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே யாதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்.

ஆண்ட அரசு என்னும் திருநாவுக்கரசு நாயனர் மனம் முதலாகிய அந்தக்கரணங்கள் தத்தமக்குரிய வேறுவேறு தொழில்களைச் செய்யாது சத்துவ குணுதிக்கத்தால் ஒருப்பாடுற்றுத் தமக்குப் புகலாயமைந்த சரண்ய புரீசர் தமது திருவடியின்கீழ்த் தம்மையினிது இருத்திடும் என்னும் முன்னுணர்ச்சியினுற் பல விருத்தங்களை யருளிச்செய்து, மூவுலகத்துள்ளாரும் துதித்தற்குரிய நிலைபெற்ற இத்திருத்தாண்டகத்தை "எண்ணுகேன்" எனத் தொடங்கித் திருப்பாட்டின் இறுதிதோறும் "உன்னடிக்கே போதுகின்றேன்" என்று வைத்துப் பாடிச் சித்திரைச் சதயமாந் திருநாளில் திருவடி ஞானமாகிய அருள் ஞானமில்லாதார் பெறுதற்கரிய சிவனடி நீழலின் இரண்டறக் கலந்தருளினர்.

உ

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணசாரம்

(கொற்றவன்குடி-உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளியது

தண்கயிலை யதுநீங்கி நாவலூர் வாழ்
சைவனூர் சடையனூர் தனய னூராய்
மண்புகழ அருட்டுறையா னோலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னூரே. 1

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில்தனித் தூதுவந் தாறூடு கீறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னூரே. 2

———

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் - இந்தளம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு
மானேஅரு ளாளா
எத்தால்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 1

நாயேன்பல நாளும்நினைப்
பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற
லாகாஅருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 2

மன்னேமற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னைப்

பொன்னேமணி தானேவயி
ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின்
மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப்
பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 4

பாஃதம்பணி வார்கள்பெறும்
பண்டம்அது பணியாய்
ஆதன்பொருள் ஆனேன்அறி
வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 5

தண்ணார்மதி சூடீதழல்
போலும்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி
உண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்

அண்ணாஉனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 6

ஊனாய்உயிர் ஆனாய்உடல்
ஆனாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல்
ஆனாய்மலை ஆனாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்எரி
உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி
வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 8

மழுவாள்வலன் ஏந்தீ மறை
ஓதீமங்கை பங்கா
தொழுவார்அவர் துயர்ஆயின
தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அழகாஉனக் காளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 9

காருர்புனல் எய்திக்கரை
கல்லித்திரைக் கையால்

பாரூர்புகழ் எய்தித்திகழ்
பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள்
அல்லேன்எனல் ஆமே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலை மலையில் ஆலால சுந்தரர் எழுந்தருளியிருந்தவர்ஒருநாள் இறைவன் திருவருளால் நந்தவனத்திற்கு வந்த உமாதேவியாரின் சேடியரான அநிந்திதை, கமலினி என்ற இருவரையும் மாறுபட்ட கருத்தோடு பார்த்தருளினர். இது அவர் செயலன்று என்று சேக்கிழார் சுவாமிகளும் தம் பெரிய புராணத்துள் மிக நன்றாக விளக்கியுள்ளார்கள்.

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப்
போதுவார் அவர்மேன் மனம் போக்கினார்"

இது காரணமாக ஆலாலசுந்தரரை நோக்கி "மாதர் மேல் மனம் வைத்தனை, ஆதலால் தென்புவியில்தோன்றியம் மாதராருடன் சின்னாள் வைகிப்பின் திரும்புவாய்" எனப் பணித்தனர். இதனைக் கேட்ட ஆலாலசுந்தரர் மனம் நடுங்கி "இப் புவியில் தோன்றினால் மையலினால் மயங்க நேரிடும். அப்படி மயங்கும்போது தேவரீர்வந்து தடுத்தாட்கொள்ள வேண்டும்" என இறைவனை வேண்டிக்கொண்டார். அவரும் அவ்வாறே யாகட்டும் என வாக்களித்தார்.

ஆலாலசுந்தரர் பரமனருளால் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதி சைவ பரம்பரையில் சடையனார் இசைஞானியார் என்ற தம்பதிகளுக்கு மகவாய்த் தோன்றி வளர்ந்தார். இவர் அழகில் ஈடுபட்ட நரசிங்க முனையரையர் என்ற அரசனும் இவரைத் தன் மகவுபோல

எண்ணி வளர்த்தார். இவருக்கு உரிய காலத்தில் உபநயனம் நடந்தது. பின்னர்த் திருமணப் பருவமும் வந்தது அப்போது இவரது பெற்ருேர்கள் இவர்கள் குலத்திற்கும், ஒழுக்கத்திற்கும் ஒத்து விளங்கிய மற்ருேர் ஆதிசைவ குலத்தில் தோன்றிய புத்தூர் சடங்கவி சிவாசாரியாரின் மகளை மணம் பேசினர். அவரும் இசைந்தார். திருமணத்திற்கும் ஏற்பாடாயிற்று. திருமணப் பந்தலில் நம்பியாநரரும் மணப்பெண்ணும் எழுந்தருளியுள்ளபோது இறைவன் தாம் இவருக்குக் கொடுத்த வாக்கின்படி ஒரு விருத்தப் பிராமணராகத்திருநாவலூருக்கு வந்து இவர் திருமணப் பந்தலையடைந்தார். அனைவரும் பெரியவர் என்ற முறையில் வரவேற்று உபசரித்தார்கள். உடனே வேதியர் நம்பியாரூரரை நோக்கி "என்னிடையும் நின்னிடையும் இசைவால்யான் முன்னுடைய ஓர் வழக்கினை முடித்து வேள்வியினைச் செய்யக் கடவை" என்றனர். நம்பியாரூரரும் அதற்கிசைந்தார்.

உடனே மறையவர் "நாவல் நகராளுகிய நீ என்னடியான்" என்றனர். அதனைக் கேட்ட நம்பியாரூரரும் ஏனைய மறையவர்களும் அதிசயித்தனர். சிரித்தார்கள். வேதியர் நம்பியாரூரரை நெருங்கி அக்காலத்தில் "உன் தந்தையின் தந்தை யாளோலை யீது, இதை நீ சிரித்தது என்ன" என்ருர். நம்பியாரூரரும் ஒரு மறையவன் மற்ருேர் மறையவனுக்கடிமையாதல் இதுவரையில்லை. நீ பித்தனோ?" என வெகுண்டார். ஆண்டவனும் "நான் பித்தனுயினும் ஆக, பேயனுயினும் ஆக, எத்தனைத் தீங்கு கூறினுலும் நான் நாணேன். என்னையோர் சிறிதும் அறிந்தாயில்லை. வித்தகம் பேசவேண்டாம். பணிசெய்யவேண்டும்" என்ருர். நம்பியாரூரர் அவ்வோலையைக் காட்ட வேண்டினர். மறையவரும் அதனை எடுத்து நீட்டினர். நம்பியாரூரர் அதனைப் பறித்துக் கிழித்திட்டார். வேதியனும் "முறையோ" எனக் கூறிக் கொண்டு நின்ருர். அப்போது மற்ற மறையவர், மறையவராக வந்த பரமனை நோக்கி "நீர் எங்குளீர் செப்பும்" என்ன அவரும் "வெண்ணெய் நல்லூர்" என்ருர். உடனே

அனைவரும் திருவெண்ணெய் நல்லூரினுள்ள அவையோ ரைச் சார்ந்து தம் வழக்கை இரு தரத்தாரும் கூறிமுடித்த னர். மூலவோலையை ஆண்டவன் தன் அவையோருக்குக் காட்டித் தன் வழக்கை நிருபித்தார், அவையோரும் நம்பியா ரூரர் அம்மறையவருக்கு அடிமைதான் என்று தீர்ப்புக் கூறி யருளினர். உடனே நம்பியாரூரர் அவ்வேதியருடன் அவரில் லம் செல்ல வேண்டினர். பரமனும் கோயிலுட் சென்றதும் மறைந்தனர். அப்போது பரமன் இவரை நோக்கிச் "சொற் றமிழ் பாடுக" எனப் பணித்தார். "எப்படிப் பாடுவேன்" என்றனர் நம்பியாரூரர். பரமனும் "பித்தா பிறை சூடீ" என்ற சொற்றொடரை எடுத்துக் கொடுத்துதவினர். நம்பியா ரூரரும் இப்பெரிதாந் திருப்பதிகத்தையப்போது இந்தளப் பண்ணில் பாடியருளினர் என்பது வரலாறு.

———

திரு அஞ்சைக்களம்

பண் – இந்தளம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தலைக்குத்தலைமா லைஅணிந்தென்னே
சடைமேற்கங்கைவெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும்புலித்தோல் கொண் டசைத்ததென்னே
அதன்மேற்கதநாகக் கச்சார்த்ததென்னே
மலைக்குநிகர்ஒப் பனவன்திரைகள்
வலித்தெற்றிமுழங்கி வலம்புரிகொண்
டலைக்குங்கடலங் கரைமேல்மகோதை
அணியார்பொழில்அஞ்சைக் களத்தப்பனே. 1

இழைக்கும்எழுத்துக் குயிரேஒத்தியால்
இலையேஒத்தியால் உனை யேஒத்தியால்
குழைக்கும்பயிர்க்கோர் புயலேஒத்தி யால்
அடியார்தமக் கோர் குடியேஒத்தியால்

மழைக்குந்நிகர்ஒப்ப னவன்திரைகள்
வலித்தெற்றிமுழங்கி வலம்புரிகொண்
டழைக்குங்கடலங் கரைமேல்மகோதை
அணியார்பொழில்அஞ்சைக் களத்தப்பனே. 4

எந்தம்அடிகள் இமையோர்பெருமான்
எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண்கடலங் கரைமேல்மகோதை
அணியார்பொழில்அஞ்சைக் களத்தப்பனே
மந்தம்முழவுங் குழலும்இயம்பும்
வளர்நாவலர்கோன் நம்பியூரன்சொன்ன
சந்தம்மிகுதண் டமிழ்மாலைகள்கொண்
டடிவீழவல்லார்·தடுமாற்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

திருஓணகாந்தன் தளி

பண் - இந்தளம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நெய்யும்பாலுந் தயிருங்கொண்டு
நித்தல்பூசனை செய்யலுற்றார்
கையில்ஒன்றும் காணம்இல்லைக்
கழலடிதொழு துய்யின் அல்லால்
ஐவர்கொண்டிங் காட்டஆடி
ஆழ்குழிப்பட் டழுந்துவேனுக்கு
உய்யுமாறென் றருளிச்செய்யீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 1

திங்கள்தங்கு சடைக்கண்மேலோர்
திரைகள்வந்து புரளவீசும்

கங்கையாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலான் குமரன்பிள்ளை
தேவியார்கோற் றட்டியாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோம்
ஓணகாந்தன் தளியுளீரே. 9

ஓவணமேல் எருதொன்றேறும்
ஓணகாந்தன் தளியுளார்தாம்.
ஆவணஞ்செய் தாளுங்கொண்டு
வரைதுகிலொடு பட்டுவீக்கிக்
கோவணமேற் கொண்டவேடம்
கோவையாக ஆரூரன்சொன்ன
பாவணத்தமிழ் பத்தும்வல்லார்
பறையுந்தாஞ்செய்த பாவந்தானே. 10

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சூர் ஆலக்கோயிலைச் சென்று வழிபட்ட வன்றொண்டப்பெருமான் காஞ்சீபுரத்தை யடைந்து திருவேகாம்பரம்,திருக்காமக்கோட்டம் திருமேற்றளி முதலிய திருப்பதிகளையடைந்து பாடி வழிபட்டுத் திருவோணகாந்தன் றளியைச் சேர்ந்து இறைவரை உரிமையுடன் பேணியமைந்த தோழமையால் பெருகு மடிமைத்திறம் பேசிக் காணமோடு பொன்வேண்டி இப்பதிகத்தை யெடுத்தேத்தி எண்ணில் நிதி பெற்றிருந்தருளினர்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

பண் - இந்தளம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மலைக்கும் மகள்அஞ் சமத கரியை
உரித்தீர் எரித் தீர்வருமுப் புரங்கள்
சிலைக்குங் கொலைச்சேவுகந்தேற் றுழியீர்
சில்பலிக் கில்கள்தொ றுஞ்செல வொழியீர்
கலைக்கொம் புங்கரி மருப்பும் இட றிக்
கலவம்மயிற் பீலியுங் காரகிலும்
அலைக்கும் புனல்சேர்அரிசிற் றென்கரை
அழகார் திருப்புத்தூர் அழக னீரே. 1

அகத்த டிமைசெய்யும் அந்தணன் றன்அரி
சிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத்த ளர்வெய்திக் குடத்தையும் நும்முடி
மேல்விழுத் திட்டு நடுங்கு தலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
வருமென் றொருகா சினைநின் றநன் றிப்
புகழ்த்து ணைகைப் புகச்செய் துகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனித னீரே. 6

காரூர் மழைபெய் துபொழி அருவிக்
கழையோ டகிலுந் திட்டிரு கரையும்
போரூர் புனல்சேர் அரிசிற் றென்கரைப்
பொழிலார்திருப்புத் தூர்ப்புனிதர் தம்மை
ஆரூ ரன்அருந் தமிழைந் திறைடைந்
தழகால் உரைப்பார்களுங்கேட் பவரும்
சீரூர் தருதே வர்கணங் களொடும்
இணங்கிச் சிவலோ கம தெய் துவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கலயநல்லூர்

பண் - தக்கராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன்
குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன்
மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும்அணிபொழில்சூழ்அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே. 1

இண்டைமலர் கொண்டுமணல்இலிங்கமதுஇயற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறிய தாதையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட
விடங்கனதூர்வினவில்
மண்டபமும் கோபுரமும் மாளிகைசூ ளிகையும்
மறையொலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனங்கவரும் புண்டரிகப்
பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே.3

நிற்பானும் கமலத்தில் இருப்பானும் முதலா
நிறைந்தமரர்குறைந்திரப்பநினைந்தருளியவர்க்காய்
வெற்பார்வில் அரவுநாண் எரிஅம்பால்விரவார்
புரமூன்றும் எரிவித்த விகிர்தனூர் வினவில்
சொற்பால பொருட்பால சுருதிஒரு நான்கும்
தோத்திரமும் பலசொல்லித் துதித்திறைதன்
திறத்தே

கற்பாருங் கேட்பாரு மாயெங்கும் நன்கார்
கலைபயில்அந் தணர்வாழுங்கலயநல்லூர்காணே. 5

தண்புனலும் வெண்மதியும் தாங்கியசெஞ் சடையன்
தாமரையோன் தலைகலனுக் காமரமுன் பாடி
உண்பலிகொண்டுழல்பரமன் உறையும்ஊர் நிறைநீர்
ஒழுகுபுனல் அரிசிலின்தென் கலயநல்லூர் அதனை
நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன் நாவின்நயந் துரைசெய்
பண்பயிலும் பத்தும்இவை பத்திசெய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவம்இலர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கோளிலி

பண் - நட்டராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை
நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மட வாள் அவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலைஎம்பெருமான் அவை
அட்டித்தரப் பணியே 1

வண்டம ருங்குழலாள் உமை
நங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன் றெரி
செய்தாம் வேதியனே

தெண்திரை நீர்வயல்சூழ் திருக்
கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை
அட்டித் தரப்பணியே. 2

கொல்லை வளம்புறவில் திருக்
கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு
நாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந்
தேத்திய பத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகின் அண்டர்
வானுலக காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

வேளாண்டலைவராகிய குண்டையூர்க்கிழவர் சுந்தர மூர்த்திநாயனரிடத்துப்பேரன்புடையராய்ச் செந்நெல்லும், பொன்னன்ன செழும்பருப்பும், தீங்கரும்பினின் நல்ல அமுது முதலான எண்ணில்லாத பல பொருள்களையும் பல நாளாக அனுப்பி வருபவர் மழைவளஞ் சுருங்கிப் படித் தரம் எடுக்கப் போதாமல் வருந்தி ஒருநாள் இன்றுகுறை வாகின்றதே என்று துயிலும்போது சிவபெருமான் கன விளிடத்து நெற்றந்தோம் என்றருளிக் குபேரனை ஏவ அவன் அந்நாடு முழுவதும் நெல்மலைகளை நிறைத்து வைத்தான். குண்டையூர்க்கிழவர் அதனைக் கண்டுவியந்து திருவருளைப் பாராட்டி இதனை எடுத்தல் நம்மாலாகாது, நம்பியாரூரரிடத்துத் தெரிவிப்பேன் எனச்சென்று தெரி விக்க, நாவலர் பெருமான் அவரோடு சென்று விண்ணினை யளக்கும் நெல்மலையினை நோக்கி இறைவனைத் துதித்து வணங்கி அதிசயித்து இதனை எடுக்க ஆளும் சிவபெரு மானே தரிலன்றியாகாது என்று அருகிலுள்ள திருக்கோளி லியிற் சென்று திருக்கோயிலினை அணைந்து இறைவனை

"நீள நினைந்தடியேன்" என்றெடுத்து "வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே" எனும்பதிகம் பாடியருளலும், எம்பெருமான் ஆகாயத்தில் அசரீரியாய்ப் பகற்பொழுது கழிந்ததற்பின் நமது பூதங்கள் இவற்றைப் பரவைமனையளவன்றித் திருவாரூர் அடையவும் புகப்பெய்து தரும் என்றருளினர். நாயனர் நாவலனர் திருவருளைப் பணிந்து போற்றித் திருவாரூருக்கு எழுந்தருளிப் பரவையாரிடத்து யாவும் கூறியினிதிருந்தார். அன்றிரவு சிவபூதங்கள் திருவாரூரடங்கவும் எங்கும் ஆளியங்க இடமின்றி நிறைத்து வைத்தன. பரவையார் கண்டு அதிசயித்து அவரவர் எல்லையிலுள்ள நெல்மலைகளை அவரவர் அடையுமாறு பறையறைவித்து அடையச் செய்து மனமகிழ்ந்திருந்தார்.

திருக்கழிப்பாலை

பண் - நட்டராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எங்கேனும்மிருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந்தென்னெடும் உடனாகி நின்றருளி
இங்கேஎன்வினையை அறுத்திட் டெனையாளும்
கங்காநாயகனே கழிப்பாலை மேயானே. 2

பொய்யாநாவதனல் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யேநின்றெரியும் விளக்கேஒத்த தேவர்பிரான்
செய்யானுங்கரிய நிறத்தானும் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான்கழிப்பாலையதே. 9

திருச்சிற்றம்பலம்

திருமழபாடி

பண் – நட்டராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொன்ஞர் மேனியனே புலித்
தோலை அரைக்கசைத்து
மின்ஞர் செஞ்சடை மேல் மிளிர்
கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழ
பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. 1

கண்ணுய் ஏழுலகுங் கருத்
தாய அருத்தமுமாய்ப்
பண்ஞர் இன்றமிழாய்ப் பர
மாய பரஞ்சுடரே
மண்ஞர் பூம்பொழில்சூழ் மழ
பாடியுள் மாணிக்கமே
அண்ணு நின்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே. 5

ஏரார் முப்புரமும் எரி
யச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழ
பாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆ
ரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பர
லோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம்

பண் - நட்டராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொன்செய்த மேனியினீர்
　　புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும்
　　எரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள்
　　பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள்
　　அடியேன் இட் டளங்கெடவே. 1

உம்பரும் வானவரும்
　　உடனேநிற்க வேஎனக்குச்
செம்பொனைத் தந்தருளித்
　　திகழும்முது குன்றமர்ந்தீர்
வம்பம ருங்குழலாள்
　　பரவை இவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர்
　　அடியேன் இட் டளங்கெடவே. 2

பிறையா ருஞ்சடைஎம்
　　பெருமான் அருளாய்என் று
முறையால் வந்தமரர்
　　வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில்
　　வயல்நாவலா ரூரன் சொன்ன
இறையார் பாடல்வல்லார்க்
　　கெளிதாஞ்சிவ லோகமதே. 10

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றர் தந்த பொன்னை மணிமுத்தாற்றிலிட்டு வந்த ஆரூரர் பரவையாரோடு திருவாரூர் திருக்குளத்திற்குச் சென்று அப்பொன்னைத் தடவும்போது, பரவையார் ''ஆற்றிலேயிட்டுக் குளத்திலே தேடுகின்றீர்களே'' என்று நகைத்தலும், நாயனர் ''பொன் செய்த மேனியினீர்'' என்னு மிப்பதிகம் பாடிப் பொன்னெடுத்தார்.

திருக்குருகாவூர் வெள்ளடை

பண் - நட்டராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

இத்தனை யாமாற்றை
அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப்
பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை
மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. 1

பாடுவார் பசிதீர்ப்பாய்
பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனுக
உண்பலிக் குழல்வானே
காடுநின் இடமாகக்
கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. 3

பண்ணிடைத் தமிழொப்பாய்
பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய்
கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள்
மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. 6

படுவிப்பாய் உனக்கேஆள்
பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன்
தோலுடுத் துழல்வானே
கெடுவிப்பாய் அல்லாதார்
கேடிலாப் பொன்அடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. 9

திருச்சிற்றம்பலம்

நம்பியாரூரர் திருக்குருகாவூருக்கு அருகே வெயில் நேரத்தில் போகும்போது அவர் பசியும் தாகமுங் கொண்டிருந்தமையால், அஃதறிந்து இறைவன் வழியிற் றண்ணீர்ப் பந்தரமைத்துக்கொண்டு அந்தணர் வடிவினராய்ச் சுந்தரர் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். சுந்தரரும் அங்கு வந்து அப்பந்தரின் கீழமர்ந்து ஐந்தெழுத்தோதிக் கொண்டிருந்தார். அந்தணர் அவரை நோக்கி "நீர் மிகப் பசித்திருத்தலால் இப்பொதிசோற்றை யுண்டு தண்ணீரையும் பருகு மெனத் தாம் வைத்திருந்தவற்றைக் கொடுக்க, நம்பிகளும் அவற்றை உண்டுங் குடித்தும் இளைப்பினாற் சிறிது உறங்கினர். அந்நேரத்தில் இறைவன் பந்தருடன் மறைய, விழித்தெழுந்த நம்பியாரூரர் இறைவன் திருவிளையாடலையுணர்ந்து நெஞ்சுருகி "இத்தனையாமாற்றை யறிந்திலேன்" என்னுமித்திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருப்புகலூர்

பண்–கொல்லி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேஎந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறுங்கூறையும்
ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகம்ஆள்வதற்
கியாதும்ஐயுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனேவிறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று
கூறினுங்கொடுப் பார்இலை
பொடிக்கொள்மேனியெம் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல்அமர் உலகம்ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

தையலாருக்கொர் காமனேஎன்றும்
சாலநல்வழக் குடையனேஎன்றும்
கையுலாவிய வேலனேஎன்று
கழறினுங்கொடுப் பார்இலை
பொய்கைஆவியின் மேதிபாய்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாய்அமர் உலகம்ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

தம்பிரான் தோழர் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் நாளில் பங்குனி உத்திரத் திருநாள் குறுக வருதலால் அதிற் பரவையார் கொடைக்குக் குறைவறுக்க நிறையும் பொன் கொண்டணைவதற்கு நினைந்து திருப்புகலூருக்கு எழுந்தருளித் திருக்கோயிலிலே இறைவனை வணங்கிப் பாடித் தமது கருத்தினை நிகழ்த்தி வறிதே புறம்போந்து திருமடத்தை யடையாமல் திருமுற்றத்தில் அன்பரோடு ஒரு சிறை யிருந்தபோது, இறைவரருளால் துயில் வந்தெய் தியது. நாயனர் திருப்பணிச் செங்கற்களைக் கொணர்வித் துத் திருமுடிக்குயரமாக அடுக்கித் திருஆடையை விரித்து அதன் மேற் பள்ளி சொண்டருளினர். பிறகு துயிலுணர்ந்த நம்பிகள் வெற்றி விடையாரருளாலே வேமண் கல்லே விரி சுடர் செம்பொற்றின் கனகமாகக் கண்டு புகலூரிறைவர் அருள்போற்றிக் கோயிலையடைந்து குறிப்பிலடங்காப் பேரன்பினல் வணங்கிப் பண் தங்கிய இசையில் மதுர மொழி மாலை "தம்மையே புகழ்ந்து" என்றெடுத்துப் பாடித் திருக்கடைக்காப்பணிந்து புறம்போந்து நிதியின் குவை யைக் கொண்டு திருப்பனையூருக்கு எழுந்தருளினர்.

திருப்புறம்பயம்

பண்-கொல்லி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அங்கம்ஓதிஓர் ஆறைமேற்றளி
நின்றும்போந்துவந் தின்னம்பர்த்
தங்கினேமையும் இன்னதென்றிலர்
ஈசனர்எழு நெஞ்சமே
கங்குல்ஏமங்கள் கொண்டுதேவர்கள்
ஏத்திவானவர் தாந்தொழும்

பொங்குமால்விடை ஏறிசெல்வப்
புறம்பயந்தொழப் போதுமே. 1

துஞ்சியும்பிறந் துஞ்சிறந்துந்
துயக்கறுத மயக்கிவை
அஞ்சிஊரன் திருப்புறம்பயத்
தப்பனைத்தமிழ்ச் சீரினால்
நெஞ்சினாலே புறம்பயந்தொழு
துய்தும்என்று நினைத்தன
வஞ்சியாதுரை செய்யவல்லவர்
வல்லவானுல காள்வரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவதிகை வீரட்டானம்

பண் - கொல்லிக்கௌவாணம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள்
விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறை கொண்ட
கண்டத்
தெம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைத்
திடும்என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்
போலியானே.

முன்னேஎம் பெருமானை மறந்தென்கொல் மறவா
 தொழிந்தென்கொல் மறவாத சிந்தையால்
 வாழ்வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்
 குன்றமே ஈசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னேஎன் அத்தாஎன் றமரரால் அமரப்
 படுவானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னேஎன் எறிகெடில வடவீரட் டானத்
 துறைவானை இறைபோதும் இகழ்வன்
 போலியானே. 2

என்பினையே கலனாக அணிந்தானை எங்கள்
 எருதேறும் பெருமானை இசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன்
 வன்றொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கும் அறிவரிய அத்தர்
 பெருமானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்பொன்னை எறிகெடில வடவீரட் டானத்
 துறைவானை இறைபோதும் இகழ்வன்போ
 லியானே. 10

திருச்சிற்றம்பலம்

நம்பியாரூரர் பெருமான் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொள்ளப் பெற்ற பிறகு திருநாவலூர் முதலிய திருப் பதிகளை வணங்கி வழிபட்டு நிருத்தனர் திருக்கூத்து தொழு வதற்கு நினைவுற்று வழிக்கொள்வாராய்ப் பெண்ணையாற் றைக் கடந்து சூரியன் மேற்கடலிற் செலவணையும் பொழு தணையும் நேரத்தில் திருவதிகைப் புறத்தணைந்து அஃது உடைய அரசு உழவாரப் படையாளி விடையவர்க்குக் கைத்தொண்டு செய்த பெரும்பதியாதலால், அதனை நான் மிதிக்கமாட்டே னென்றஞ்சி யடையாமல் புறம்பணையி லுள்ள ''சித்தவடமடம்'' புகுந்து அதனிடத்துத் திருவீரட்

டானரைத் திருவுளத்திற் கொண்டு பள்ளியமர்ந்தார். அப்போது இறைவர் முதுவடிவின் மறையவராய் முன்னொருவரறியாதே மடத்திற் புகுந்து நாயனரது திருமுடிமேல் திருவடித் தாமரைகளை வைத்துப் பள்ளிகொள்வார் போலிருந்தார். அதனை ஆரூரர் உணர்ந்து "முதுமறையோய் உன்னடி என் சென்னியில் வைத்தனை" என்ன, இறைவர் "திசையறியா வகைசெய்தது என்னுடைய மூப்புக் காண்" என்றருளியதனல் அவர் அதற்கிசைந்து தமது முடியை யப்பால் வைத்துத் துயிலுணர்ந்தும் அங்கும் அவர் திருமுடிமேல் மீட்டும் இறைவர்தாள் நீட்டியபோது திருநாவலூரர் "இங்கு எனைப் பலகாலும் மிதித்தனை நீ யார்" என்று கேட்டனர். அதற்கிறைவர் என்னையறிந்திலையோ வெனத் திருவுருக்கரந்தார். உடனே வன்றொண்டர் "செம்மாந்திங்கு யானறியா தென்செய்தேன்" எனத் தெளிந்து இப் பதிகத்தைப் பாடியருளினர்.

——

திருத்தொண்டத்தொகை

பண் - கொல்லிக்கௌவாணம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனூர்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தமடியார்க்குமடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்குமடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற்கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கு
மடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ்செருத்துணைதனடியார்க்குமடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 11

திருச்சிற்றம்பலம்

பரவையாரை மணந்த பாவலர் பெருமான் ஒரு நாள் பல முனிவரோடும் திருக்கோயிலை யடைந்து தேவாசிரியத் திருக்காவணத்து எண்ணிலராய்க் கூடியிருந்த அடியவரைக் கண்டு இவர்க்கு யான் அடியானாகும் நாள் எந்நாள் என்

றெண்ணி உள்ளே செல்ல இறைவர் அவர்க்கு எதிரே தமது திருவுருவைக் காட்டியெழுந்தருளலும் அவர் திருவடிகளைப் பணிந்து பூண்டு ஏத்தி நின்ருர். நின்ற அவர்க்கு இறைவர் அவ்வடியார் வழித்தொண்டை யுணர நல்கி அவர் பெருமையையும் விளக்கி யருளி இவரை நீ யடைந்து பாடுவாயாக எனப் பணித்தருளினர். நம்பியாரூரரும் ஏதந்தீர் நெறியைப் பெற்றேனென்று எதிர்வணங்கி "இன்னவாறு இன்ன பண்பு என்று எவ்வாறு ஏத்துகேன்? அதற்கு யான் யார்? பாடும் பரிசைத் தேவரீர் எனக்கு அருள் செய்ய வேண்டு"மென்று வேண்ட,உமைபாகர் உலகம் அல்லல் தீர்ந்துய்ய மறையளித்த திருவாக்கால் "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று எல்லையில் வண்புகழாரை இசைப்பாமொழியென்று அடியெடுத்துக் கொடுத்தருளினர். ஆரூரர் அடியவரைத் தூரத்தே பலமுறை தொழுதணைந்து அருகு சென்று அழியா வீரத்தாராகிய அவ்வடியார்க்கெல்லாம் தனித்தனி வேறடியேனென்று ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகை என்னும் இதனையருளிச் செய்து அவர் எதிர்பணிந்து திருக்கூட்டத்தின் நடுவணைந்தார்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

பண் - கொல்லிக்கௌவாணம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

முதுவாய்ஓரி கதறமுதுகாட்
டெரிகொண்டாடல் முயல்வானே
மதுவார்கொன்றைப் புதுவீசூடும்
மலையான்மகள்தன் மணவாளா
கதுவாய்த்தலையிற் பலிநீகொள்ளக்
கண்டால்அடியார் கவலாரே

அதுவேஆமா றிதுவோகச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 1

மேலைவிதியே வினையின்பயனே
விரவார்புரமூன் றெரிசெய்தாய்
காலைஎழுந்து தொழுவார்தங்கள்
கவலைகளைவாய் கறைக்கண்டா
மாலைமதியே மலைமேல்மருந்தே
மறவேன்அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 5

அன்னம்மன்னும் வயல்சூழ்கச்சூர்
ஆலக்கோயில் அம்மானை
உன்னமுன்னும் மனத்தாரூரன்
ஆரூரன்பேர் முடிவைத்த
மன்னுபுலவன் வயல்நாவலர்கோன்
செஞ்சொல்நாவன் வன்றொண்டன்
பன்னுதமிழ்நூல் மாலைவல்லார்
அவரெந்தலைமேற் பயில்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றத்தை வழிபட்ட வன்றொண்டர் திருக்கச்சூரை யடைந்து மெய்யன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்தபோது அமுது செய்யும் பொழுதாகி அமுது செய்தளிப்பார் வாராமையால் மிக்க பசி வருத்தத்தால் திருவாயிலின் மதிற் புறத்திருந்தார். மலைமேன் மருந்தான இறைவர் வன்றொண்டர் பசி தீர்க்கும் பொருட்டுப் பிரமன் தலையோடல்லாத வெற்றோட்டைக் கையிலேந்திக்கொண்டு அங்கு வாழும் மறையவராய் வெளிப்பட்டு வந்து நாயனைரைப் பார்த்துப் "பசியினன் மிக வருந்தி யிளைத்துற்றீர். உம்முடைய பசி வேட்கை தீர இப்போது உமக்குக் சோறி

ரந்து கொணர்கின்றேன். அப்புறம் செல்லாது சிறிது பொழுது அமரும்'' எனச் செப்பித் திருக்கச்சூர் மனைதோறும் சென்றிரந்து ஆட்கொண்டவர் முன் கொடுவந்து இன்னடிசிலும்கறியும்அரந்தை தரும் பசிதீர அருந்தும்படிப் பணித்துத் கொடுத்ததை நாயனர் நேர் தொழுது வாங்கித் தமது மருங்கணைந்த அத்தொண்டரோடு உண்டு உவந்திருக்கும் போது இறைவர் மறைந்தருளினர். அதனை யுணர்ந்து மறையவர் இறைவரெனத் தெளிந்து எளியேன் பொருட்டாக இப்பெரும்பகற்கண் பேரோசைச் சிலம்பணி சேவடி வருந்த எழுந்தருளினரே யென வருந்தி உருகிக் கண்ணீர் பொழியப் புளகம் போர்த்த உடம்போடு இப்பதிகத்தால் இறைவரைப் பணிந்து பாடி மகிழ்ந்தார்.

திருநாகைக்காரோணம்

பண் - கொல்லிக்கௌவாணம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிருடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 1

வேம்பினொடு தீங்கரும்பு விரவிஎனைத் தீற்றி
விருத்திநான் உமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்

பாம்பினொடு படர்சடைகள் அவைகாட்டி வெருட்டிப்
பகட்டநான் ஒட்டுவனே பலகாலும் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 2

மறிஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மாநெதியந் தருவனென்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள்
கிறியுமாற் படுவேனே திருவாணை உண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பாண்டிக்கொடுமுடி

பண் – பழம்பஞ்சுரம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இனிப் பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 1

இட்ட னும்மடி ஏத்து வார்இகழ்ந்
திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 2

ஓவு நாள்உணர் வழியும் நாள்உயிர்
போகும்நாள்உயர் பாடைமேல்
காவும் நாள்இவை என்ற லாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 3

எல்லையில்புகழ் எம்பிரான்எந்தை
தம்பிரான்என்பொன் மாமணி
கல்லைஉந்தி வளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 4

அஞ்சினூர்க் கரண் ஆதிஎன்றடி
யேனும்நான்மிக அஞ்சினேன்
அஞ்சல்என்றடித் தொண்ட னேற்கருள்
நல்கினுய்க்கழி கின்றதென்

பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 5

ஏடுவான்இளந் திங்கள்சூடினை
என்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்ப தரைக்க சைத்த
அழகனேஅந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழி பரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 6

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 7

செம்பொனேர்சடை யாய்திரிபுரம்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயில்
ஆடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 8

சாரணன் தந்தை எம்பிரான் எந்தை
தம்பிரான்என்பொன் மாமணியென் று
பேரெணுயிர கோடி தேவர்
பிதற்றிநின் று பிரிகிலார்
நாரணன்பிர மன்தொழுங் கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 9

கோணி யபிறை சூடியைக் கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணிய பெரு மானைப் பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்டன் ஊரன்சொல்லி வை
சொல்லுவார்க்கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

கொங்கு நாட்டையடைந்த வன்றொண்டர் கறையூர்க் கொடுமுடிக் கோயிலைக் குறுகிப் புனிதர் பொன்மேனியை வணங்கி இவர் தம்மை மறக்கவொண்ணாதென்னும் குறிப்பால் "அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம் அஞ்செழுத் தறிய எப்பொழுதும் எண்ணிய நாவே இன்சுவை பெருக இடையறாதியம்பும்" என்னுமுணர்வினையுடையார் இந்நமச் சிவாயத் திருப்பதிகத்தைப் பிணிப்புற்ற பேரன்பிற் பாடி யருளினர்.

திருமுருகன்பூண்டி

பண் - பழம்பஞ்சுரம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்கும் இடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்
முருகன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானிரே. 1

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினால்எறிந் திட்டு மோதியுங்
கூறைகொள் ளுமிடம்
முல்லைத் தாது மணங் கமழ்
முருகன்பூண்டி மாநகர்வாய்
எல்லை காப்பதொன் றில்லை யாகில்நீர்
எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானிரே. 2

முந்தி வானவர் தாந்தொழு
முருகன்பூண்டி மாநகர்வாய்ப்
பந்த ணைவிரற் பாவை தன்னையோர்
பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்ட னூரன்
உரைத்தன பத்துங்கொண்
டெந்தம் மடிகளை ஏத்துவார் இடர்
ஒன் றுந்தாம் இலரே. 10

திருச்சிற்றம்பலம்

மலைநாட்டிலே திருவஞ்சைக் களத்திலே சேரர்பெருமானோடு அளவளாவியிருந்த வன்றொண்டப் பெருமான் திருவாரூரை மிக்வும் நினைந்த சிந்தையராய்த் திருத்தொண்டரோடு வழிக் கொள்ளும்போது சேரர்பிரான் முன்வந்து பிரிவாற்றாமையான் மிக வருந்த நாயனர் அவரை அன்றினர் முனை முருக்கியரசாண்டு கொண்டிருக்கும்படிச் சொல்லியருளலும் அது கேட்டு வானவரம்பனர் தமது மந்திரிகளையழைத்து நமது நகரில் இற்றைக்கு முன் புகுந்த பல வகையான நற்பெரும் பண்டாரமெல்லாம் பற்பல ஆள்களின் மேல் ஏற்றி வரும்படிப் பணித்தார். அவரும் பல வகைத் திரவியங்கள் உயர்ந்த பொன்கள், மணிகள், ஆடைகள், பலவகையான விரைப் பண்டங்கள் மற்றும் பிறவற்றையும் பொதியாள்களின் மேல் ஏற்றி எங்கும் நிறையக் கொண்டு வர, அவரைச் சேரர் பெருமான் பரிசனங்களுக்கு முன்னே செல்ல ஏவி நம்பியாரூரரைப் பணிந்து திரும்பினர். ஆரூரரும் மலைநாடு கடந்து கற்சுரங்கள், கான்யாறுகள், பெருங்காடுகள் பல கடந்து, திருமுருகன் பூண்டிக் கருகு செல்லும் பொழுது இறைவர் அவர்க்குத் தாமே பொன் கொடுப்பதல்லாமல் வேறொருவர் கொடுப்பக் கொள்வது கூடாதென்றோ மற்றென்னே, யாமறியோம்! வென்றி மிக்க பூதங்களை வேட வடிவாய்ச் சென்று பொதியாள்களை மறித்துப் பறிக்கும்படி அருளலும், அவைகளும் அவ்வாறே சென்று சினந்தெழுந்து வில்வாங்கி நாணிலே அம்புகளைத் தொடுத்து அச்சுறுத்திப் பறித்து ஆரூரர்பாற் செல்லாது நீங்கின. நம்பியாரூரரும் திருமுருகன்பூண்டியை யடைந்து கோயிலைச் சேர்ந்து வலம் வந்து பணிந்து திருமுன்பு போய்க் கைகூப்பி வணங்கியெழுந்து "வெருவுற வேடுவர் பறிக்கும் வெஞ்சுரத்தில் எத்துக்கிங் கிருந்தீர்" என்று வைத்துக் "கொடுகு வெஞ்சிலை" யென்னுமிப்பதிகம் பாடியருளினர். பாடிப் பரவிய பின் இறைவர் பறித்த வப்பொன்னையெல்லாம் கோபுரவாயிலின் மருங்கு குவித்து இடலும் நாயனர் பணிந்து அவைகளையப்படியே கொண்டு இறைவனை வணங்கித் திருவாரூருக்கெழுந்தருளினர்.

திருஆரூர்

பண் - பழம்பஞ்சுரம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பத்திமையும் அடிமையையும்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே. 1

இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப்
பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம்வந் தெனைஆண்ட
அருமருந்தென் ஆரமுதை
வெங்கனல்மா மேனியனை
மான்மருவுங் கையானை
எங்ஙனம்நான் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. 4

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக் குடனாகி
மாழைஒண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

பண்-தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றுனுல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. 1

ஈன்றுகொண்டதோர் சுற்றமொன் றன்று
லியாவ ராகிலென் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித் திட்டாற்
சொல்லு வாரைஅல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வ தேகணக் குவழக் காகில்
ஊன்று கோல்எனக் காவதொன் றருளாய்
ஒற்றியூர்எனும் ஊர்உறை வானே. 4

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல்
ஒற்றி யூர்உறை செல்வனை நாளும்
ஞாலந் தான்பர வப்படு கின்ற
நான்மறை அங்கம் ஓதிய நாவன்
சீலந் தான்பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்றொண்டன் ஊரன் உரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப்
பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

திருவாரூர் வேனில்திருநாளை நினைந்து "பத்திமையுமடிமையையும்" என்னும் திருப்பதிகம்பாடி மிக இரங்கிய திருநாவலூரர் பின்னொரு நாள்திருவாரூரை மிகநினைந்து படம் பக்கநாதருடைய திருக்கோயிலுள்ளே சென்று பணிந்து திருவொற்றியூரை நீங்க அடியிட்ட அளவில் சங்கிலியாருக்கு அவர் செய்து கொடுத்த ஆணையால் மேலடியெடுத்து வைக்க வழிதோன்ருது கண்கள் மறைந்து மூர்ச்சித்துப் பிறகு செய்வதிது வென்றறியாது நெட்டுயிர்த்துச் சூளுறவு மறுத்ததனல் நேர்ந்ததிதுவென நினைந்து இத்துயர் நீங்க இறைவனைப் பாடுவேன் என்று எண்ணி இழுக்கு நீக்கிடவும் எய்தும் வெந்துயர்க்கையறவினுக்கும் பழிக்கும் வெள்கியும் நல்லபண்ணிசை பொருந்திய இத்திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்புன்கூர்

பண் தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினுய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தைநீஎனை நமன் தமர் நலியின்
இவன்மற் றென்அடி யான்என விலக்கும்
சிந்தை யால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 1

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர் கோன்உற்ற இரும்பிணி தவிர்த்துக்

கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல் வெண்மணற் சிவன் றன்மேற் சென்ற
தாதை தாள்அற எறிந்தசண் டிக்குன்
சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொழில் திருப் புன்கூர் உளானே. 3

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்உடை யானைச்
செம்பொ னேஒக்குந் திருவுருவானைச்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானை
உம்ப ராளியை உமையவள் கோனை
ஊரன் வன்றொண்டன் உள்ளத் தால்உகந்
தன்பி னாற்சொன்ன அருந்தமிழ் ஐந்தோ
டைந்தும் வல்லவர் அருவினை இலரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்

பண் - தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே. 1

கார்க்கின் றமழை யாப்பொழி வானைக்
கலைக்கெலாம் பொரு ளாய்உடன் கூடிப்
பார்க்கின் றஉயிர்க் குப்பரிந் தானைப்
பகலும் கங்குலும் ஆகிநின் றானை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை
உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை
ஆரு ரானை மறக்கலு மாமே. 3

வாளா நின்று தொழும் அடி யார்கள்
வானுளப் பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாணு ளும்மலர் இட்டுவ ணங்கார்
நம்மையாள் கின்ற தன்மையை ஓரார்
கேளா நான்கிடந் தேஉழைக் கின்றேன்
கிளைக்கெ லாந்துணை யாமெனக் கருதி
ஆளா வான்பலர் முன்பழைக் கின்றேன்
ஆரு ரானை மறக்கலு மாமே. 8

ஒட்டி ஆட்கொண்டு போய்ஒளித் திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லைஇருள் தன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்ட னைச்செல்வ
ஆரு ரானை மறக்கலு மாமே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சி ஏகம்பம்

பண் – தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 1

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடா னஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 8

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவிஓ டித்தழு வவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

திருவாலங்காட்டை வணங்கிப் போய்த் திருவூறலமர்ந் திறைஞ்சி காஞ்சிமாநகரணைந்த சுந்தரமூர்த்தி நாயனுர் திருக்காமக் கோட்டத்தில் எண்ணிலா உயிர்க் கெல்லாம் இகவாத அருளினலான திருவறம் புரக்கும் அம்மையைப் பணிந்து போற்றித் தொல்லுலகம் முழுதுமளித்தழித்தா க்கும் முதல்வர் திருவேகம்ப மடைந்து அடியவர் எதிர் கொள்ளச் சென்று புக்குப் பணிபவர், "இழுதையேன் என் மொழிவேன்" என்றிறைஞ்சி விண்ணுள்வா ரமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட கண்ணுளா கச்சியேகம்பனே, கடையானேன் எண்ணுத பிழை பொறுத்து இன்று யான் காணக் கண்ணளித்தருளாய், எழிற் பவள வண்ணனே" என்று வணங்கினர். வணங்கிக் காமக்கோட்டியம்மையார் கைம் மலர்களாற் பனிமலர்கள் கொண்டருச்சித்த சேவடிகளை மிக நினைந்து பேரன்போடு பரவிப் போற்றிய ஆரூரருக்கு மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண் கொடுத் தார். பெருந்தேவரிருவராலும் மூலமறிதற்கரியான் கண்ண ளித்து மூலேச்சுவட்டுக் கோலங் காட்டுதலும் நம்பியாரூரர் குறுகிவிழுந்தெழுந்து களித்து "ஆலந்தானுகந்து" என்றிப் பதிகம் பாடினர்.

———

திருவலிவலம்

பண் - தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

ஊனங் கத்துயிர்ப் பாயஉல கெல்லாம்
ஓங்கார த்துரு ஆகி நின் ருனை
வானங் கைத்தவர்க் கும்அளப் பரிய
வள்ள லைஅடி யார்கள்தம் உள்ளத்

தேனங் கத்தமு தாகிஉள் ளூறும்
தேச னைத்திளைத் தற்கினி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்து கண்டேனே. 1

பல்லடி யார்பணிக் குப்பரி வானைப்
பாடிஆ டும்பத்தர்க் கன்புடை யானைச்
செல்லடி யேநெருக் கித்திறம் பாது
சேர்ந்தவர்க் கேசித்தி முத்திசெய் வானை
நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை
நானுறு குறைஅறிந் தருள்புரி வானை
வல்லடி யார்மனத் திச்சையு ளானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 2

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்லி யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 5

திருச்சிற்றம்பலம்

திருநள்ளாறு

பண் - தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருளறுத் தருளுந்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடிய னென்னை ஆளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 6

மாதி னுக்குடம் பிடங்கொடுத் தானை
மணியி னைப்பணி வார்வினை கெடுக்கும்
வேதனை வேத வேள்வியர் வணங்கும்
விமலனைஅடி யேற்கெளி வந்த
தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 8

திருச்சிற்றம்பலம்.

வடதிருமுல்லைவாயில்

பண் - தக்கேசி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

திருவும் மெய்ப்பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி

ஒருவரை மதியா துருமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனுய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயிஞல் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 1

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர்
வெருவிட வேழமன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய்
சங்கிலிக் காஎன் கண் கொண்ட
பண்பநின் அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ் சுடரே. 3

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங்
கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்றுமீ தோடுந் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 4

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில்
நாயினேன் றன்னை ஆட் கொண்ட
சம்புவே உம்ப ரார்தொழு தேத்துந்
தடங்கடல் நஞ்சுண்ட கண்டா
செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வாயில்
தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப் தாபரஞ் சுடரே. 8

சொல்லரும் புகழான்தொண்டைமான்களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்
டருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில்
நாதனே நரைவிடை ஏறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம்

பண் - நட்டபாடை (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நத்தார்புடை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 1

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

வெய்யவினை யாயஅடி யார்மேல்ஒழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேர்இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறும் மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றம்

பண் – நட்டபாடை (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

கொன்றுசெய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்றபாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர்பிரானிடம்
கன்றினேடு பிடிசூழ் தண் கழுக் குன்றமே. 1

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்

பண் - புறநீர்மை (7–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென் திரு வாரூர்புக்
கெந்தை பிரானுரை என்றுகொல் எய்துவதே. 1

திருச்சிற்றம்பலம்

திருக்கூடலையாற்றூர்

பண் - புறநீர்மை (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

வடிவுடை மழுஏந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடிஅணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 1

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை அதிசயம் இதுவென்று
நாடிய இன்றமிழால் நாவல ஊரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே. 10

திருச்சிற்றம்பலம்

திருவின்னம்பர், திருப்புறம்பயம் என்னும் திருப்பதிகளை வணங்கிய நம்பியாரூரர் திருக்கூட்டத்தினருடன் மற்றும் திருப்பதிகளை வணங்கச் செல்லும்போது திருக்கூடலையாற்றூரை யடைந்தவர், அங்குச் செல்லாது திருமுதுகுன்றை நோக்கிச் செல்வாராயினார். அப்படிச் செல்லும் வழியில் உமைமணவாளர் பூணூலணிந்த மறையவராய் முன்வந்து நிற்ப, நாயனார் அவரைப் பார்த்துத் திருமுதுகுன்றத்திற்கு வழி யாதென்று கேட்டபோது இறைவர் இவ்வழி கூடலையாற்றூரை யுடையதாய்த் திருமுதுகுன்றத்துக்குச் செல்வதெனச்சொல்லியுடன்சென்றார். சிறிதுதூரம் சென்று அவரைக் காணாத வன்றொண்டர் வியந்துஇப்பதிகம் எடுத்துப் பாடிக் கூடலையாற்றூரை யடைந்து வழிபட்டுத் திருமுதுகுன்றஞ் சேர்ந்தார்.

திருவெண்பாக்கம்

பண் – சீகாமரம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராமே
படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து
உளோம்போகீர் என்றானே. 1

இடையறியேன் தலையறியேன்
எம்பெருமான் சரணமென்பேன்
நடையுடையன் நம்மடியான்
என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன்
வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான்
உளோம்போகீர் என்றானே. 2

செய்வினைஒன் றறியாதேன்
திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும்
பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா
யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான்
உளோம்போகீர் என்றானே. 3

திருச்சிற்றம்பலம்

திருவாரூரையடையவிரும்பித்திருவொற்றியூரினின்றும் புறப்பட்டுக் கண்கள் மறையப்பெற்றுத் திருமுல்லை வாயிலை யடைந்து பாடிய நம்பியாரூரர், திருவெண்பாக்கத் தொண்டர்கள் எதிர்கொள்ள அதனை யடைந்து திருக் கோயிலிற் சென்று வலம்வந்து திருமுன்னின்று தலையின் மேல் கைகுவித்து வணங்கிப் "பிழையுளன பொறுத்திடுவர்" என்றெடுத்துக் , கோயிலுளீரே என்றபோது ஊன்று கோலொன்றருளி "உளோம் போகீர்" என்றருளியதை மற்றொரு பாட்டின் வைத்துப் பாடி என்னுடைய் பிரானருள் இத்தனை கொலாம் என்று தொண்டருடன் வழிக்கொள்வா ராயினர்.

கோயில்

பண் - குறிஞ்சி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மடித்தாடு மடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரிஅகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்றாற்போல்
அன்றியே பிரியாதுள் கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவினரை

ஓராது தருமனுர் தமர்செக்கில் இடும்போது
தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 2

பாரூரும் அரவல்குல் உமைநங்கை யவள்பங்கன்
பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனுர் தமர்செக்கில் இடும்போது
தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில்
அணிகாஞ்சி வாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற
றம்பலத்தே பெற்ரு மன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றத்திற் பெற்ற பொற்குவையைத் திருவாரூர்க் குளத்தில் எடுக்கும்படி மணிமுத்தாற்றிலிட்டு வருகின்ற வன்ருெண்டப் பெருமான் வழிக்கொண்டு திருத்தில்லையை யடைந்து திருவாயிலில் சென்று திருவீதிகளில் சென்று வணங்கித் "தூலலிலிங்கத்தைப்" பணிந்து உள்ளே புக்குத் திருமாளிகையை வலம்வந்து, தலையிற்குவித்த கைகளையுடையராய்த் திருவணுக்கன் திருவாயிலைக் கடந்து பொன்னம்பலத்தையடைந்து ஐந்தொழி லருட்கூத்தினைச் செய்யும் திருவடிகளைக் கண்களில் இன்ப அருவி சொரியவும் ஏத்தும் வாய் குளற எட்டுறுப்பானும் வணங்கும் வேட்கை கூற வணங்கிப் பரவி, இத்திருப்பதிகத்தை யெடுத்துத் திருப்பேரூரில் தாம் கண்ட நிலையைச் சிறப்பித்துத் "தனிக்கூத்தென்றும் நடிப்பானை நாம் மனமே பெற்றவாறு" என்று பாடியருளினர்.

திருப்புக்கொளியூர் அவிநாசி

பண் - குறிஞ்சி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெரு மானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின்
றேன்உணர்ந்துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி
யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன்பசுபதி
யேபரமேட்டியே. 1

வழிபோவார் தம்மோடும்
வந்துடன் கூடிய மாணிநீ
ஒழிவதழகோ சொல்லாய்
அருளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப் புக்கொளி
யூரிற் குளத்திடை
இழியாக் குளித்த மாணி
எனைக்கிறி செய்ததே. 2

உரைப்பார் உரைஉகந் துள்கவல்
லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும்
அந்தமும் ஆயினாய்
புறைக்காடு சோலைப்
புக்கொளி யூரவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை
தரச்சொல்லு காலனையே. 4

நள்ளாறு தெள்ளா றரத்துறை
வாய்எங்கள் நம்பனே

வெள்ளாடை வேண்டாய் வேங்கையின்
　　தோலை விரும்பினாய்
புள்ளேறு சோலைப் புக்கொளி
　　யூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்கமாணியென்
　　னைக்கிறி செய்ததே. 9

திருச்சிற்றம்பலம்

நம்பியாரூரர் சேரமான் பெருமானாயனாரை நினைத்துத் திருவாரூரினின்றும் புறப்பட்டு அவர்பால் செல்கின்றவர் கொங்கு நாட்டையடைந்து திருப்புக்கொளியூர் வழியாகச் செல்வாராயினர். அப்போது அவ்வூர் மறையவர் தெருவொன்றில் ஒரு வீட்டில் அழுகையொலியும், அதற்கெதிரான மற்றொரு வீட்டில் மங்கல ஒலியும் எழுதலை நாயனார் கண்டு வியந்து அருகிருந்தாரை என்னென்று வினவினர். அவர் "ஐந்தாண்டுநிரம்பியஇவ்விரண்டுவீட்டுப்பிள்ளைகளும் ஒரு கால் அருகுள்ள குளத்துக்குச் சென்று நீராடினாராக அவருள் ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றவன் வீடு சேர்ந்தான்; வீடு சேர்ந்தவனுக்கு இன்று பூணூற்றிருமணம்; ஆதலால் அவ்வீட்டில் மங்கல ஒலியும், அதுகண்டு எதிர் வீட்டில் முதலை விழுங்கின தன் மகனையெண்ணி ஆற்றாராய்ப் பெற்றோர் செய்யும் அழுகையொலியும் ஒரே காலத்தில் எழுகின்றன" என்றார்கள். நாயனார் கேட்டு இரங்கினர். இதற்குள் நாயனார் வரவு கேட்ட அவ்வழுகை யொலிப் பெற்றோர் அவர் வரவுக்கு மகிழ்ந்து எதிர்வந்து வணங்கினர். நம்பியாரூரர் பின்னும் இரக்கம் மிக்கவராய்த் "திருவருளால் இவர்கள் குழந்தையை முதலை வாயினின்றும் மீட்டுத் தந்து அவிநாசிப் பெருமானை வணங்குவேன்" என்று உறுதி செய்து கொண்டு குளத்தையணுகி "எற்றான்மறக்கேன்" என்னுமித் திருப்பதிகத்தை யெடுத்துக் "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" என்று கூறலும், அம்முதலை சென்ற ஆண்டுகளும் நிரம்பிய அம்மகனைக் கரையிற்

கொணர்ந்து உமிழ்ந்தது. உடனே பெற்ருேர் முதலிய எல்லோரும் உளங்காண வியப்பும் மகிழ்ச்சியும் மிக்கவராய் ஆருரரையும் அவிநாசியப்பரையும் வணங்கி யேத்தினர்; அப்பால் நாயனுர் அக்குழந்தைக்கும் எதிர் வீட்டுக் குழந்தையோ டொப்ப அப்போதே பூணூ ற்றிருமணஞ் செய் வித்து அவ்வீட்டில் மங்கல வொலியை ஒப்ப எழுவித்து அவிநாசியப்பரை உளங்கரைந்து தொழுது உடனே மலை நாட்டுக்குப் புறப்பட்டருளினர்.

திருவாரூர்

பண் - செந்துருத்தி (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன்
விரும்பி ஆட்பட் டேன்
குற்றம் ஒன் றுஞ் செய்ததில்லை
கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே. 2

ஆயம் பேடை அடையுஞ் சோலை
ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா
றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே. 7

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங்கிடந்தும்உம்மை
இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால்
வாழ்ந்து போதீரே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சி யேகம்பத்தில் இடக்கண் கொடுத்தருளப் பெற்றுத் திருவாரூரை யடைந்த நம்பியாரூரர் வன்மீக நாதரைக் காண்டற்கு அவ்வொருகண் போதாமையால் மிக வருந்தி மற்றொரு கண்ணையும் அளித்தருள வேண்டுமென்று வேண்டுங் குறிப்பினராய், அப்பெருமானோடு ஊடி "மீளா வடிமை" யென்னும் இத் திருப்பதிகத்தைப் பாடுதலும் இறைவன் திருவுளமிரங்கி அவர்க்கவரது வலக்கண்ணையும் கொடுத்தருளினர். நாயனார் தம் இரண்டு கண்களாலும் இறைவனைக் காணப் பெற்றுப் பேரின்பத்திற் படிந்து நின்றனர்.

——

திருவாரூர்ப் பரவையுண்மண்டளி

பண் - பஞ்சமம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயா கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்
காவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே. 1

அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி யம்மானே. 6

விண்டானே மேலையார் மேலையார் மேலாய
எண்டானேஎழுத்தொடுசொற்பொருள்எல்லாமுன்
கண்டானே கண்டனைக் கொண்டிட்டுக்காட்டாயே
அண்டானே பரவையுண் மண்டளி அம்மானே. 7

திருச்சிற்றம்பலம்

திருஐயாறு

பண் - காந்தாரபஞ்சமம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசொன் றறியேனான்
பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலு
மெய்தநினைய மாட்டேனான்

கரவி லருவி கமுகுண்ணத்
தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 1

கூடி யடியா ரிருந்தாலும் குணமொன்
றில்லீர் குறிப்பிலீர்
ஊடி யிருந்து முணர்கிலே
னும்மைத் தொண்ட னூரனேன்
தேடி யெங்குங் காண்கிலேன்
திருவாரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா வாரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ.

திருச்சிற்றம்பலம்

மகோதையினின்றெழுந்தருளித் திருவாரூரையடைந்து நம்பியாரூரரை வணங்கி, அளவளாவி அவரோடுடனிருந்த சேரமான் பெருமாணயனர் அவரைப் பலகாலும் வேண்டித் தமது நாட்டுக்கு எழுந்தருளும்படி இசைவுபெற்றுப் பயணத்திற்குரிய அடியார்களுக்கும் உணவிடுவித்தார். பிறகு ஒரு நாள் இரு நாயன்மார்களும் இறைவனை வணங்கிப் புறப்பட்டு மேற்பாற் செல்கின்றவர்கள் காவிரியின் தென் கரையில் பல திருப்பதிகளையும் வணங்கித் திருக்கண்டியூரை அணைந்து வணங்கினர்கள். வணங்கியவர்சுள் வடகரையிற் றிருவையாறு தோன்றக் கண்டு கைகூப்பி வணங்கிக் காவிரி கடல் பரந்ததுபோல் பெருகுவதைக் கடந்து தொழுதற்கு நினைந்து சேரர் பெருமான் நம்பியாரூரரை நோக்கித் திருவையாறிறைஞ்ச நெஞ்சம் உருகி னையா நின்றது. "ஆற்றைக்கடந்து பணிவோம்" என்றுகூற ஆறு பெருகி வேறு நாவா யோடங்கள் மீது செல்லா வகை மிகைப்ப அன்பின் வழியே வழியாகச் செல்ல உரிய வன்றெண்டர் இறைவர் திருவடி பணிந்து ஆற்றுதழைத்துப்

"பரவும் பரிசொன்" றென்றெடுத்துத் திருப்பாட்டின் முடிவில் அரவம் புனைவாரை "ஐயாறுடைய அடிகளோ" என்று வைத்துப் பாடியருளலும் மன்றினிறைந் தாடவல்ல மாதேவன் காவிரியாறுனது இடையிலே விலகிவழி காட்டத் தாம் கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் கற்றுப்போல் ஒன்று முணர்ச்சியாற் "சரா சரங்கள்" எல்லாம் கேட்க ஓலம் என்ற ஒரு மொழியை திருவையாற்றினின்றும் அருளிச் செய்தார். உடனே காவிரியாறுனது மேல்பால் வெள்ளம் பளிங்கு மலைபோற்றடையுண்டு நிற்கக் கீழ்பால் நீர்வடிந்து நடுவே நல்ல வழி பண்ணி மணல் பரப்பக்கண்டு தொண்டர் இருவரும் கண்களில் இன்பவருவி சொரிய மயிர்ப்புளகம் கலக்கக் கைகுவித்து வணங்கி ஆறு கடந்து சென்று திருவையாற்றையடைந்து செம்பொற் சோதி நாதரைப் பணிந்து பரவி விடை பெற்று மீண்டும் முன் வந்த வழியே காவிரியைக் கடந்து கரை யேறியவுடனே ஆறுனது முன்போற் பெருகத் தொடங்கியது. இச்செயலின் வியப்பை இருவருங்கண்டு திருவருளைப் போற்றிப் பிறபதிகளையும் வணங்கிக் கொங்கு நாட்டை யடைந்தார்கள்.

திருநாட்டியத்தான்குடி

பண் - தக்கராகம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பூணுவதொ ரரவங் டண்டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீராகிலும் பெருமையை யுணர்வேன்
பிறவேனுகிலு மறவேன்
காணீராகிலுங் காண்பனென் மனத்தாற்
கருதீராகிலுங் கருதி

நானே லும்மடி பாடுதலொழியேன்
நாட்டியத்தான்குடி நம்பீ. 1

கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார்தொல்புகழ் நாட்டியத்தான்குடி
நம்பியை நாளு மறவாச்
சேடார்பூங்குழல் சிங்கடியப்பன்
திருவாரூர னுரைத்த
பாடீராகிலும் பாடுமின்றொண்டீர்
பாடநும் பாவம்பற் றறுமே. 10

திருச்சிற்றம்பலம்

வன்றொண்டப் பெருமான் திருவாரூரில் எழுந்தருளி யிருக்கும்போது கோட்புலி நாயனர் அவரை யடைந்து தம் பதிக்கு எழுந்தருள வேண்டுமென்று குறையிரந்து இசைவு கொண்டு தமது பதிக்கேகினர். நம்பியாரூரரும் திருவாரூரினின்றும் புறப்பட்டுப் பலபதிகளை வணங்கி வழிபட்டுத் திருநாட்டியத்தான்குடியை யடையக் கோட்புலி நாயனர் தமது நகரத்தை ஏலும் வகையால் அலங்கரித்து எதிர் கொண்டிறைஞ்சித் தமது மாளிகையி லெழுந்தருளச் செய்து பொற்றவிசிலிருத்தித் திருவடியினை விளக்கி யருச்சித்து அடைக்காய் முதலியவற்றைப் பல பாசனத்தேந்தியும், திருப்பள்ளித் தாமங்கள் மிகவெடுத்தும், திருவாபரணவ்ருக்கம் பல தாங்கியும், பலவிதத்துப் பரிவட்டங்கள் ஊழினிரைத்தும் எதிரிறைஞ்சிப் பூசித்துத் தமது மனையிற்றிருவமுது செய்வித்துப் பெருவிருப்பாற்றும் பெற்றெடுத்த தேனர் கோதைச் சிங்கடியாரையும் மானர் நோக்கின் வனப்பகையாரையும் கொணர்ந்து நாயனரைப் பணிவித்துப் பணிந்து "அடியேன் பெற்ற மக்களிவரை யடிமையாகக் கொண்டருளிக் கருணை யளிக்க வேண்டும்." என்று வேண்டினர். சுவாமிகள் இவரெனக்குத் தூா

மக்களெனக் கருதி மகன்மைகொண்டு அவரைத் தம் துடையின் வைத்து, உட்கசிவால் அணைத்து உச்சிமீது கண்ணீர் விழ மோந்து அவர் வேண்டுவன கொடுத்துத் திருக்கோயிலுக்கு எழுந்தருளி இறைவனை வணங்கிப் "பூணுவதோரரவம் கண்டஞ்சேன்" என்னும் திருப்பதிகம் எடுத்து அதன் திருக்கடைக்காப்பில் கோட்புலி நாயனுரைக் "கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி" என்று சிறப்பித்துத் தம்மையும் அவர் மக்களை மகன்மை கொண்ட படியின் சிங்கடியப்பன் என்று வைத்தருளினர்.

திருநொடித்தான்மலை

பண் - பஞ்சமம் (7-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான்
அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ
நாயினேனைப் பொருட் படுத்து
வானெனை வந் தெதிர்கொள்ள
மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான்
நொடித்தான்மலை உத்தமனே 1

ஆனை யுரித்தபகை
யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி
யொள்ளியானை நினைந்திருந்தேன்

வானை மதித்தமரர்
வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனை யருள்புரிந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. 2

மந்திர மொன்ற றியேன்
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால்
துரிசேசெயும் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில்
அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே
நொடித்தான்மலை யுத்தமனே. 3

வாழ்வை யுகந்தநெஞ்சே
மடவார்தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தவென்னை
அதுமாற்றி யமரரெல்லாம்
சூழ வருள்புரிந்து
தொண்டனேன் பரமல்லதொரு
வேழ மருள்புரிந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. 4

மண்ணுல கிற்பிறந்து
நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல்
தொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள்
விரும்ப வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. 5

அஞ்சினை யொன்றிநின்று
அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே
வைகிவானநன் ஞடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத்
தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின வானைதந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. 6

நிலைகெட விண்ணதிர
நிலமெங்கு மதிர்ந்தசைய
மலையிடை யானையேறி
வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன்
அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம்
நொடித்தான்மலை யுத்தமனே. 7

அரவொலி யாகமங்கள்
அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி
விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து
வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன்
எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை
மத்தயானை அருள்புரிந்து

மந்திர மாமுனிவர்
இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான்
நொடித்தான்மலை உத்தமனே. 9

ஊழிதோ றூழிமுற்றும்
உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின்
சுவைநாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால்
இசைந்தேத்திய பத்திவையும்
ஆழி கடலரையா
அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார் கடைசியாகத் திருவஞ்சைக் களத்தில் சேரமான் பெருமாள் நாயனாருடன் தங்கியிருந்த காலத்து ஒரு நாள், திருக்கோயிலுக்குச் சென்று பெருமானிடம் தான் வந்த வேலை நிறைவு எய்திவிட்டதால் தன்னை யினித் திருக்கயிலைக்கு அழைத்துக்கொள்ளுமாறு வேண்டினார். இவ் விண்ணப்பம் கயிலைப் பரமன் திருச்செவியில் சார்ந்தது. உடனே பரமன் பெரிய தேவர்களாகிய திருமால், பிரமன் முதலியோரை அழைத்து அவர்களை வெள்ளை யானையுடன் திருவஞ்சைக்களம் சென்று அங்கு எழுந்தருளி யிருக்கும் நம்பியாரூரரை அவ் யானையின் மீது ஏற்றி உபசாரத்துடன் திருக்கயிலைக்கு அழைத்து வருமாறு ஏவினார். அவர்களும் அவ்வாறே திருவஞ்சைக்களம் சென்று அங்கு வணங்கிக்கொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பார்த்து "தாங்கள் இவ்வெள்ளை யானையின் மீதமர்ந்து திருக்கயிலைக்கு எழுந்தருள வேண்டுகிறோம். இது எம்பெருமான் ஆணை" என்றனர். உடனே சுவாமிகளும் பேரானந்த

மடைந்து பெருமான் திருவருளை நினைந்து போற்றி அந்த யானையின் மீது ஏறிக் களையாவுடலோடு திருக் கயிலைக்குச் செல்லும்போது பாடியருளிய பதிகம் இது வாகும். இப்பதிகம் அவர் ஆணையால் வருணன் மூலமாக நிலவுலகத்தில் வந்து சேர்ந்தது.

உ

சிவமயம்

திருவாசகம்

(8-ம் திருமுறை)

சிவபுராணம்

(சிவனது அனாதி முறைமையான பழமை)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி

நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே

ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம்

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேன்உடை
யாயென்னைக் கண்டுகொள்ளே. 1

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட்
டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற
லாமென் னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
யேத்த முழுவதுமே. 6

அறிவுறுத்தல்

நாடகத்தா லுன்னடியார்
போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறு அன்புனக்கென்
ஊடகத்தே நின் றுருகத்
தந்தெருளெம் உடையானே. 11

ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே. 14

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து
தம்மையெல்லாந் தொழவேண்டிச்

சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே. 16

சுட்டறுத்தல்

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பா தப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

ஆத்தும சுத்தி

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே. 31

காருணியத்திரங்கல்

போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை

போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி. 62

ஆனந்தாதீதம்

பாட வேண்டு(ம்)நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டு(ம்)நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டு(ம்)நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டு(ம்)நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. 100

நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பிரான்
என்னைத் தாங்கிக்கொள்ளே. 1

திருச்சிற்றம்பலம்

———

திருவெம்பாவை

(சக்தியை வியந்தது)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற்பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ

எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்

வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றென்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

திருவம்மானை

திருச்சிற்றம்பலம்

பண்சுமந்த பாடற்
பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்
பெம்மான் பெருந்துறையான
விண்சுமந்த கீர்த்தி
வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்
கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்
டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மானாய். 8

திருக்கோத்தும்பி

தினைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறுங் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக
ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. 3

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட்
கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால்
மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானுன் சாழலோ. 1

திருப்பூவல்லி

எந்தையெந்தாய் சுற்றம்மற்றும்
எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்

அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ. 2

திருச்சிற்றம்பலம்

திருத்தோணோக்கம்

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். 7

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளி யெழுச்சி

(திரோதன சத்தி)

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன் இந் திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்

திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரு(ம்)நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்

மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றூரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியுமானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கி
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உன்
அடியார் நடுவுளிருக்கும் அருளைப்
புரியாய் பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. 1

முன்னின் றாண்டா யெனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடிலடியார்
உன்னின் றிவனார் என்னாரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே. 2

உகந்தா னேயன் புடையடிமைக்
குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்க வாறன் றென்னுரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 3

முழுமுத லேயைம் புலனுக்கும்
மூவர்க் கும்என் றனக்கும்
வழிமுத லேநின் பழவடியார்
திரள்வான் குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க
இரங்குங் கொல்லோவென்
றழுமது வேயன் றிமற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரைசே. 4

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே யென்றுன் அருணோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே ஏசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ. 5

ஏசா நிற்பர் என்னையுனக்
கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும்
பேணா நிற்பேன் நின்னருளே

தேசா நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே. 6

இரங்கு நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களுநீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள்
வாழ்வே வாவென் றருளாயே. 7

அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆரிங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ. 8

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி யினித்தான் நல்காயே. 9

நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறு
வணங்கா மனத்தான் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
அருளா யென்னை யுடையானே. 10

கோயிற்றிருப்பதிகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. 5

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே. 10

அடைக்கலப்பத்து

செழுக்க மலத்திர ளனநின்
சேவடி சேர்ந்தமைந்த

பழுத்த மனத்தடி யருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்க ணுடைப்புன் குரம்பைப்பொல்
லாக்கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்தடி யேன்உடை
யாய்உன் அடைக்கலமே. 1

அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் நீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 1

கண்டபத்து

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே. 3

பிரார்த்தனைப் பத்து

அறவே பெற்றார் நின்னன்பர்
அந்த மின்றி அகநெகவும்

புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே. 6

அச்சப்பத்து

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநா மஞ்சு மாறே. 1

பிடித்தபத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய

தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 9

திருவேசறவு

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

திருவெண்பா

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் [எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார்

திருச்சிற்றம்பலம்

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வம்
மருவளர் மாலையொர் வல்லியின்
ஒல்கி ய(ன்)னநடைவாய்ந்
துருவளர் காமன் றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்
என்சிந்தை யுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு
என்கொலாம்புகுந் தெய்தியதே.

ஆனந்த வெள்ளத் தழுந்துமொர்
ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைதிளைத்
தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ
லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றுதுமுற்
றுதிவ் வணிநலமே.

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா

(9-ம் திருமுறை)

கோயில்

திருமாளிகைத்தேவர்

தனதன்நற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே

கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

திருவிடைக்கழி

சேந்தனர்

மாலுலா மனம்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினன் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னுமென் மெல்லிய லிவளே.

கங்கைகொண்ட சோளேச்சரம்

கருவூர்த்தேவர்

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந்
தொண்டருக் கெண்திசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்

டத்திலங் கொருகூ றுன்கண்வைத்
தவருக் கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கைகொண்டசோ ளேச்சரத்தானே.

அன்னமாய் விசும்பு பறந் தயன்தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி யென்னுளம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனும் இருவா
முக்கணு நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே.

திருச்சாட்டியக்குடி

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் திருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனுஞ் சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமேழ்
இருக்கையிலிருந்த ஈசனுக்கே. 6

திருவிடைமருதூர்

பூந்துருத்திநம்பி காடநம்பி

பந்தமும் பிரிவும் தெரிபொருட்
பனுவற் படிவழிசென்று சென்றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர்
கலவி தெரியினுந் தெரிவுரு வண்ணம்

எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.

திருவாரூர்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந் திங்ஙன்
முரிவதோர் முரிவுமை யளவுந்
தக்கசீர்க் கங்கை யளவுமன் றென்னோ
தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீ ராரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்காள் இவர்தந்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம் குலாவினரே.

கோயில்

கண்டராதித்தர்

நெடியானோடு நான்முகனும்
வானவரும் நெருங்கி
முடியான்முடிகள் மோதிஉக்க
முழுமணி யின் திரளை

அடியார் அலகி னுல்திரட்டும்
அணிதில்லை அம்பலத்துக்
கடியார் கொன்றை மாலையானைக்
காண்பதும் என்றுகொலோ.

கோயில்

வேணாட்டடிகள்

நின்றுநினைந் திருந்துகிடந்
தெழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையா
திருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றுப்போல்
கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே.

கோயில்

திருவாலியமுதனர்

பவளமால் வரையைப் பனிபடர்ந்
தனையதோர் படரொளி தருதிரு நீறுங்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந்
துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவளமா ளிகை சூழ்தரு
தில்லையுள் திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல்மெழு கொக்கின்றதே.

கோயில்

புருடோத்தமநம்பி

தில்லையம் பலத்தெங்கள் தேவதேவைத்
தேறிய அந்தணர் சிந்தைசெய்யும்

எல்லையதாகிய எழில்கொள் சோதி
என்னுயிர் காவல்கொண் டிருந்தளந்தாய்
பல்லையார் பசுந்தலை யோடிடறிப்
பாதமென் மலரடி நோவநீபோய்
அல்லினில் அருநடம் ஆடிலெங்கள்
ஆருயிர் காவலிங் கரிதுதானே.

கோயில்

சேதிராயர்

வாணுதற் கொடி மாலது வாயமிக
நாணம் அற்றனள் நானறி யேன்இனிச்
சேணுதற் பொலி தில்லையு ளீர் உமைக்
காணில் எய்ப்பிலள் காரிகையே.

திருமாளிகைத் தேவர்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்ட னேன் விளம்புமா விளம்பே. 1

சேந்தனார்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்

செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு

கோயில்

சேந்தனுர்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே
புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லாதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும்என்றும் உள்ளபொரு
ளென்றே பல்லாண்டு கூறுதுமே.

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணார்
இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றி சைப்ப
மாலும் அயனும் அறியாநெறி தந்து
வந்தென் மனத்த கத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
ருனுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருமூலர் - திருமந்திரம்

(10-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. 1

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 2

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே. 3

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. 4

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 5

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 6

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. 7

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. 8

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்தன் இவனென்ன மாட்டிக் கொள்ளீரே. 9

மந்திர மாவதும் மாமருந் தாவதுஞ்
தந்திர மாவதுஞ் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. 10

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. 11

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 12

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 13

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. 14

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகிடை
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பரே. 15

மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறு மந்திரம்
மூல னுரைசெய்த முப்ப துபதேசம்
மூல னுரைசெய்த மூன்றும் ஒன்றுமே. 16

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தான்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. 17

திருச்சிற்றம்பலம்

உ

பதினோராந் திருமுறை

திருமுகப்பாசுரம்

திருஆலவாயுடையார்

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்

காரைக்காலம்மையார் – மூத்த திருப்பதிகம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்

தங்கி யலறி யுலறுகாட்டில்
தாழ்சடை யெட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 1

ஒப்பினை யில்லவன் பேய்கள்கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டைபாடப்
பாடிருந் தந்நரி யாழமைப்ப
அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவரே. 11

அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவில்
என்பருக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. 2

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. 5

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான்—இறைவனே

எந்தா யெனவிரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தாலது மாற்று வான். 5

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்—யானேயக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். 7

திருச்சிற்றம்பலம்

க்ஷேத்திரத் திருவெண்பா

ஐயடிகள் காடவர்கோன் நாயனர்

திருச்சிற்றம்பலம்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றுருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணுமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 1

பொன்வண்ணத்தந்தாதி

சேரமான் பெருமாள் நாயனர்

திருச்சிற்றம்பலம்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிகுன்றந்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ண
மாகிய ஈசனுக்கே. 1

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன்
கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன்
மெய் யரும்ப வைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற்
கிவையான் விதித்தனவே.

பொய்யா நரகம் புகினுந்
துறக்கினும் போர்ந்துபுக்கிங்
குய்யா வுடம்பினெ டூர்வ
நடப்ப பறப்பஎன்று
நையா விளியினும் நானிலம்
ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்ருன் அடிமற
வாவரம் வேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்

கைலைபாதி காளத்திபாதி அந்தாதி

நக்கீரதேவ நாயனர்

திருச்சிற்றம்பலம்

சென்றிறைஞ்சும் வானோர்தஞ் சிந்தைக்குஞ் சேயராய்
என்றும் அடியார்க்கு முன்னிற்பர்—நன்று
கனியயவாஞ் சோலைக் கயிலாய மேயார்
இனியவா பத்தர்க் கிவர்.

அறியாம லேனும் அறிந்தேனுஞ் செய்து
செறிகின்ற தீவினைகள் எல்லாம்—நெறிநின்று
நன்முகில்சேர் காளத்தி நாதன் அடிபணிந்து
பொன்முகலி யாடுதலும் போம்.

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

தத்தையாந் தாய்தந்தை நாகனுந் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனுந்—தித்திக்குந்
திண்ணப்ப னும்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்
கண்ணப்ப னுய்நின்முன் காண்.

திருச்சிற்றம்பலம்.

மூத்த நாயனர் திருஇரட்டை மணிமாலை

கபிலதேவ நாயனர்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானேரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்தன்மையினுற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

சிவபெருமான் திருவந்தாதி

பரணதேவர்

திருச்சிற்றம்பலம்

ஆய்ந்துன்றன் பாதம் அடையவரும் என்மேல்
ஆய்ந்தென்றன் பாச மலம்அறுத்—தாய்ந்துன்றன்
பாலனையச் செய்த பரமா பரமேட்டி
பாலணையச் செய்த பரம்.

ஒன்றுரைப்பீர் போலப் பலவுரைத்திட் டோயாதே
ஒன்றுரைப்பீ ராயின் உறுதுணையாம்—ஒன்றுரைத்துப்
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
பேரரவம் பூணும் பிரான்.

சிவபெருமான் திருமும்மணிக்கோவை

இளம்பெருமானடிகள்

திருச்சிற்றம்பலம்

வேதியர் பெரும விண்ணோர் தலைவ
ஆதி நான்முகத் தண்ட வாண
செக்கர் நான்மறைப் புத்தேள் நாட
காய்சின மழவிடைப் பாகநின்
மூவிலை நெடுவேல் பாடுதும்
நாவலம் பெருமை நல்குவோய் எனவே.

மாறு தடுத்த மணிக்கங்கை திங்களின்
கீறு தடுப்பக் கிடக்குமே—நீறடுத்த
செந்தாழ் வரையின் திரள்போல் திருமேனி
எந்தாய்நின் சென்னி இடை.

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

அதிரா அடிகள்

திருச்சிற்றம்பலம்

மொழியின் மறைமுதலே முன்னயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே—தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு.

திருக்கழுமல மும்மணிக்கோவை

பட்டினத்துப் பிள்ளையார்

திருச்சிற்றம்பலம்

போதும் பெறுவிடிற் பச்சிலை
யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறுவிடில் நெஞ்சுண்டென்
றேயிணை யாகச் செப்புஞ்
சூதும் பெறுமுலைப் பங்கர்தென்
தோணிபு ரேசர்வண் டின்
தாதும் பெறுத அடித் தாமரை
சென்று சார்வதற்கே.

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

கல்லாடதேவர்

திருச்சிற்றம்பலம்

பரிவின் தன்மை யுருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த தாழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை யஃகம்
அரையிற் கட்டிய வுடைதோற் கச்சையன்
தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கை கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலையுத் தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
காளைக் குஞ்சிக் கவடி புல்லினன்
முடுகு நாறு குடிலை யாக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன்னினத் தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி

ஏற்றுக் கல்வனங் காற்றினில் இயங்கிக்
கணையில் வீழ்த்துக் கருமா வறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமுந்
தன்றலைச் செருகிய தண்பளித் தாமமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீருங்
கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை யடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக் கொருகணில் உதிரந்
தக்கி ணத்திடை யிழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை யொண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றைக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ணொழிந்தது பாராய்
நல்லை நல்லை எனப்பெறுந்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியங் கெடுமே.

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

பட்டினத்துப்பிள்ளையார்

திருச்சிற்றம்பலம்

பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதா என்பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதா என்பார்க்கு வரும்.

கோயிற்றிருப்பண்ணியரர் திருவிருத்தம்

நம்பியாண்டார் நம்பிகள்

திருச்சிற்றம்பலம்

கதியே அடியவர் எய்ப்பினில்
வைப்பாக் கருதிவைத்த
நிதியே நிமிர்புன் சடைஅமிர்
தேநின்னை என்னுள்வைத்த
மதியே வளர்தில்லை அம்பலத்
தாய்மகிழ் மாமலையாள்
பதியே பொறுத்தருளாய்கொடி
யேன்செய்த பல்பிழையே.

வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவா தவூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே

திருச்சிற்றம்பலம்

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

என்றும் அடியவர் உள்ளத்
 திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்
 துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக்
 குரியன ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ
 சிகாமணி பொன்னடியே.

திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை

தாமரைநகு மகவிதழ் தகுவன
 சாய்பெறுசிறு தளிரினை யனையன
சார்தருமடி யவரிடர் தடிவன
 தாயினும்நல கருணையை யுடையன
தூமதியினை யொருபது கொடுசெய்த
 சோதியின்மிகு கதிரினை யுடையன
தூயனதவ முனிவர்கள் தொழுவன
 தோமறுகுண நிலையின தலையின
ஓமரசினை மறைகளின் முடிவுகள்
 ஓலிடுபரி சொடுதொடர் வரியன
ஓவறு முணர் வொடுசிவ ஒளியனை
 ஊறியகசி வொடுகவி செய்தபுக
ழாமரசுய ரகநெகு மவருள
 ஞரரசதி கையின்அர னருளவ
ஞமரசுகொ ளரசெனை வழிமுழு
 தாளரசுதன் அடியிணை மலர்களே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

பெரியபுராணம் என வழங்கும்

திருத்தொண்டர் புராணம்

(12-ம் திருமுறை)

பாயிரம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருமலைச் சிறப்பு

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என் றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை.

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது.

திருநகரச் சிறப்பு

ஒருமைந்தன் தன்குலத்துக்
குள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை
கடனென்று தன்மைந்தன் 1

மருமம்தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோதான். 1

தண்ணளிவெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்
வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே
அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்ருன்
வீதிவிடங் கப்பெருமான். 2

சடைமருங்கில் இளம்பிறையுந்
தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும்
எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன்
கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும்
விறல்வேந்தற் கருள்கொடுத்தான். 3

அந்நிலையே உயிர்பிரிந்த
ஆன்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும்
மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானுன்என்
றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்நின்ருல்
முடியாத பொருளுளதோ. 4

திருச்சிற்றம்பலம்

திருக்கூட்டச் சிறப்பு

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினுர்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்.

திருச்சிற்றம்பலம்

தடுத்தாட்கொண்ட புராணம்

ஆவணம் பறிக்கச் சென்ற
அளவினில் அந்த ணுளன்
காவணத் திடையே ஓடக்
கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்ருர்
அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி ணுரை
யார்தொடர்ந் தெட்ட வல்லார்.

மற்றுநீ வன்மை பேசி
வன்ருெண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்ருர்
தூமறை பாடும் வாயார்.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக

இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழந்தணர் புராணம்

ஆதியாய் நடுவுமாகி
அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வு மாகித்
தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி.

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

இயற்பகை நாயனர் புராணம்

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி

வல்லவந் தருளி என்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும்
சேவடி போற்றி என்ன.

இளையான்குடிமாறநாயனார் புராணம்

கொண்டு வந்து மனைப்புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்திலாறு
சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார்.

மெய்ப்பொருள் நாயனார் புராணம்

அரசியல் ஆயத் தார்க்கும்
அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை யெல்லாம்
விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு
பாதுகாத் துய்ப்பீர் என்று
புரவலர் மன்று ளாடும்
பூங்கழல் சிந்தை செய்தார்.

அமர்நீதி நாயனார் புராணம்

இழைத்த அன்பினில் இறைதிரு
நீற்றுமெய் யடிமை

பிழைத்தி லோம்என்றிற் பெருந்துலே
நேர்நிற்க என்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர்
இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினர்
ஏறினர் தட்டில்.

எறிபத்த நாயனர் புராணம்

ஆளுடைத் தொண்டர் செய்த
ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற
வளவனர் பெருமை தானும்
நாளுமற் றவர்க்கு நல்கும்
நம்பர்தாம் அளக்கி லன்றி
நீளும்இத் தொண்டின் நீர்மை
நினைக்கில்ஆர் அளக்க வல்லார்.

ஏனதிநாத நாயனர் புராணம்

மற்றினிநாம் போற்றுவதென்
வானேர் பிரான்அருளைப்
பற்றலர்தங் கைவாளால்
பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும்
உடன்பிரியா அன்பருளிப்
பொற்ருெடியாள் பாகனர்
பொன்னம் பலம்அணைந்தார்.

கண்ணப்ப நாயனர் புராணம்

நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்

பேணுதத் துவங்க ளென்னும்
 பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
 அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி
 நேர்படச் செல்லும் போதில்.

அவனுடைய வடிவெல்லாம்
 நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
 நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
 நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வா
 றறிநீ என் றருள்செய்வார்.

குங்குலியக்கலய நாயனர் புராணம்

இல்லத்திற் சென்று புக்கார்
 இருநிதிங் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று
 திருமனை யாரை நோக்கி
வில்லொத்த நுதலாய் இந்த
 விளைவெலாம் என்கொல் என்ன
அல்லொத்த கண்டன் எம்மான்
 அருள்தர வந்த தென்றார்.

ஆனய நாயனர் புராணம்

ஆனயர் குழலோசை
 கேட்டருளி அருட்கருணை
தானய திருவுள்ளம்
 உடையதவ வல்லியுடன்

காணுதி காரணராம்
கண்ணுதலார் விடையுகைத்து
வானூறு வந்தணைந்தார்
மதிநாறுஞ் சடைதாழ.

திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணம்

கரந்த ரும்பயன் இதுவென உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர்நா யகர்பால்
நிரந்த காதல்செய் உள்ளத்த ளாகி
நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாம்மலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பால்
சிரம்ப ணிந்தெழு பூசைநாள் தோறும்
திருவு ளங்கொளப் பெருகியே தன்றே.

சண்டேசுரநாயனர் புராணம்

பண்ணின் பயனும் நல்லிசையும்
பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனும் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ.

தங்கும் அகில யோனிகட்கும்
மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள்
எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்து பிரியாத

அங்கம் அனைத்துந் தாமுடைய
அல்ல வோநல் ஆனினங்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞான த் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை உணராதேன்.

தூயவெண் ணீறு துதைந்த பொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே.

கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களும்உட ன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரு
மின் தாழ் சடையொடு நின்ருடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்ருல்.

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கட லுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண் டெனவும்புவனமுய்ய
இருட் கடுவுண் டவர்அருளும் அகிலம் எல்லாம்
ஈன்ருள்தன் திருவருளும் எனவுங் கூடித்

தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவானவர்கோயில்சேர்ந்தார்அன்றே.
நன்மைபெரு கருள்நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனூர்
வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினுன் சிவபெருமான்.
மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றுளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.
அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியா ராணர்கள்
எல்லாம் எய்தி உண்கவென
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.
ஆதி தேவர்தந் திருவருட்
பெருமையார் அறிந்தார்
போத மாதவர் பனிமலர்ப்
பொய்கையில் மூழ்கி

மாதொர் பாகனுர் மகிழும்ஐ
யாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தனர்
உலகெலாம் வியப்ப.

பொன்மலைக்கொடி யுடன் அமர்
வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ்
சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும்
பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான்
கோயில்முன் வந்தார்.

-

காரைக்காலம்மையார் புராணம்

அம்மருங்கு நின்றயர்வார்
அருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற
விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே
அவர்அருளால் தாழ்குலார்
கைம்மருங்கு வந்திருந்த(து)
அதிமதுரக் கனியொன்று.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி

அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

திருநீலநக்க நாயனர் புராணம்

வேத உள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காதலால்அவை இரண்டுமே செய்கருத் துடையார்.

ஆங்கு வேதியில் அருதசெந் தீவலஞ் சுழிவுற்
றோங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளாற்பள்ளி கொண்டார்.

நமிநந்தியடிகள் புராணம்

தெய்வப் பெருமாள் திருவாரூர்ப்
பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத் தனைய மணிகண்டர்
வடிவே யாகிப் பெருகொளியால்
மொய்வைத் தமர்ந்த மேனியராம்
பரிசுகண்டு முடிகுவித்த
கைவைத் தஞ்சி அவனிமிசை
விழுந்து பணிந்து களிசிறந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத

சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.

எண்ணரிய சிவஞானத்
தின்னமுதங் குழைத்தருளி
உண்ணடிசில் என ஊட்ட
உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக்
கையிற்பொற் கிண்ணம்அளித்(து)
அண்ணலைஅங் கழுகைதீர்த்
தங்கணனுர் அருள்புரிந்தார்.

நச்சி இன்தமிழ் பாடிய
ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய
இறைவர்இன் அருளால்
அச்சி றப்பருள் பூதமுன்
விரைந்தகல் பீடத்(து)
உச்சி வைத்தது பசும்பொன்ஆ
யிரக்கிழி ஒன்று.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனுல்
எற்றைக்குந் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில்விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்.
மண்ணி னிற்பிறந் தார்பெறும்
பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை
அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப்
பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன்
வருகென உரைப்பார்.
காதலியைக் கைப்பற்றிக்
கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந்
திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி
நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப்
புக்கொன்றி உடனுனர்.

ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம்

காண்டலுந் தொழுதுவீழ்ந்துடன் எழுந்து
கரையில் அன்பென்பிணை உருக்க
பூண்டஐம் புலனில் புலப்படா இன்பம்
புணர்ந்துமெய் யுணர்வினில் பொங்கத்

தாண்டவம் புரியுந் தம்பிரா ளுரைத்
　　தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகையாருக் கடுத்தஅந் நிலைமை
　　விளைவையார் அளவறிந் துரைப்பா

சாக்கிய நாயனர் புராணம்

செய்வினையுஞ் செய்வானும்
　　அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
　　விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
　　அல்லவற்றுக் கில்லை என
உய்வகையார் பொருள்சிவன்என்(று)
　　அருளாலே உணர்ந்தறிந்தார்.

எந்நிலையில் நின்ருலும்
　　எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
　　மறவாமை பொருள் என்றே
துன்னியவே டந்தன்னைத்
　　துறவாதே தூயசிவந்
தன்னைமிகும் அன்பிஞல்
　　மறவாமை தலைநிற்பார்.

சிறுத்தொண்ட நாயனர் புராணம்

உள்ளநிறை கலைத்துறைகள்
　　ஒழிவின்றிப் பயின்றவற்ருல்
தெள்ளிவடித் தறிந்தபொருள்
　　சிவன்கழலிற் செறிவென்றே

கொள்ளும்உணர் வினில்முன்னே
கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும்
பயின்றுவரும் பண்புடையார்.

நறைஇதழித் திருமுடியார்
அடியாரை நாடோறும்
முறைமையினில் திருவமுது
முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால்
நியதியா கக்கொள்ளும்
துறைவழுவா வகையொழுகுந்
தூயதொழிற் றலைநின்றார்.

கழறிற்றறிவார் நாயனார் புராணம்

வாசத் திருமஞ் சனம்பள்ளித்
தாமஞ் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம்
முதலாயினவுந் திருவமுதும்
ஈசர்க் கேற்ற பரிசினால்
அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர்
பொற்பார் சிலம்பின் ஒலிஅளித்தார்.

அதிபத்த நாயனார் புராணம்

மன்னி நீடிய செங்கதி
ரவன்வழி மரபின்
தொன்மை யாம்முதற் சோழர்தம்
திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனுங் கற்பகப்
பூங்கொடி மலர்போல்

நன்மை சான்றது நாகப்பட்
டினத்திரு நகரம்.

வாயிலார் நாயனார் புராணம்

மறவாமை யான்அமைத்த
மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும்
ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம்
எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாளர்க் கன்பென்னும்
அமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

பத்தராய்ப் பணிவார் புராணம்

நின்றாலும் இருந்தாலும்
கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும்
விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம்
ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார்
தொண்டராங் குணமிக்கார்.

மங்கையர்க்கரசியார் புராணம்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்

பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றோதி யாரரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்

வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
ழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

சைவத் தோத்திர மஞ்சரி

ஆலய வழிபாடு

கடவுள் எங்கும் நிறைந்துள்ளான். நாம் புறக் கண்களால் காணும் ஒவ்வொரு பொருளிலும் அவன் வியாபகமுண்டு. எங்கும் நிறைந்திருந்தாலும் அவனைக் காணமுடியாத நம் போன்றவர்களுக்கு நம் முன்னோர்கள் பல கோயில்களைக் கட்டிஅவற்றில் கடவுளின் திருவுருவங்களை அமைத்துள்ளார்கள். பசுவின் உடம்பு முழுவதும் இரத்தம் பரவியிருக்கிறது. அது பாலாக மாறி அதன் மடிவழியாய்த்தான் நமக்குக் கிடைக்கிறது. அது போலவே ஆண்டவன் எங்கும் நிறைந்திருந்தாலும் கோயில்களிலுள்ள திருவுருவங்களின் மூலமாகத்தான் அவன் அருளைப் பெற முடியும்.

தமிழர்களாகிய நாம் நன்றிக்கும் மரியாதைக்கும் பெயர் பெற்றவர்கள். ஒருவருக்கொருவர் செய்யும் உபகாரத்திற்கும் உபசாரத்திற்கும் நன்றி செலுத்தும் நாம், நம்மைப் படைத்துக் காத்துக் கருணை காட்டும் அவனிடம் நாம் எவ்வளவு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம் என்பதை நாமே சிந்திக்க வேண்டும். கடவுள் அருளைப் பெற

வேண்டின் அவன் எழுந்தருளியுள்ள கோயில்களுக்குச் சென்று அவனை விதிப்படி வணங்கி வழிபட வேண்டும். இவ்வழிபாட்டிற்குரிய சில விதிகளைப் பெரியோர்கள் வகுத்துள்ளார்கள். இதன் விரிவை யாழ்ப்பாணம். திரு. ஆறுமுக நாவலர் ஐயா அவர்கள் இயற்றியுள்ள நூல்களில் கண்டு கொள்க.

கோயிலுக்குச் செல்லும் முறை :

காலையில் எழுந்து நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு நெற்றியிலும், உடம்பிலும் திருநீறு தரித்துக்கொண்டு, அவன் கண்மணி எனப்படும் உருத்திராக்க மாலையையும் அணிந்து கொண்டு அமைதியாகவும், சுத்தமாகவும், நல்ல மனதுடனும் சென்று அவனை விதிப்படி வழிபடல் வேண்டும்.

வழிபாட்டு முறை :

ஆலயத்தின் வாயிலிலுள்ள கோபுரத்தை முதற்கண் வணங்கவேண்டும். பிறகு கொடி மரத்தருகில் (துவஜஸ்தம்பம்) கீழே விழுந்து எட்டுறுப்பு நிலந் தோய வணங்கி நந்திதேவரிடம் விடைபெற்றுக் கொண்டு ஆலயத்தை ஒருமுறை வலம் வரவேண்டும் பிறகு கோயிலுள்ளே சென்று விநாயகப்பெருமானை வணங்க வேண்டும். இவர் சந்நிதியில் மட்டும்தான் நம் தலையில் இருகைகளால் குட்டிக்கொண்டு தோப்புக் கரணங்கள் போட்டு வணங்குதல் வேண்டும். பிறகு இறைவன் சந்நிதியில் நின்று பன்னிருதிரு முறைப்பாடல்களைப் பாடி வணங்க வேண்டும். பின் அம்பிகையை வணங்கி யவர்க்குரிய பாடல்களால் அவரைத் துதிக்கவேண்டும். பிறகு ஆலயத்தை

இரண்டாம் முறையாக வலம்வர வேண்டும். வரும் போது நடராஜப்பெருமான், தக்ஷிணாமூர்த்தி, முருகப் பெருமான், நால்வர், அறுபத்துமூவர் முதலிய மூர்த்தி களை அவரவர்க்குரிய பாடல்களால் துதி செய்து வணங்கவேண்டும். பிறகு ஆலயத்தை மூன்றும் முறையாக வலம் வரும்போது சண்டேசுவரப்பெரு மானை வணங்கவேண்டும். இவரை வணங்கும்முன் நாம் நம் கைகளை மெல்லத்தட்டி அவரைச் சிவத்யா னத்திருப்பவரை எழுப்பித் துதிசெய்து வணங்கிச் சிவாலய தரிசன பலனைத் தருமாறு கேட்டுப் பெற வேண்டும். கடைசியாகக் கொடிமரத்தருகில் எட்டு றுப்பு நிலந்தோய வணங்கி எழுந்து பின் உட்கார்ந்து ஆண்டவன் நாம மந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை (அவரவர் ஆசாரியர் உபதேசித்தபடி) விதிப்படி எண்ணவேண்டும். ஆலயத்தினுள் வேறு எந்த சந்நிதி களிலும் எட்டுறுப்பு நிலந்தோய வணங்குதல் கூடாது. பெரியோர்களால் கையாளப்பட்டு வரும் முறையும் இது.

கோயிலில் செய்யத் தகாதவை :

1. கோயிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
2. வீண் வார்த்தைகள் பேசக்கூடாது.
3. தலைவிரித்துக் கொண்டு போகக் கூடாது.
4. தாம்பூலம் தரித்துக் கொண்டு போகலாகாது.
5. சட்டை யணிந்து கொண்டு செல்லக் கூடாது.
6. ஒருவர் மேல்ஒருவர் இடித்துக் கொள்ளலாகாது.
7. மூர்த்தங்களின்சமீபத்தில் (திருவடிக் கருகில்) கர்ப்பூரம் ஏற்றுதல் கூடாது.
8. மூர்த்தங்களைக் கைகளால் தொடுதல் கூடாது.

9. கோயிலிலுள்ள விளக்குகளைக் கைகளா தூண்டக் கூடாது.

10. தூண்டும்போது கையில் பட்ட எண்ணெய்ப் பசையைச் சுவற்றில் பூசக் கூடாது.

11. சுவாமிக்கு நிவேதனம் செய்யும் போது. பார்த்தல் கூடாது.

12. சுவாமிக்குத் திருமஞ்சனம் ஆகும்போது (விபூதி, சந்தனம் தவிர) அவரைப் பார்த்தல் கூடாது.

13. கோயில் பிராகாரங்களில் எச்சில் துப்பலாகாது

14. ஆலய மதிலோரங்களில் மல ஜலம் எச்சல் கழித்தல் கூடாது.

15. கால்களில் செருப்பு அணிந்து கொண்டு உள்ளே செல்லக் கூடாது.

கோயிலில் அநுட்டிக்க வேண்டிய முறை :

1. தூய உடம்புடன் உள் சென்று தூய மனதுடன் நல்ல அருளாளர் அருளிச் செய்த பாடல்களினுல் பெருமானை வணங்க வேண்டும்.

2. சுவாமிக்குச் சாத்த மலர்மாலைகளைத் தொடுத்துக் கொடுக்க வேண்டும்.

3. தூபமிட வேண்டும். தீபம் ஏற்றல வேண்டும். (நெய் அல்லது இலுப்பெண்ணெயால் ஏற்றுவது சிறந்த முறை). இதனுல் அன்பர்கள் வெளிவிடும் விஷக்காற்று (Carbon di oxide பிராணவாயுவாக Oxygen) ஆக மாறுகிறது. விளக்கேற்றிப் புறவிருளைப் போக்கிஞல் ஆண்டவன் நம் அகவிருளைப் போக்கி ஞானத்தை அருள்கிருன். என்பது தத்துவம். பிரமாணம் “விளக்கிட்டார் பேறு சொல்லில் மெய்ந்நெறி ஞான மாகும்” என்பது அப்பர் அருள்வாக்கு.

4. சந்நிதிகளில் ஆண்கள் ஒரு பக்கமாகவும் பெண்கள் ஒருபக்கமாகவும் நின்று அமைதியாக

ஆண்டவனை வணங்கவேண்டும். நல்ல துதிப்பாடல்களை ஓத வேண்டும். பிரமாணம் :

“ அளப்பில கீதஞ் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளுமாறே ”. (அப்பர்)

5. வரிசையாக நின்று வணங்க வேண்டும். சுவாமிக்கு நேரே நின்றுகொண்டு பின்னுள்ளவர்களுக்கு நம் முதுகைக் காட்டிக்கொண்டு வணங்குதல் கூடாது. இம்மாதிரிதான் வழி படவேண்டுமென்று மணிவாசகம் பின் வருமாறு முழங்குகிறது :

“ இன்னிசை வீணையர் யாழினரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்பின ரொருபால் ”

குறிப்பு: அன்பர்கள் மேலே சொன்ன விதி விலக்குகளைக் கூடுமானவரைத் தம்மாலியன்றவரை அநுட்டித்தால் போதும்.

உ



விநாயகர்



முருகப்பெருமான்

உ
சிவமயம்

விநாயகர் தோத்திரப் பாடல்கள்

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.

—மெய்கண்ட தேவர்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

—உமாபதிசிவாசாரிய சுவாமிகள்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

—பரஞ்சோதி முனிவர்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

—சச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்

பண்ணியம் ஏந்துங் கரந்தனக் காக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி அரதனக் கலசம்
வியன்கரம் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணில் ஆணவவெங் கரிபிணித் தடக்குக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்
சகாயனை அகந்தழிஇக் களிப்பாம்.

—சச்சியப்ப முனிவர்

இடர்கண் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ்பதியு முறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிதன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

—ஸ்ரீமாதவச் சிவஞான சுவாமிகள்

———

உ

கணபதி துணை

ஔவையார் அருளிச்செய்த

விநாயகரகவல்

சீதக் கபளச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புத நின்ற கற்பகக் களிறே
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துக்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறு தாரத் தங்குச நிலையும்
பேறு நிறுத்துப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னுவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட விரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேத்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா வானந்தம் மளித்
தல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

———

உ

1. திருமுருகாற்றுப்படை

நக்கீரர்தேவர் அருளிய

திருப்பரங்குன்றம்

திருச்சிற்றம்பலம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பின்
கிண்கிணி கவைஇய ஒண்செம் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு

பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கரும்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறும்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதுஇணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வேன்றுஅடு விறற்கொடி
வாழிய பெரிதுஎன்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்

குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வேன்றுஅடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யாநல் இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம் மலிமறுகில் கூடற் குடவயின்
இரும்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்துஉறைதலும்உரியன்;அதாஅன்று,

திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்

படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகைஅமை
பொலம் குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவுஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே
மா இருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள்போலத் திசைவிளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே,ஒரு
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் [முகம்
மடவரல் வள்ளியொடுநகைஅமர்ந்தன்றேஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசை
அங்குசம் கடாவ ஒருகை;இருகை [இயதுஒருகை
ஐயி ருவட்டமொடு எஃகுவலம் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட;ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம் தலைக்கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெல்ல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேரலும் நிலைஇயபண்பே;அதாஅன்று,

திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடும்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்யாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மெல்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்றி இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடிஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையாமுக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறும் ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவுஇல் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளிஇடைத்
தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்; அதாஅன்று,

திருஏரகம் (சுவாமிமலை)

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்; அதாஅன்று,

குன்றுதோருடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு

வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலேஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலைஉடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்துஅன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே,

அதாஅன்று,

பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ

ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடும் மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுஉரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெரும்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலஉடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தஆறே

ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந் துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்கு வில்தானைத் தலைவ
மாலை மார்ப நூல் அறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றுக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டு அமர் கடந்தநின் வென்று ஆடுஅகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு

புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்துஎன
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழிஅளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்கும்மதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூஉடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறல் சிதைய நன் பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துஉடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற

மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடா அடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழம்முதிர் சோலை மலைகிழ வோனே.

தனி வெண்பாக்கள்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்உள்ளத் துறை. 1

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர்தீர்த்ததுவும்—
இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும்கற்பொதும்பில்காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா—
முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான்பின்செல்லேன்—
பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே. 5

அஞ்சுகமும் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—
நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியேநின்னுடைய்தண்டைக்கால்எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற்றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலைதீர்த்தருளி
தான்நினைத்த எல்லாம் தரும். 10

திருச்சிற்றம்பலம்

———

உ

குமரகுருபர சுவாமிகள் அருளிய

கந்தர் கலிவெண்பா

பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு
நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய்—ஆதிநடு
அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியும் குணமொரு கோலமுமற்று எங்கும்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்கு
அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய்த்—தனாதருளின்
பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்—எஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்—தாரணியில்
இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல்—முந்தும்
கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரணம்
ஆகவரும் இச்சை அறிவியற்ற லால்இலய
போக அதிகாரப் பொருளாகி—ஏகத்து
உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்—இருள்மலத்துள்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுறவே கடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

ஆறத்துவாவும் அண்டத்தார்ந்தஅத்து வாக்களும்முற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பில் கூட்டுவித்து—மாறிவரும்

ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றுயிரத்துள்—தீர்வரிய

கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடமும்போல்
சென்மித்து உழலத் திரோதித்து—வெங்கிரய

சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும்

தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்

விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்து—அருள்பெருகு

சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து
ஆலோகம் தன்னை அகற்றுவித்து—நால்வகையாம்

சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப்—பெத்த

மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி—உலவாது

அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்

கருணை திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்றுஓர் திருப்பேர்கொண்டு—திருநோக்கால்

ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும்—பாழாக

ஆணவ மான படலம் கிழித்துஅறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்

அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி—முடியாது

தேக்குபர மானந்தத் தெள்ளமுதம் ஆகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்

வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்துலவா இன்பம்—மருவுவித்து

கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் ·தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல்—
மின்னிடத்துப்

பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த

கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்துள்நின்று
ஒருமலத்தார்க்கு இன்பம் உதவிப்—பெருகியெழு

மூன்றவத்தை யும்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்—தோன்றவரும்

யானெனதென்று அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானம்

திருஉருவா இச்சை செயலறிவு கண்ணு
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே

சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவம்

தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்த பிறைத்

துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும்—விண்ட

பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலர் ஈராறும்—பரிதி

பலவும் எழுந்துசுடர் பாலித்தால் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும்—வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்—விடுத்தகலாப்
பாச இருள்துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்—தாகமுடன்
வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்—கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்
தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைத்தணைந்த மென்கரமும்—ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
வைத்த காதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்—மொய்த்த
சிறுதொடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசம ரங்குசம்சேர் கையும்—தெறுபோர்
அதிர்கேடகம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்—முதிராத

கும்பமுலைச் செவ்வாய்க்கொடியிடையார்வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும்—பைம்பொன்

புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும்—திருவரையும்

நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்—சோதி

இளம்பரிதி நூரு யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும்—உளந்தனில்கண்டு

ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே—ஓதியஐந்து

ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய்
ஐந்தொழிற்கும்

நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய

மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காப்—பந்தனையால்

ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த

கலையே அவயமாக் காட்டும்அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்—பலகோடி

அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்

ஆவிப் புலனுக்கு அறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே—மேவ

வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே—பருவத்து

அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்

பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானம்
தேரின்ப நல்கும் திருநாடும்—பாரின்பம்
எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணி நகரும்—தொல்லுலகில்
ஈறு முதலுமகன்று எங்குநிறைந்து ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும்—ஏறுமதம்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினுல் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்
ஐந்தொழிலும் ஓவாதளித் துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும்
நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து
வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்ருேனே – தேசுதிகழ்
பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி—ஆங்கொருநாள்
வெந்தகுவர்க்கு ஆற்ருத விண்ணேர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமும்—தந்து
திருமுகங்கள் ஆருகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப—விரிபுவனம்
எங்கும் பரக்க இமையோர்கண்டு அஞ்சுதலும்
பொங்கு தழல்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண்
எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்-அடுத்ததொரு

பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்று
அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள்
சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருஉருவாய்-முன்னர்
அறுமீன் முலையுண்டு அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவல்
கன்னியொடும் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும்
—தன்னிரண்டு
கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய
முகத்தில் அணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்துச்—சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன்கரத்தில் அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே—கிள்ளைமொழி
மங்கை சிலம்பின் மணிஒன்பதில் தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு—நெருப்பிலுதித்து
அங்கண் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கண்கடா அதனைச் சென்றுகொணர்ந்து
—எங்கோன்
விடுக்குதி என்றுய்ப்ப அதன் மீதிவர்ந்து எண்டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா—படைப்போன்
அகந்தை உரைப்பமறை யாதி எழுத்தொன்று
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்

சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே—மட்டவிழும்

பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே—கொன்னெடுவேல்

தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்த்

தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்

கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்குஇமையோர்வாழச்—சயேந்திரனும்

சூரனைச்சோ தித்துவரு கென்றுதடம் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே—காரவுணன்

வானவரை விட்டு வணங்காமை யால்கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப்—பானு

பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த

வாரி தனில்புதிய மாவாய்க்கி டந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன்

அங்கம்இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்—
அங்கவற்றுள்

சீறும்அரவைப் பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே—மாறிவரு

சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்

குறைமுடித்து விண்ணந் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்டளித்த தேவே
—மறைமுடிவாம்

சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றை மணம் செய்தோனே—பொய்விரவு

காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து—மேன்மைபெறத்

தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—உள்ளம்உவந்து

ஆறு திருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும்அவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்

கந்திப் பொதும்பரெழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்தில் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்

பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமும்தீ நீரும் பொருபடையும்—தீதகலா

வெவ்விடமும் துட்ட மிருகமுத லாம்எவையும்
எவ்விடம்வந்து எம்மை எதிர்ந்தாலும்—அவ்விடத்தில்

பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்

திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணம்

சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்

எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்

ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும்இயல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து—ஒழுக்கமுடன்

இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்து

ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்

உ

அருணகிரிநாதர் — திருப்புகழ்

திருப்பரங்குன்றம் (முதலாவது படைவீடு)

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கில் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றிற் பெருமாளே.

திருச்செந்தூர் (இரண்டாவது படைவீடு)

பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானர்
படையம படையென அந்திக் குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே
மறுகிடு மருளணை யின்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
ஜெயஜெய ஹரஹர செந்திற் கந்தப் பெருமாளே

திருஆவினன்குடி (மூன்ருவது படைவீடு)

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே

உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

திருஏரகம்—(சுவாமிமலை) (நான்காவது படைவீடு)

காமியத் தழுந்தி யிளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏவவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

குன்றுதோருடல்—(ஐந்தாவது படைவீடு)

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனூடே
நெடுநாளு முழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணித் துதியாமல்
தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்திய மாகித் தடுமாறித்
தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திட வேநின் அருள்தாராய்

கலியாண சுபுத்திர னுகை
குறமாது தனக்குவி நோத
கவினுரு புயத்திலு லாவி விளையாடிக்
களிகூரு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்பட வேவை
கடனுகு மிதுக்கன மாகு முருகோனே
பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே
பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாதப் பெருமாளே.

பழமுதிர்சோலை—(ஆருவது படைவீடு)

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே.

வைத்தீசுவரன் கோயில்

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே

வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதப் பெருமாளே.

க்ஷேத்திரக் கோவை

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூரமம்பெறு சிவகாசி

கொங்கு லாவிய ராமே சுரந்தனி
வந்து பூசைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி தனில்வாழ்வே

செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்

செஞ்சொ லேரக மாவா வினன்குடி
குன்று தோருடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேவிய சோணாடு வஞ்சியில் வருதேவே

கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா

கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி மணிமார்பா

எம்பிரானொடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபொ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறு மேர்பாக நின்றுறு துதியோதும்

இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தொறு பெருமாளே.

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

பகழிக்கூத்தர்

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வம்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா வென்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன்அப்
பாவா வாவென் றுணைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

கந்தபுராணம்

ஸ்ரீ கச்சியப்ப சிவசாரிய சுவாமிகள்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.

உ

சிவமயம்

அம்மையார் தோத்திரப் பாடல்கள்

பரஞ்சோதிமுனிவர்

சுரும்பு முரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப்புகலியர்கோனமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ்

குமரகுருபரர்

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்(து)
எடுக்குந் தொழும்பர் உளக் கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பின் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழகு

ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலேயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

அபிராமி அந்தாதி

அபிராமி பட்டர்

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீர தியும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

தனந்தரும் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே.

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே ஒழுக வடிமைகொண் டாயினி யாவெருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

நடராஜப் பெருமான்

சீராருஞ் சதுமறையுந் தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரும் மணிமன்றுள் எடுத்ததிரு அடிபோற்றி.

சிவகாம சுந்தரி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெய்த்
திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்
கழல்போற்றி
ஆழிமிசைக்கன் மிதப்பில்அணைந்தபிரான்அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

திருத்தொண்டர் - சேக்கிழார் சுவாமி

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார்
பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடை யமர்ந்து நான்மறையா(று)
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

சண்டேசுர நாயனுர்

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலங் தக்கனுர் அகத்து நாணிய
புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலங் தண்டிதன் அடிகள்போற்றுவாம்.

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
　　அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
　　குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
　　யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
　　வாழ்கசீர் அடியார் எல்லாம்.

முற்றிற்று

உ
சிவமயம்

பாட்டு முதற்குறிப் பகராதி.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
xx	21	வாழ்வான்	வாழ்பவன்
1	15	ஒரமணர்	ஓரமணர்
1	16	ஒது	ஓது
4	2	புன லன்னலன்	புனலன்னனலன்
17	26	பாச்சிசிலாச் [சிராம	பாச்சிலாச்சிராம
22	16	நிருத்த கீதர்	நிருத்தர் கீதர்
,,	19	கூடியோர்	கூட்டியோர்
23	22	நெடுங	நெடுங்
26	19	இலையினுற்	இலையினர்
26	20	இருக்கையை	இருக்கையா
27	12	விடுபெற்	வீடுபெற்
32	23	சிற்றெமை	கிற்றெமை
34	10	பந்தன்	பந்தன
36	11	மூப்பொழுது	முப்பொழுது
37	4	பெருமையும	பெருமையும்
40	25	வுரு	ஒரு
44	2	பூர்ந்து	தீர்ந்து
45	20	வுகந்தனேயே	வுகந்ததே
48	12	திருசிற்றம்பலம்	திருச்சிற்றம்பலம்
58	3	வெய்யது	மெய்யது
,,	11	நிலரவும்	நிலாவும்
,,	16	வேண்	வேண்டு
62	21	செங்கல்	செங்நெல்
,,	21	நன்மைக்குங்	நன்மையாகுங்
64	8	வாரை	வரை
65	24	ஏத்தார்	ஏத்தாச்
70	10	வயாரப்	வாயாரப்
72	10	டிவர்க	டிவரா
83	கடைசிவரி	ஓதப்பெற்றது	சம்பந்த சரணலய [ரால் ஓதப்பெற்றது
85	2	ககப்படா	கப்படா
104	13	வலங்சுழி	வலஞ்சுழி
105	19	மாயக்	மாடக்
111	4	சிவசாரிய	சிவாசாரிய

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
113	26	(விடுபட்டது)	நலந்தீங்கிலுமுன் னை மறந்தறியேன் உன்னுமமென்னுவில் மறந்தறியேன்
117	21	திண்ணன்	திண்ணென்
125	26	சொலலீரே	சொல்லீரே
163	28	அதனுள்ளணைந்து	அதனுள்ளணைந்து
,,	,,	அம்பலத்துச்	அம்பலத்துத்
167	7	ளெப்பொழுதுப்	ளெப்பொழுதும்
168	7	திகெழாளியை	திகழொளியை
178	18	கடல்புலட	கடல்புடை
182	24	செலவனை	செல்வனை
189	24	வல்விளைநோய்	வல்வினைநோய்
195	13	பெந்தகை	பெருந்தகை
198	5	செப்பாராகில்	பேசாராகில்
201	19	(-4ம்)	(6-ம்)
202	15	பின்னுய்	பிரானுய்
210	14	தோற்ருதன	தேற்ருதன
212	7	நம்பியாநர	நம்பியாரூர
212	19	ருெங்கி	நெருங்கி
212	18	சிரித்த்	சிரித்த
213	11	பிததா பிறை	பித்தா பிறை
213	17	அணிந்தென்	அணிந்ததென்
213	21	திசைகள்	திரைகள்
219	21	விளிடத்து	வினிடத்து
236	9	மாநெதியந்	மாநிதியந்
,,	11	கிறியுமாற்	கிறியும்மாற்
247	26	கம்பளை	கம்பனை
254	2	திருக்கூடலை யாற்றுர்	திருக்கூடலை யாற்றூர்
256	66	திருவீனுரை	திருவினுரை
257	16	சின்ற	கின்ற
259	4	குளத்திை	குளத்திடை
261	24	கண்ளை	கண்ணை
263	11	வாரிக்கோ	விரிக்கோ
264	24	டண்டஞ்சேன்	கண்டஞ்சேன்
272	22	ஒங்கார	ஓங்கார
273	24	ஒராதா	ஓராதா
274	18	பனிந்து	பணிந்து

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
276	27	பிரிதொன்றில்லை	பிறிதொன்றில்லை
280	22	ஒத	ஓத
283	20	பெருந்துறையான	பெருந்துறையான்
285	13	திரோதன	திரோதான
292	11	வேண்ணீற்றாய்	வெண்ணீற்றாய்
297	18	திருமகன்	மருமகன்
300	10	வாயமிக	வாய்மிக
300	19	அனிவள	அளிவள
301	24	வில்லா	வில்ல
309	11	போர்ந்து	போந்து
310	23	பாலனைய	பாலணை
311	9	விண்ணோர்	விண்ணோர்
312	20	பையிற்	பையிற்
314	8	பண்ணியார்	பண்ணியர்
318	10	அந்தனளன்	அந்தணளன்
323	13	பெருகியே	பெருகிய
326	20	தாழ்குலார்	தாழ்குழலார்
330	4	துரைப்ப	துரைப்பார்
333	16	ழ்க	வீழ்க
337	21	ஏற்றல	ஏற்றல்
340	5	சச்சியப்ப	கச்சியப்ப
340	11	தட்க்குக்	தடக்கக்
340	14	சச்சியப்ப	கச்சியப்ப
344	2	அருளிய	அருளியது
344	7	ஓ அற	ஓ அற
345	14	தேந்கமழ்	தேங்கமழ்
345	28	கழல் விழி	சுழல் விழி
347	10	சேண்ளிளங்கு	சேண்விளங்கு
349	16	கொடிஞ்சிறை	கொடுஞ்சிறை
352	11	உருவிள்	உருவின்
352	கடைசி	அறிந்தெஆறே	அறிந்தஆறே
353	17	பொரும் செல்வ	பெரும் சேல்வ
356	7	அஞ்சுகமும்	அஞ்சு முகம்
356	14	நின்னுடைய்	நின்னுடைய
357	10	குணமொரு	குணமுமொரு
360	21	குழைத்தணைந்த	குழைந்தணைந்த
361	16	தொக்காப்	தொக்காகப்
361	19	அவயமாக்	அவயவமாக்
363	15	மகிழ்பூத்து	மகிழ்பூத்தளித்து

அமுர்தா அச்சகம், சென்னை-24.